# இலக்கிய விருந்து

கட்டுரைகள்

UNIVERSITY
31 MAY 1957
MADRAS

ஆசிரியர் :

V. R. M. செட்டியார் B. A

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

*

STAR PUBLICATIONS

NO., 5. NEW MARKET ST.,
KARAIKUDI., (RAMNAD DT.)

*Univ. Grants Commission.*

FIRST EDITION — Sep. 1954

COPYRIGHT

H53
O31:6
J4

Price Rs. 2/-

PRINTED FOR STAR PUBLICATIONS, KĀRAIKUDI
AT THE SOUTH INDIA PRESS, KARAIKUDI

# முன்னுரை

V. R. M. செட்டியார் B. A

நான் இதற்குமுன் எழுதி வெளியிட்டிருக்கும் கட்டுரைக்கரும்பை'ப்போல், சில நயமான கட்டுரைகளைக் கொண்டது, இந்த இலக்கிய விருந்து.

கட்டுரையின் தனித்தன்மை என்ன,–என்பதை முதல் கட்டுரையிலே விளக்கியிருக்கிறேன். தெளிந்த மனம், தெளிந்த அனுபவத்தோடு தெளிந்த நடையிலே எழுதுவதுதான், உண்மையான கட்டுரை.

கட்டுரை நிபுணர் பெர்னட்ஷாவை, அடுத்த கட்டுரை உறுதியாக எடுத்துக்காட்டுகிறது.

மூன்றாவது கட்டுரை–'பெண்மை'யும், ஐந்தாவது கட்டுரை 'வால்ட் விட்மனும், ஜில்கிரைஸ்டும்' –காதல் கடிதங்கள்: இவ்விரண்டு கட்டுரைகளும் பெண்மையின் உண்மையை விரிவாகச் சித்திரிப்பதுடன், காதலின் அகண்ட எழிலோவியத்தையும் வற்புறுத்துகின்றன.

"கல்வியில் புதுவழி கண்டவர்–கவிஞர் ரவீந்திரநாத தாகூர்": இது எனது ரேடியோ சொற்பொழிவு; திருச்சி வானொலி நிலையத்தாரின் அனுமதி பெற்று, இதில் இடம் பெற்றிருக்கிறது. தாகூரின் கல்வி முறை, இயற்கையை

ஒட்டி விரிந்து வளர்ந்து முன்னேறுவது; தாய் மொழியைப் போற்றி வளர்ப்பது; இதயத்துக்கு இன்பம் தருவது; தேசம் முன்னேற்றமடையத் துணைசெய்வது; வேகமான வளர்ச்சி கொண்டது; குறைந்த செலவில், மன நிறைவை யும், மன அமைதியையும், குதூகலத்தையும் அடைவது.

ஆங்கில பேகன்,

பிரெஞ்சு மாந்தேன்,

ஜெர்மன் நிட்ஷீ,–

மூன்று மேதைகளும், தங்கள் அரிய சிந்தனைச் செல்வத் தால், அனுபவமுத்திரையுடன், தங்கள் கட்டுரைகளை அலங்கரிக்கிறார்கள்.

"கவிதையும் உறக்கமும்–கீட்ஸ்": இது ஒரு நுட்பமான கட்டுரை. கவிதையும், உறக்கமும், கீட்ஸின் அகக்கண்ணுக்கும் புறக்கண்ணுக்கும் இன்பம் தருகின் றன; கீட்ஸின் பாஷையிலே, வசன வெள்ளமாக, கவிஞ னின் சிந்தனைகளையே நான் தமிழில் வழங்கியிருக்கிறேன். பெண்மையைப்பற்றி, கீட்ஸ் கண்ட உண்மைகள் அனந்தம்.

ஜனநாயகக்கவி வால்ட் விட்மன், கவிதையின் முழு எழிலையும், காதலின் முழு வெறியையும், ஆண்–பெண் உரிமைகள் அனைத்தையும் அனுபவ வாயிலாகக் கண்ட வன்: எதிலும் மன உறுதியோடு, சுதந்திரத்தை அவாவி நிற்கின்றான், அமெரிக்க கவிஞன்.

'சொல்வன்மை' யைப்பற்றி, வால்ட் விட்மன் ஆணித்தரமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறன்; குறளாசிரியர் சொல்வதுபோல,

**"நாநல மென்னும் நலனுடைமை யந்நலம்**
**யாநலத் துள்ளதூஉ மன்று"**

"அழகும் உண்மையும்–தாகூர், எமர்ஸன் கருத்தோவியம்"– இது ஒரு சிறந்த கட்டுரை. இரண்டு இலக்கிய மேதைகள் கண்டு அனுபவித்த நுட்பமான உண்மைகள், ஆழ்ந்த ஒவிய நடையிலே மின்னலிடுகின்றன.

காரைக்குடி
25–9–54

**V. R. M. செட்டியார்**
ஸ்டார் பிரசுரம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | பக்கம் |
| 1 | கட்டுரை என்றால் என்ன ? | 9 |
| 2 | கட்டுரை மேதை பெர்னார்ட்ஷா | 15 |
| 3 | பெண்மை | 23 |
| 4 | கல்வியில் புதுவழி கண்டவர் - தாகூர் | 40 |
| 5 | வால்ட் விட்மனும் அவனது இலக்கியக் காதலி ஆன் ஜில்கிரைஸ்ட்டும் - (காதல் கடிதங்கள்) | 48 |
| 6 | பேகன் சிந்தனைகள் | 63 |
| 7 | மாந்தேன் சிந்தனைகள் | 76 |
| 8 | நீட்ஷியின் சிந்தனைகள் | 81 |
| 9 | கவிதையும் உறக்கமும் - கீட்ஸ் | 90 |
| 10 | கவிதையின் சிருஷ்டி எழில் - வால்ட் விட்மன் | 107 |
| 11 | சொல்வன்மையும் வால்ட் விட்மனும் | 126 |
| 12 | அழகும் உண்மையும்:- தாகூர் - எமர்ஸன் கருத்தோவியம் | 136 |

## சரஸ்வதி துதி

" நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம்
அடைக்கலமே

- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

"மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக் கவிதை நூலொன்றும்,
தீதறு செந்தேன் மதுவும்,
தீங்கனியும் - பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல் -
ஏதும் இனிக் கவலை யில்லை;
இதுவன்றோ பரமபதம்"

- உமர்கயாம் (யோகியார்)

UNI... MADURAI

# கட்டுரை என்றால் என்ன?

கட்டி விடுவதெல்லாம் கட்டுரையா? சுண்டி விடுவதெல்லாம் நாணயமா?

வாய்க்கு வந்தபடி எல்லாம் வாந்தி எடுப்பது கட்டுரை அல்லவே!

கட்டுரையை நல்ல முறையில் எழுதுவதற்கு, மனம் பக்குவமடைந்திருக்க வேண்டும் தானே சிந்தித்து ஐம்புலன்களையும அருமையாய்ப் பயன் படுத்தி, வெளியே நடைபெறும நிகழ்ச்சிகளையும் இதய பூர்வமாக அனுபவித்து, ஆசிரியன் தன் மனமகிழ்ச்சியின் விரிவாகக் கட்டுரை எழுதவேண்டும். கண்ணால் பார்க்காமல், காதால் கேட்காமல், கையால் தொடாமல், எதையும ருசி பார்க்காமல், சொந்த நேர் அனுபவமில்லாமல் எழுதப்படும் கட்டுரை, கட்டுரையாகாது. தான் கண்ட காட்சியைத் தானே அனுபவித்து, பிறரும அதை அந்த அளவுக்கு அனுபவிக்கும்படி அருமையாக எழுதப் படும கட்டுரைதான், கட்டுரையாகும்; ஆசிரியரின் சொந்த நடை, சிறந்த உணர்ச்சி வெளியீடாக உத்சாகச் சிலிர்ப்புடன உதயமாக வேண்டும். யாருடைய நடையையும் கருத்தையும் காப்பியடித்து எழுதுவது கட்ரையாகாது.

விஞ்ஞான ஆராய்ச்சியாகவோ, வேதாந்த விரிவுரையாகவோ எழுதுவதெல்லாம், கட்டுரையாகாது. வாழ்க்கையைத் தொட்டு, சில சந்தர்ப் பங்களைத் தான கண்டவாறு நுட்பமாக, ஹாஸ்யச் சுவையுடன தமாஷாக எழுதுவதுதான் கட்டுரை. ஆசிரியர், தானே தன்னுடைய அனுபவத்துடன்

பேசிப் புலம்புவது போல (Soliloquy) கட்டுரை எழுதவேண்டும.

கட்டுரை ஆசிரியர், வாசகனின் நண்பனாக மாறிவிடவேண்டும: இருவர் உள்ளங்களும், இனப வெறியில் கும்மாளியிடவேண்டும். கட்டுரை எதைப் பற்றியும எழுதலாம். எறுபபாலும், எலியாலு லும, துரும்பாலும், துப்பாக்கியாலும, இயற் கையாலும, இறுமாப்பாலும், கட்டுரையில் இடமுண்டு. கடவுள முதல் காதலின் அந்தரங்கம் வரை, கடடுரையில் விசேஷ இடம உண்டு; ஆனால் எழுதும் முறையில்தான், கஷ்டம் இருக்கிறது. தான் அனுபவித்தபடி எழுதும ஆற்றல் சிலருக்குத் தான் உண்டு. கட்டுரையின் ஆசிரியரின் மனக் கண்ணாடியாக, வசன நடை சிருஷ்டி எழிலோடு அமைய வேண்டுமே! அதற்கு என்ன செய்வது?

சிருஷ்டி எழிலோடு எழுதும் ஆசிரியர்கள் தான், கட்டுரைகளை கையாள முடியும்? தொட்ட இடமெல் லாம இன்பம் ஊட்டக்கூடிய நடையிலல்லவா கட்டுரை உதயமாக வேண்டும். இதைத் தொட எல்லோராலும் முடியுமா? முடியவே முடியாது

இலக்கிய இன்பம் தரக்கூடிய ஆற்றல் எல்லோ ரிடமும உண்டா? அகண்ட மன மேதா விலாசமும், வாழ்க்கையின் நுட்பத்தை நுட்பமான கண்கொண்டு பகுத்தறியும ஆற்றலும, எதையும் உத்சாகத்துடன வரவேற்கும ஆற்றலும், ஹாஸ்யச் சுவையுடன் கண்டதைச் சித்தரிக்கும் ஆற்றலும் வேண்டுமல் லவா? அதனால் ஒரு சிலர்தான் கட்டுரைத் துறை யில் சமாளிக்க முடியும்.

மேல்நாட்டு கட்டுரையாளர்களில் மாந்தேன், பேகன, அடிஸன், ஹாஸ்லிட், லீஹண்டு, லாமப், லிண்டு, செஸ்டர்டன், போன்றவர்கள் தான் மேதை களாக விளங்கி இருக்கிறார்கள். லாம்ப், லிண்டு, இருவர்களும் அருமையாக, அகண்ட சக்தியுடன்,

கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். வாழ்க்கை வெறி, சிந்தனை வெறி, பாஷை வெறி, நடை வெறி, ஹாஸ்ய வெறி-எல்லாம் கலந்து புரண்டோடுகின்றன.

திரு. ஆர் கே. நாராயணன், ஹிந்துவில் எழுதும் ஆங்கிலக் கட்டுரைகள், அருமையாக இருக்கின்றன.

நமது தமிழ் எழுத்தாளர்களிலே, திரு. வி. க., திரு மு. வ., திரு. அண்ணா, 'கல்கி', 'சுகி' திரு. சோம. லெ., எழுதும் அபூர்வமான கட்டுரைகளிலே, கட்டுரையின் சிறந்த தன்மை மின்னலிடுகிறது. 'சுகி'யின் "கற்பகக் கனிகள்" "சாம்பார் சாதம்" இரண்டும் அருமையான கட்டுரைக் கோவை. கட்டுரை, கரும்புச் சாருகக் காட்சியளிக்கிறது.

உதாரணமாக: 'சுகி'யின் 'அருவி'யைப் பற்றிய கட்டுரையில்:

"சீசன் என்றதும் என் மனம் குதித்தோடிய காரணம, சென்ற ஒரு வருஷமாக நான் குழாயடியில் குளிப்பது என்ருல், அரைக்கால் இஞ்சிக் குழாயடியில் குந்திக் கொண்டு தண்ணீர் எனப்படும் திரவ பதார்த்தத்தால் உடம்பை நனைக்கிற ஒரு சடங்கு; பட்டணவாசிக்கு அது ஆகாச கங்கை. இப்படி உடம்பில் தண்ணீர் தேய்த்துக் கொள்வதை, ஸ்நானம், குளிப்பது, புனல் விளையாட்டு என்று சொல்லக்கூடாது.

"குளிக்கிறது, நீராடுகிறது, ஸ்நானம் செய்கிறது, முழுக்குப் போடுகிறது என்ருல்,- ஆற்றையே இரண்டாகக் கலக்கி குளிக்க வேண்டும்; முங்கி, மூழ்கி, கும்மாளம போடவேண்டும். அப்படி குளிப்பதால் உண்டாகும் ஆனந்தத்தைக் கேவலம் வசனத்தில் சொல்ல முடியாது" இந்த அருவிக் கட்டுரை, அருவி போலக் சுழன்ருேடுகிறது; ஹாஸ்யம ததும்பி மினனி ஓடுகிறது, ஆசிரியரின் சொந்த

நடையும், தந்த நடையாகக் காட்சியளிக்கிறது. இதயச் சிற்பம், அருவியைத் தழுவி நிற்கிறது. இது தான் உண்மையான கட்டுரையின் போக்கு.

இதைபோலத்தான் லிண்டு (LYND) கட்டுரைகளை, ஆங்கிலத்திலே ஹாஸ்யச்சுரங்கமாகச் சொந்த நடையிலே அருமையாக எழுதிக் காட்டுகிறார். லிண்டு, எதையும் எப்படியும் எழுதிக்காட்டும் ஆற்றலுடையவர். சிறு சொற்கள், சிங்காரக் கட்டுரைகளாக உதயமாகின்றன. சோக மண்டலத்திலே, சிரிப்பைக் காணலாம்; இன்ப உலகிலே, துனபத்துளி தெறிக்கக் காணலாம். லிண்டின் உள்ளம், கட்டுரைக் கடலிலே நீந்திவருகிறது.

சார்லஸ் லாம்ப் (Charles Lamb) எழுதும் கட்டுரைகள் எல்லாம் அபூர்வமான கட்டுரைகள் தான்: எண்ணப் பொலிவும், ஹாஸ்யச் செறிவும், நடையோவியமும், நுட்பக் குறிப்பும் கலந்து மினன விடுகின்றன. வாழ்க்கைக் கதம்ப மலர் மாலையாக, லாம்பின் கட்டுரைகள் இலக்கிய மணத்துடன் ஆங்கில இலக்கியப் பூங்காவை அலங்கரிக்கின்றன. லாம்பின கட்டுரை உலகிலே, தொட்ட இடமெல்லாம் இன்பம் தான்; ஆங்கில பாஷையே, லாம்பின் பேனு முனையிலே, புதிய மெருகோடு சுழன்றோடுகிறது. "Poor Relations" ஏழையான சொந்தக்காரர்களைப் பற்றி, ல்ாம்ப் எழுதியிருக்கும் கட்டுரை அற்புதமான கட்டுரை. எத்தனை முறை வேண்டுமானாலும் படித்து இன்புறலாம்.

சாமர்செட்மாகம் (Somerset Maugham) எழுதும் இலக்கியக் கட்டுரைகள, வாழ்க்கையின் விரிவான அமைப்பில், அந்தரங்க ஹாஸ்யச் சுவையுடன் உதயமாகின்றன. சிந்தனைச் சுழலில், நடைப் பொலிவும் தெறிக்கிறது.

கோல்ட் ஸ்மித் (Goldsmith) கட்டுரைகளில், வாழ்க்கையின் வளைவுகள், விளைவுகள், நெளிவுகள்,

சுழல்கள், சோகச் சூறுவளிகள், ஹாஸ்ய மத்தாப்பு எல்லாம் உண்மையை நோக்கிச் செல்வதைக் காண லாம். வடிகட்டிய வாழ்க்கை, வசன வெறியிலே மிதந்து வருவதை ஆழ்ந்த கண் கொண்டு அனுப விக்கலாம. "National Prejudices" அருமையான கட்டுரைதான்.

கவிமணியின் உரைமணிகள் அற்புதம்; அபா ரம். பண்பட்ட சொற்கள்-சரளமான நடை கவிதை யின் சிகரத்தையே எட்டிப்பிடித்து விடுகின்றன.

சிறந்த கட்டுரைகள், கவிதைகளின் சிகரத் தையே தொட முயல்கின்றன. கட்டுரைகளில் பல வகைகள் உண்டு: வருணனைக் கட்டுரைகள்; சிந் தனைக் கட்டுரைகள்; இலக்கிய ஆராய்ச்சிக்கட்டுரை கள; பிரயாணக் கட்டுரைகள்.

பூனையைப் பற்றி மிக அருமையான நுட்பமான வருணனைக் கட்டுரை ஒன்று, காதெரைன் எம். வில் சன எழுதியிருக்கிறார். காதலைப்பற்றி, ஷெல்லி சிறந்த சிந்தனைக் கட்டுரை எழுதியிருக்கிறார்; ஆசிரி யனின தனி நடை (Personal Style) என்ற இலக்கி ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை ஜே. ஏ. சைமண்ட்ஸ் மிக ஆழ்ந்த மன நிலையோடு எழுதியிருக்கிறார். பிர யாணக கட்டுரை ஒன்று. சித்தூரைப்பற்றி கவுண்ட் கெய்ஸர்லிங் எழுதியிருக்கிறார்.

நமது தமிழ் எழுத்தாளர்களில், திரு. ஏ. கே. செட்டியாரும, திரு. சோம.லெ. அவர்களும் அருமை யான அநுபவம நிறைந்த, ஹாஸ்யம நிறைந்த, உண்மை நிறைந்த பிரயாணக் கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள்.

இலக்கிய ஆராய்ச்சித் துறையிலே,

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை

,, டி. கே. சிதம்பரநாத முதலியார்

,, ராஜாஜி

,, ராய. சொ.

டாக்டர் மு. வரதராசனார்

,, அ. சிதம்பரநாதச் செட்டியார்

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை

,, சி. என். அண்ணாதுரை

,, புதுமைப் பித்தன்

,, சொ. முருகப்பா

,, ஆ. முத்துசிவன்

,, விசு. திருநாவுக்கரசு

,, சோமு

,, சாமி பழனியப்பன்

ஆகியோர் நயமான இலக்கியக் கட்டுரைகள் வழங்கியிருக்கிறார்கள். அவர்களது எழுத்திலே, அனுபவமும், புலமையின் கூர்மையும், இலக்கிய ரசனையின் உறுதியும் மின்னலிடுகின்றன.

★

# கட்டுரை மேதை பெர்னார்ட் ஷா

ஷா கட்டுரை எழுதுவதில் கை தேர்ந்தவர். கட்டுரைக் கலையின் ஆழத்தை நன்கு அறிந்தவர்.

கட்டுரை எழுதுவதற்கு சிறந்த வாழ்க்கை அனுபவம் வேண்டும்; சமூகச் சிக்கல்களை அலசி ஆராயும் அபூர்வ ஆற்றலும், அரசியல் சூழல்களை ஊடுருவித் தெளிவுபடுத்தும் பேராற்றலும், சட்ட முரண்களைக் கண்டு பிடிக்கும் பரிசீலனைத் திறனும், மதவெறியின் வில்லங்கத்தை உணரும ஆற்றலும வேண்டும்.

ஷா, எதையும் நேரே கண்டு கேட்டு, உண்மை அறிந்து பரிகாரம் வழங்குபவர். அந்தஸ்துக்காக வும், தேவைக்காகவும் பேசுபவர்களின் வார்த்தை களை நமபவேமாட்டார். பொது ஜனங்கள் சர்வ சுதந்திரமாக வாழ்வதற்கு வேண்டிய உண்மைகளைக் கண்டுபிடித்தவர், ஷா.

உலக இலக்கியங்களை எல்லாம் படித்தவர், ஷா; உலக சரித்திரங்களின் உண்மைகளையெல்லாம் படித்து, அடிப்படையான அரசியல் தத்துவத்தை யும், வாழ்க்கையின் தத்துவத்தையும் கண்டு பிடித்த வர் ஷா.

அவருக்கு எதைப் பற்றியும் உறுதியான அபிபபிராயம உண்டு; எதிலும் சந்தேகத்துடன், குழம்பிய மனத்துடன் பேசமாட்டார். அவர் எழுத் திலும் பேச்சிலும் அசைக்க முடியாத உறுதி உண்டு.

அவர் எழுதியிருக்கும் கட்டுரைகளிலே. சிந்தனை வரட்சியையோ, குறுகிய வாழ்க்கையின் குறுபாடையோ, நாம் காணவே முடியாது. எல்

லோரும் சந்தோஷமாய் வாழ வேண்டும் அடிமை ஒழிய வேண்டும், அறிவு அகண்ட சக்தியோடு விரிவடைய வேண்டும், சட்ட பூர்வமாக எந்தவிதமான கொடுமையும் வாழ்க்கையைச் சிதறடிக்கக் கூடாது, மனிதனை மனிதன் குரங்காட்டம ஆட்டி வைக்க கூடாது. மனிதனை மனிதன மதிக்க வேண்டும், அனபோடு பழகவேண்டும். கொள்ளையடிக்கக்கூடாது, சமநிலையில் வாழவேண்டும, எனற வகையில் ஷா, ஒரு சிறந்த சோஷலிஸ்ட் Socialist ஆக வாழ்ந்தவர். எதற்கும் அஞ்சாமல் எழுதும் சிறந்த மன உறுதி கொண்டவர்

அவர் எழுதியிருக்கும் நாடகங்களில்கூட, பாத்திரங்கள் பேசும்போது, உண்மைகள் - பேருண்மைகள கட்டுரைகளாகவே மலர்ந்து விடுகின்றன. வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும பொருளைப் போல, ஷா உண்மைகளை வாரி இறைக்கின்ருர். கோபமகொண்ட திருவள்ளுவரைப் போல, ஷா கோபக்கனலோடு கர்ஜனை செய்கின்ருர். ஏன ? மனிதன் திருந்தவேண்டும், மனிதப் பண்போடு வாழவேண்டும்,—மிருகத்தன்மையை அறவே ஒழிக்க வேண்டும், சிறந்த லட்சிய வெற்றியை நோக்கி மனிதன் முன்னேற வேண்டும் என்பதுதான், அவருடைய குறிக்கோள். கலையும் இலக்கியமும் வெறுங் கலையாகவும இலக்கியமாகவும இருப்பதில் பயனில்லை; இரண்டும் மனிதப் பண்பாட்டை, மனித வாழ்க்கையைத் திருத்தி அமைக்க உதவவேண்டும் என்பதே அவர் எழுத்தின் நோக்கம். வாழ்க்கையின் வில்லங்கத்தை, பேராசைச் சூறையை உடைத்தெறிய. இலக்கியமும் கலையும் முன்வர வேண்டும். பயனற்ற உபதேசங்களில் பயனில்லை என்பதை நன்கு உணர்ந்தவர், ஷா.

பணக்காரனுக்கு குணம் வேண்டும் ; குணமில்லாதவன் மிருகம என்பதை ஆணித்தரமாக ஷா கட்டுரைகளில் உறுதி செய்திருக்கிருர் ; சாமியார்

களின் சோம்பேறித் தனத்தையும் ஆஷாடபூதித் தனத்தையும் அறவே ஒழிக்க வேண்டுமென்று Joan of Arc நாடகத்தில் எவ்வளவு அருமையாகப் போராடியிருக்கிறார். அவருடைய நாடகங்கள் எல்லாம் கட்டுரைப் போக்கிலே அமைந்திருக்கின்றன.

சிறந்த கட்டுரைகள் எழுதுவதற்கு மனோதிடம் வேண்டும்; வாழ்க்கையில் மனிதமூதேவிகளால் ஏற்பட்ட சஞ்சலங்களை, மனிதமேதாவிகளே ஒழிக்க முன்வர வேண்டும்.

ஷா ஆடம்பரமான வாழ்க்கையை விரும்பவே இல்லை; படாடோபமான விருந்தையும் விரும்பவே இல்லை; சர்வசாதாரண மனிதனாகவே, வாழ்ந்தார். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் உள்ள தேவையற்ற வித்தியாசங்களைக் கண்டு மனம் வருந்தினார். சமூக அமைப்பில் உள்ள குறைபாடுகளைப் பற்றிச் சாட்டையடியாகவே கட்டுரைகளிலும், நாடகங்களிலும் கண்டித்து எழுதியிருக்கிறார்.

ஷாவின் கட்டுரை நடையிலே, நாடக நுட்பத்திலே, கோபக்கனல் கொந்தளித்து நிற்கும். அரசன் முதல் ஆண்டிவரை, அவருடைய கட்டுரைகளிலே இடம் பெறுவர். மனிதனை மனிதனாக வாழவிடாமல் செய்யப்பட்டிருக்கும் விடியாமூஞ்சிச் சட்டத்தையெல்லாம் உடனே திருத்த வேண்டுமென்று, நெஞ்சம் துடித்துக் குமுறி நிற்பார்.

ஷாவின் கட்டுரை நடை அபூர்வமானது. சிறந்த உண்மைகளைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டும் ஆற்றல் வாய்ந்த அபூர்வ வசன நடை; ஆங்கில இலக்கியமே, அவருடைய வசன சிருஷ்டி எழிலால் விரிவடைந்திருக்கிறது என்றுகூடச் சொல்லிவிடலாம். ஷாவின் வசன எழிலை, வேறு யாராலும் கையாள முடியாது. ஆங்கில அகராதியே, ஷாவுக்கு அடிமையாகி விடுகிறது. அவ்வளவு சர்வ சுதந்திரமாக, ஷா வசனத்தைச் சிருஷடி செய்கிறார். சொற்

கள், சிருஷ்டி வெறியில், சுடுசரப்போல் காட்சியளிக்கின்றன. சிந்தனே, பம்பரம்போல் சுழல்கிறது; சொற்கள் வெறிவேகத்தில் டான்ஸ் ஆடுகின்றன.

ஷாவைப்பற்றி செஸ்டர்டன் ஓர் அருமையான ஆராய்ச்சி நூல் எழுதியிருக்கிருர்: ஷாவின் வரலாறு, வாழ்க்கையிலுள்ள நுட்பமான அதிசயங்கள், இலக்கியத்தை ஷா கையாளும் முறை, நாடக சிருஷ்டியின் நூதன இரகசியங்கள், வசன சிருஷ்டியில் உள்ள நடையோவியம், Paradox பாரடாக்ஸில் பேருண்மைகளைப் பொறித்துக் காட்டும் விந்தை, எல்லாவற்றையும் மிக நுட்பமாகச் சித்தரித்திருக்கிருர். 'பாரடாக்ஸ்' சிருஷ்டி செய்வதில் மூன்று நிபுணர்கள் :

செஸ்டர்டன் - Chesterton
பெர்ஞர்ட்ஷா - Bernard Shaw
ஆஸ்கார் ஒயில்ட் - Oscar Wilde

மூன்று நிபுணர்களும், வாழ்க்கையின் வில்லங்கத்தை இலக்கியத்தில் மிக நுட்பமாகச் சித்தரிக்கும் அபூர்வ ஆற்றல் படைத்தவர்கள். கவிதை எழுதுவது எவ்வளவு நுட்பமான கலேயோ, அதேபோல வசனத்தில் 'பாரடாக்ஸ்' எழுதுவதும் கஷ்டம். வாழ்க்கை வெறியும், புலமை வெறியும், சிருஷ்டி எழிலோடு கூடி, Paradox யும் பின்னிக்காட்ட முடியும். சாதாரண அறிவு உடையவர்களால், Paradox யை சிருஷ்டிக்க முடியாது. பல பேருண்மைகள் போரிட்டு இறுதியில் உறுதியடையும்போது, அந்த இறுதிக் கருத்தை பாரடாக்ஸில் பின்னிக் காட்டலாம்.

ஷா, கீழ்க்கண்டவர்களைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கிருர் :

ஆர்னல்ட் பென்னெட்
ஜார்ஜ் குரோவ்

இப்சன் நாடகக்கலை
கீட்ஸ்
வெர்னன் லீ
மாகிங் ஹாம்
வில்லியம் மரரிஸ்
நீட்ஷி
எட்கார் ஆலன்போ
ரோடின்
ஷெல்லி
ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்
டால்ஸ்டாயின் கலை
டால்ஸ்டாயின் நாடகப் பண்பு
H. G. வெல்ஸ்
ஆஸ்கார் ஒயில்ட்
சாமியூல் பட்லர்
செஸ்டெர்டன்

சில கட்டுரைகளை, ஷா, புதிய கண்கொண்டு பார்த்து முடிவுகட்டியிருக்கிறார்; சில கட்டுரைகளை தமாஷாக, வேடிக்கையாக எழுதியிருக்கிறார். ஆனால் கருத்தோட்டமும் நடையோவியமும் புதிதுதான்.

கார்ல்மார்க்ஸ், நீட்ஷி இருவருடைய கருத்துக்களையும் கரைத்துக் குடித்தவர் ஷா. வாழ்க்கையில் அந்தக் கருத்துக்களையெல்லாம், சிறந்த பகுத்தறிவோடுவழங்குகிறார்; பொதுஜனங்களும், இத்தகைய கருத்துக்களை வாழ்க்கையில் பயனபடுத்திக் கொண்டு, முன்னேறிச் சீர்திருத்தம் அடைந்து, அடிமைத்தளைகளை எல்லாத் துறைகளிலும் அறுத்தெறிய வேண்டுமென்று கம்பீரமாகக் கர்ஜிக்கிறார் ஷா.

வாழ்க்கையில் ஷாவின் கருத்தைப் பின்பற்றி நடந்தால், திருக்குறளைப் பின்பற்றி நடந்தது போலாகும். அறத்தின் வழியே, அறிவின் வழியே

உறுதியாகச் செல்கின்ற வாழ்க்கைச் செல்வத்தை நாம் அடைந்தவர்கள் ஆவோம். இதுவே உறுதி, உண்மை, சத்தியம். வெற்றி வேலாகப் பாய்ந்தோடுகிறது, ஷாவின் கூர்மையான ஒளிநிறைந்த பேனா முனை.

ஷா அருமையான மொழிபெயர்ப்பும் செய்திருக்கிறார்; ஜெர்மன் நாடகங்களை, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். மொழிபெயர்ப்பில், முதலில் அவருக்கு நம்பிக்கை இல்லை: ஆனால் மொழி பெயர்த்தபின், வெற்றிகரமான மனோபாவம் ஏற்பட்டது. "Jitta's Atonement" ஒரு ஜெர்மன் நாடக மொழிபெயர்ப்பு. எல்லாம் வசனவெறி, கட்டுரை கர்ஜனை..

அவர் தன்னுடைய நாவல் ஒன்றை, நாடகமாக எழுதி வெற்றிபெற்றிருக்கிறார்: Cashel Byron's Profession' என்ற நாவலை. "The Admirable Bashville or Constancy Unrewarded" என்று நாடகமாக எழுதி, வெற்றி பெற்றிருக்கிறார். பாத்திரங்களின் சம்பாஷணை, பிரமாதம்தான். உண்மைகள், தீப்பந்தமாக காட்சியளிக்கின்றன.

"The Fascinating Foundling" (A Disgrace to The Author) என்ற நாடகம் ஒன்றைத் தமாஷாக எழுதிக் காட்டியிருக்கிறார்

ஷா தான் எழுதியிருக்கும் நாடகங்களுக்கு அருமையான முன்னுரைகள் வழங்கியிருக்கிறார்; நீண்ட முன்னுரைகளை என்றாலும், முன்னுரைகள் எல்லாம் பொன்னுரைகளாகவே விளங்குகின்றன. நாடகத்திலுள்ள பிளாட் Plot, பாத்திர சிருஷ்டியின் அவசியம், சரித்திர மூலம், நாடகத்தின் முக்யத்துவம், வாழ்க்கையின் அஸ்திவாரமான தத்துவப் போக்கு, குறிக்கோளின் அவசியம், மனித ஆஷாடாபூதிகளின் ஊழல்கள், இவை எல்லாம் கட்டுரைப் பாணியிலே, தர்க்க ரீதியாய் அமைந்திருக்கின்றன.

முன்னுரைகளைத் திரட்டிக் கட்டுரைக் கோவையாக வும் வெளியிட்டிருக்கிறார்கள். வாழ்க்கைக்கு வழி காட்டியாக உள்ள பேருண்மைகள், முன்னுரைகளில் மின்னலிடுகின்றன. முன்னுரைகளிலே, ஆங்கில வசன சிருஷ்டி கருத்தாழ்த்திலே, 'மெற்குறிலைட்' போல் ஒளி வீசுகிறது. ஷாவின் வசன நடை, மத்தாப்பு நடைதான். சிந்தனைப் பொறிகள், ஒளி வெள்ளமாகக் காட்சியளிக்கும்.

ஷா, சைவ உணவையே விரும்பினார்; மனச் சாட்சியின் அவசியத்தையே வற்புறுத்தினார்; சர்வ சுதந்திர வாழ்க்கையையே பிரசாரம் செய்தார்; ஏழைகளை ஏமாற்றுபவர்களைக் கண்டு சீறிவிழுந்தார். பணக்காரர்களிடம் எந்தச் சந்தர்ப்பத்திலும் பல்லைக்காட்ட விரும்பவே இல்லை; பணக்காரன் - ஏழை என்ற வித்தியாசம், படித்தவன்-படியாதவன், அரசன்-பிரஜை, சாமியார்-பக்தன் என்ற வித்தியாசங்கள் அறவே ஒழிந்தால்தான், மனிதன் சர்வ சுதந்திரமாக வாழலாம் என்பதை தன் நாடகங்களில் அடிக்கடி வற்புறுத்துகிறார். காதல் வாழ்க்கையிலும், கட்டாயமோ, நிபந்தனையோ கூடாது என்று வற்புறுத்துகிறார். இயற்கையான வாழ்க்கையை எந்த வகையாலும் தடை செய்யக்கூடாது என்பது ஷாவின் ஆழ்ந்த பிரச்னை.

மனச் சாட்சியைக் களங்கப்படுத்தும் அறிவிலிகளையும் அதிகார வர்க்கத்தினரையும் அறவே ஒழிக்கவேண்டும் என்பது ஷாவின் முன்னேற்ற லட்சியம்.

ஷாவின் எழுத்தும் பேச்சும், தமாஷாகவே இருக்கும். ஆனால் ஆழ்ந்த உண்மைகள் கண்ணாடி விரியன் பாம்புபோலக் கட்டுரைகளைத் தழுவி டான்ஸ் ஆடிக்கொண்டிருக்கும்; வசன நடை, நல்ல பாம்புபோல நர்த்தனம் செய்யும்; ஷாவின் குரல், இசையைத் தூண்டும் போக்கிலே அமைந்தது.

ஷாவின் சொற்பொழிவுகள் எல்லாம், சர்வசுதந்திர மான சொற்பொழிவுகள்; சிறந்த நாவன்மையுடன், ஷாவின் பேச்சு அமைந்திருக்கும்; எல்லோரும் நம்பிப் பின்பற்றும்படியான பாணியிலே, சொற் பொழிவுகள் சுழன்ரேடும்.

மேல்நாட்டு இசைக் கலையில், மேதாவியாக விளங்கியவர் ஷா: அவர் இசையைப்பற்றி, மிகு நுட்பமான ஆராய்ச்சிகள் எழுதியிருக்கிருர்; இசை யின் இனிமை கட்டுரையிலே பரிமளிக்கிறது. இசைப் பின்னலை, தன் வசன காம்பீரியத்தில் கண் ணாடிபோலப் பிரதிபலிக்கச் செய்திருக்கிருர், ஷா.

★

# பெண்மை

பெண்மையைப் பற்றி எத்தனையோ பத்திரிகைகள் அளவுக்கு மிஞ்சி அளக்கின்றன; காதலை வற்புறுத்தும் பெண்மையை, இயற்கையின் அமைப்பை மீறி, கதைகள் மூலமும் சினிமாப் படங்கள் மூலமும் வருணிப்பதில் பயனுண்டா?

ஆங்கிலக் கவிஞர் "வேர்ட்ஸ் வொர்த்," பெண்மையை எவ்வாறு கவிதையில் சித்தரிக்கிறார், பாருங்கள் :

"பெண் ஓர் இன்ப வடிவு; அழகின் மிகுதியால், அவள் ஒரு இன்பமாயையாக என் கண்ணில் தோன்றுகின்றாள்; அவள் ஒரு நிமிஷ ஆபரணமாக, என் வாழ்க்கையில் மிளிர்கின்றாள்; அவளுடைய நீல மணிக் கண்கள், நட்சத்திரங்கள் போல ஜ்வலிக்கின்றன; பருவத்தின் கனிந்த நிலையும் அருணோதயப் பொலிவும் அவளிடம் கலந்து மின்னுகின்றன; அவள் அசைந்தால், நடனமாடுவது போன்ற நிலை தெரிகிறது; என் உள்ளத்தில் புகுந்து, நிறைந்து, இன்பம் பாய்ச்சும் அபூர்வ வடிவழகி தான்.

நெருங்கிப் பார்க்கும்போது, அவள் குணவதியாகவே காட்சியளிக்கின்றாள்; அழகையே மிஞ்சி விட்டது, அவள் குணம். அவளுடைய ஒளிபொருந்திய முகத்திலே, சிறந்த சிந்தனையலைகள் சந்திக்கின்றன; நமக்குப் பல புது இன்பங்களை ஊட்டும் ஆற்றல் உடைய முகம் என்று தெரிகிறது.

அவளுடைய இயற்கையிலே, எதற்கும் கலங்காத அமைதி, துன்பத்தை எதிர்த்து மறக்கும்

உறுதி, காதல், முத்தம், கண்ணீர், புன்முறுவல் எல்லாம் கலந்து மாயமாய்ப் புரளுகின்றனவே!

வாழ்கையிலிருந்து மரணம் வரை, மனோதிடத்தோடு வாழப்பிறந்த மகோன்னதச் சித்திரம், இந்தப் பெண்வடிவம்; எல்லா வகையிலும் நிறைவு பெற்ற உயிரோவியம் அவள்; அந்தந்த நேரத்துக்கு ஏற்றவாறு, குடும்ப விளக்காக நின்று நிலவும் தாய்மை ஒளியாகக் காட்சியளிக்கிறாள்; கணவனுக்கும் குழந்தைகளுக்கும், இன்ப மொழியிலே ஆறுதல் கூறி, எச்சரிக்கை செய்யவேண்டிய நேரத்தில் முன் எச்சரிக்கை செய்து, ஓரளவு தெய்வத் தொடர்போடு வாழ்கின்றாள்"

கோலரிட்ஜ் என்ற கவிஞன் என்ன கூறுகிறான்; "இந்த மானிட வாழ்க்கையிலே, சகல சிந்தனைகளும், சகல ஆசைகளும, சகல இன்பங்களும், காதலுக்கு அடிமைதான். பெண்களுக்கே காதல் கதைகள் கேட்பதில் பிரியம் அதிகம்; கதை கேட்கக் கேட்க, காதல் பன்மடங்கு உயருகிறது; காதல் மூலத்துக்கு காதல் உரை எப்படி எல்லாம் இதய வனப்பைத் தருகிறது; காதலிக்கும் மார்பிலே, கருணை அதிகம்; இன்ப இதயத்துடிப்பிலே, காதல் கண்ணீர் கனல்கிறது; பெண்மையின் காதல் கரங்களில் தழுவிநிற்கும் மனிதன், இன்பத்தின் இறுதி எல்லையைத் தொட்டு நிற்கின்றான்; காதலியின் கன்னிக் கண்ணீர், கவிதையின் வரிகளிலே, விம்மிப் புரளுகிறது; அவளுடைய அழகும், அமைதியும், கண்ணீரின் கவிதையும், என் உள்ளத்தை மிக மிக ஆழமாகத் தொடுகின்றனவே."

கவிஞன ஷெல்லி, அழகியைக் கண்டு, எவ்வாறு அனுபவிக்கிறான்:

"அழகிய பெண்ணே! உனது முத்தங்களைக் கண்டு நான் அஞ்சுகிறேன்; எனது முத்தத்தைக் கண்டு நீ அஞ்சவேண்டியதில்லை: உனது அழகிய

வடிவையும், குரலையும், அசைவையும் நான் கண்டு அஞ்சுகிறேன்; ஆனால், நீ என் தோற்றத்தைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை, உண்மையிலேயே உனது நிகரற்ற அழகிலே மயங்கி, குழந்தை யுள்ளத்தோடு, நான் உன்னை வணங்கிப் பூஜிக்கிறேன்."

கவிஞன் பைரன் என்ன கூறுகிறான்: "அவள் சிறந்த அழகி; அழகு நிறைந்த பெண்மையிலே, அவளுக்கு நிகர் அவளே; அவள் ஒரு மந்திர வடிவமாக நிற்கின்றாள்; அலைகளில் அலைகின்ற நாதக் குரல்போல அவளது இனிய குரல் இன்பக் குரலாக நாதமிடுகிறது; நளிரவிலே, சந்திரன் தன் இனிய வெள்ளிக்கிரணங்களால், கொந்தளிக்கும கடலுக்கு சங்கிலி நெய்கிறான்; கடல் அமைதியாக, தூங்கும் குழந்தைபோல அடக்கமாகவே மூச்சுவிடுகிறது. இந்த நிலையிலே, அழகியின் அழகைக் கண்டு வணங்காமல் மறந்திருக்க முடியுமா?"

இங்கே நாம் காண்பது என்ன? ஆண்மையும் பெண்மையும் கலந்து சந்திக்கின்ற இனபக் காதல் துறைமுகம்; வாழ்க்கைக்கு காதல்தானே துறைமுகம!

சிருஷ்டியிலே, இயற்கை, பெண்மைக்கு அதிகமான சலுகை காட்டுகிறதல்லவா? எறும்பு முதல் மனிதன் ஈருக பெண்மை அதிகமான அழகோடு பொலிவுற்று மின்னுகின்றதல்லவா?

ஆண்-பெண் தொடர்பிலே, சிருஷ்டிக் காந்தம் தான் காதலாகப் பரிணமிக்கிறது: ஆணின்றிப் பெண் இல்லை; பெண் இன்றி ஆணில்லை; இது வாழ்க்கையின் சிருஷ்டி அஸ்திவாரம. ஆண் அழகு பெண்ணுக்குத் தெரியும்; பெண் அழகு ஆணுக்குத் தான் தெரியும். காதல் கனியுமபோது, காதல் காந்தம் இருவரையும் நெருக்கி உடலாவிக் கலப்பை வற்புறுத்துகிறது.

பெண்மைக்கு அணிகலமாக உள்ள அச்சம், நாணம், மடமை எல்லாம் காதல் உலகிலே, கோமா

ளியின் சிகரத்தில் நின்று விளையாடுகின்றன. காதலன் - காதலி சந்திக்கும்போது, நான்கு நல்ல கண்களும், கள்வெறிகொண்டு இரு உள்ளங்களையும் உறுதியாகத் தாக்கும்போது, சகல குணங்களும் மறைந்து காதல் ஒன்றுதானே மிஞ்சிக் கொடிவீசிக் கொண்டு நிற்கும்.

ஆண் - பெண் தொடர்பிலே, காதலை உறுதியாக வருணிக்க, திருவள்ளுவர் 250 குறட் சூத்திரங்கள் வழங்கியிருக்கிருர்: காதல் ஒரு தமாஷான நோயாக வந்து, பருவத்தில் கண்வழி நுழைந்து தாக்கும்போது அதற்கு அடிமையாகவே வாழ்கின்ருர்கள் காதலன் - காதலி. தொட்ட இடமெல்லாம் தித்திக்கும் இயல்புடையது காதல், என்றும், சிந்திக்கும்போதும் கனவு காணும்போதும் காதல் போதை புயல்போல வந்து தொடர்புள்ள ஆன்மாக்களைத் தாக்கும் என்றும், காதலிலே கசப்போ சலிப்போ இல்லையென்றும், காதல் கண்கள் சந்தித்து மனங்கலந்து விட்டால், பெற்ருேர்கள் அதைத்தடுக்க முன்வரக்கூடாது என்றும, இல்லற வாழ்க்கையிலே பெண்மையின் ஏற்றமும பெருந்தன்மையும் சந்தர்ப்ப புத்தியும் போற்றப்பட வேண்டிய அம்சங்கள் என்றும், அளவுக்கு மிஞ்சி வற்புறுத்துகிருர், குறளாசிரியர். அனுபவித்த காதலும் அனுபவித்த பெண்மையும், கவிதையில் குறட் கொடிகளாகவே படர்ந்து மலர்ந்திருக்கின்றன.

குறுகத்தறித்த குறளிலே, காதல் விழிகள், கண்ணீரில் பூத்த கமலங்களாகவே மின்னிக் கொண்டு நிற்கின்றன. காமத்துப்பாலில், களவியல், கற்பியல், எந்த அளவு இயற்கையை ஒட்டி நிமிர்ந்து நிற்கின்றன, பாருங்கள்!

"கண்களவு கொள்ளும்
சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

நோக்கினாள் நோக்கி
இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

கண்ணொடு கண்ணிணை
நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

கடாஅக் களிற்றின்மேல்
கட்படாஅ மாதர்
படாஅ முலைமேல் துகில்.

ஊடல் உணர்தல்
புணர்தல் இவை காமம்
கூடியார் பெற்ற பயன்.

காமக் கடும்புனல்
நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்."

(குறள்)

காமத்துப்பாலில், களவியல் எவ்வளவு அருமையாக இருக்கிறது! இதுவே பெண்மையின் அந்தரங்கக் காதல் வெறி விந்தை.

காதல் உலகிலே, பெண்மையின் விசித்திரக் கண்களையும் கூர்மையான மார்பையும் அபூர்வமாக அனுபவித்தே வருணித்திருக்கிறார், செந்நாப்போதார். குறளைப்படித்து அனுபவித்த கம்பன், பெண்மையின் இனிய விஷம் நிறைந்த வேல் விழிகளையும் குண விந்தைகளையும் அனுபவித்தே வருணித்திருக்கிறான்.

என்னதான் எழுதினாலும், பெண்ணின் மனதைப் பூராவும் யாராலும தெரிந்துகொள்ள முடியுமா? முடியவே முடியாது! பெண் மனம், பெரும் புதிர்தான்.

குடும்ப வாழ்க்கையிலே, பெண்களுக்கு கற்பு மிகவும் அவசியம்: அதுவே வாழ்வின் தூய நிறை.

''சிறைகாக்குங் காப்பு
எவன்செயும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை''

பெண்களே, தங்கள் கற்பைப் பாதுகாக்கவேண்டும். பிறருடைய பந்தோபஸ்தில், கற்பு நிலைக்குமா? உண்மைதான்!

பெண்மையிலே, குழந்தை இன்பம் தோன்றி மலர்ந்து கனிந்து வளர்கிறது.

''மக்கள்மெய் தீண்டல்
உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டலின்பம் செவிக்கு.''
''குழல்இனிது யாழ்இனிது
என்பதம் மக்கள
மழலைச்சொல் கேளா தவர்''

மழலையின் மகோன்னத இசையெழிலைப் பார்த்தீர்களா? இதற்குக் காரணம் பெண்மை! பிரசவ வேதனையும் பெண்மையில்தானே?

ஆண் குழந்தையானாலும், குழந்தைப் பருவத்திலே, தாயின் மடியிலே பெண்மைதான் பொலிவுற்று ஓங்கிவளரும். பெண்மை, பாசமாகமாறி எல்லோரையும் காந்தம்போல் பற்றி இழுக்கிறது.

பெண்கள் சிறு விஷயத்துக்கும் சண்டைக்குப் போகிறார்கள், என்று சிலர் குறை கூறுகிறார்கள். அறிவுடைய பெண்கள் நிதானமாகவே நடந்து கொள்வார்கள். அறியாமை, எந்தப் பகுதியிலும், கூக்குரலில்தான் போய்முடியும்.

பெண்களுக்குப் பணவசதி ஸ்ரீதனம் வேண்டாமா? ஆண்களையே நம்பி வாழமுடியுமா? புருஷன்

புலியாக மாறிவிட்டால், மனைவி சிறுத்தைப் புலியாக மாறிவிடுவதா? வீட்டு வேலைகள் பார்த்த நேரமபோக, மற்ற நேரங்களில் சிறு சிறு கைத் தொழில்கள் செய்து பெண்கள் குடுமபத்தைக் காப்பாற்றலாம்.

எந்தத் தொழிலிலும், குடும்ப வாழ்க்கைக்கு ஆபத்து வந்துவிடாமல், கற்போடு வாழவேண்டும. வேறு புருஷர்களோடு பழகி காரியம சாதித்துக் கொள்ளத் துணியக்கூடாது! பல புருஷர்களோடு பழகினல், கற்பு ஓட்டம் பிடித்துவிடும்.

ஒரு புருஷன், தன் மனைவியை, தன் சிநேகித னுக்குக்கூட தற்கால முறையில் அறிமுகப்படுத்தக் கூடாது. ஆண்-பெண் தொடர்பு, எந்த வகை யிலும் கற்புககு விரோதமாகவே வந்து குறுக்கே நிற்கும்.

உலகில் எந்தப் பகுதியிலும், கலியாணமாகாத பெண்கள், பணமில்லாத பெண்கள் வறுமைகாரண மாக விபசாரம் செய்கிருர்கள். குடுமப ஸ்திரீகள் கூட, சில சந்தர்ப்பங்களில் விபசாரத்தின் விபரீதப் பொருளை உணராமல், இறங்கிவிடுகிருர்கள். இது காலத்தின் அலங்கோலம், இதை உடனே கண்டிக்க வேண்டியது அவசியம்.

குழந்தைகளை ஏராளமாகப் பெற்றுவிட்டால், வறுமை வந்தேதீரும். பணக்காரக் குழந்தைகள் கூட, சில அசந்தர்ப்பங்களில், வறுமைச் சுழலில் எறியப்படுகிருர்கள்.

H. G. Wells மேல்நாட்டுப் பெண்களையும், உல கப் பெண்களையும் நன்ருய் ஆராய்ந்து முடிவுகட்டி யிருக்கிருர்:

"மெல்லியலார் அருமையான அழகிகள்தான்: இயற்கையிலே, இல்லற வாழ்க்கைக்காகவும் குழந் தையைப் பெற்று வளர்க்கவும் சிருஷ்டிக்கப்பட்டவர்

கள்; துடுக்கான முரட்டு வேலைக்கு, அவர்கள் உடம்பு பயன்படாது; பட்டாளத்துக்கும் பயன் படாது.

காதல் உலகிலே, அவர்களுடைய வெற்றி நிகரற்ற வெற்றிதான்;

ஏமாற்றும் பெண்களும், ஏமாற்றப்பட்ட ஆண் களும், ஏமாற்றும் ஆண்களும், ஏமாற்றப்பட்ட பெண்களும், காதல் உலகின் சிருஷ்டி எழிலைச் சீரழிக்கிறார்கள்;

எந்தத் தொழிலிலும், ஆண்களோடு பெண்கள் போட்டியிட முன்வருவது அறிவீனம்; இந்தப் போட்டியில், பெண்மையின் எழில் நொறுங்கிப் போகும்.

பணமில்லாத பெண்கள், விபசாரத்தில் இறங்கி துணையற்ற போர் வீரர்களுக்கு இன்பம் ஊட்ட முன் வருகிறார்கள்; இது சரியா, தப்பா? சமூகம்தான் இதற்கு ஜவாப்புச்சொல்ல வேண்டும்.

பெண்கள், உலக அழகிகளாகப் புறப்பட்டு ஊர் சுற்றி, தேவையற்ற பழக்கம் பழகி நாசமடையவே வேண்டாம்; தங்களுக்குரிய குடும்பக் கடமையைக் கச்சிதமாகக் கவனித்தால் போதுமே!"

D. H. Lawrence, & Havelock Ellis என்ன கூறுகிறார்கள்?

காதல் உலகிலே, விபரீதம் அடிக்கடி நிகழ்ந்தே தீரும்; உடற்கலப்பிலும் மனக்கலப்பிலும் தகுதி பெற்று இன்பமடைபவர்களின் காதல்தான் நிலை பெற்று நிற்கும்! உடல் இன்பம் குறைந்தாலும், மனப்பொருத்தம் முரண்பட்டாலும, காதல் கொடி சிதறித்தான் போகும்; இயற்கைக்கு முரணான திரு மணம், மூதேவியின் மூலைக்குப் போய்விடும். பொருத்தக் குறைவுக்காக, ஆள்மாறி அனுபவித் தால், கற்புக் குறைந்துவிட்டது என்று குறை

கூறுவதில் பயனில்லையே? இது இயற்கையின் உள் அந்தரங்கச் சட்டம். வேறு எந்தச் சட்டமும் இதை தடுக்க முடியாது. தடுக்கத் தடுக்கக் கொதிப்புத் தான் வளரும்; காதல் உலகிலே, இயற்கைக்கு முரணாக, வேட்டையாடி வெற்றி பெறுவது நிலைக்குமா? கலந்த உள்ளங்கள், கலக எல்லைக்குள் நுழையவே மாட்டா.

காதல் வில்லங்கம், தொடர்ந்தவில்லங்கம்தான், தெரியுமா?

## ( Morals, Manners & Men)

பெண்மையிலே பாரதியார் பேரதிசயங்களைக் கண்டார்: பெண் தொடர்பால், காதல் வளரும போது இசை துடிக்கிறது, கலை வளருகிறது, கவிதை மின்னுகிறது, கவலை கரைகிறது, ஜீவிதம் ஓங்கி நிற்கிறது. காதலியின் கடைக்கண் பார்வை யிலே, சோகத்தையே துரத்தும் வீரம் காதலன் உள்ளத்திலே குவிந்து குமுறி வெற்றி பெறுகிறது. பெண்ணின் உடலை வீணையாகக் கருதிய பாரதி யாரின் உள்ளம் எப்படி? இதுவே அனுபவித்த முடிவு!

இங்கே ஒரு காதல் சித்திரம்:

"வீணையடி நீ யெனக்கு
  மேவும் விரல் நானுனக்கு
பூணும் வடம் நீ யெனக்கு
  புதுவயிரம் நானுக்கு
காணு மிடந்தோறு நின்றன்
  கண்ணி னொளி வீசுதடி
மாணுடைய பேரரசே
  வாழ்வு நிலையே! கண்ணம்மா!
வெண்ணிலவு நீ யெனக்கு
  மேவு கடல் நானுக்கு

பண்ணு சுதி நீ எனக்கு
 பாட்டினிமை நானுக்கு

எண்ணி யெண்ணிப் பார்த்திடிலோர்
 எண்ணமிலை நின் சுவைக்கே

கண்ணின் மணி போன்றவளே!
 கட்டியமுதே! கண்ணம்மா!

.................................................... .

ஆசை மதுவே, கனியே,
அள்ளுசுவையே! கண்ணம்மா!

பெண்மையை அடிமைப்படுத்தக் கூடாது என்பது பாரதியாரின் ஆக்ஞை. பெண்கள் அறிவோடு சர்வ சுதந்திரமாக வாழவேண்டும் என்பது தான். பெண்மையின் வீரம்தான், 'பாஞ்சாலி சபதம்'

* * * * * * *

பெண்மையின் காதல் வெறியை, ஆஸ்கார் ஒயில்ட் (Oscar Wilde) தன்னுடைய 'சலோமி' நாடகத்தில், மிக நுட்பமாகவே சித்தரித்திருக்கிறன்: அரசன் மகள் சலோமி நடனமாடி முடிந்ததும், அழகு நிறைந்த ஞானியின் தலையையே வெட்டி முத்தமிடுகிருள். துறவியின் தலை தூள்! தூள்!

யோகி சுத்தானந்த பாரதியார் பெண்மையின் பெருமையைப்பற்றி என்ன சொல்லுகிருர்:

மென்மை யுடலின்ப
 மேதக்க வாழ்வெல்லாம்
பெண்மை யுவந்தளிக்கும்பேறு.

வாழ்க்கைத் துணையும்
 வகையும் விரிநலமும்
ஆக்கமும் பெண்சக்தி யாம்

பெண்ணிற் பிறங்கும்
பெருங்கனலைப் புல்லினால்
மண்வாழ்வு மங்கல விண்ணாம்

(யோகசித்தி)

பராசக்தி வடிவான பெண்ணிடம் விளங்கும் மகத்தான மூலக்கனலை சுத்த சாதன முறைகளாற் கூடினால், மண்ணக வாழ்வு, எல்லா மங்கலமும் பொலியும் விண்ணக வாழ்வாகவே மாறிவிடும். பெண்மையின் பெருமை, எந்த அளவு வாழ்க்கையில் ஓங்கிய இன்பக் கொடியாக நின்று படர்ந்திருக்கிறது, பாருங்கள்.

காதலின்பத்தைப் பற்றிக் கூறும்போது,

"குலமோங்குஞ் சக்திக்
கொழுந்தோங்கும் காதல்
நலமோங்க நாடோங்கு நாள்."

என்று குறிப்பிடுகிறார்.

காதலால் உயிர்க்குலம் ஓங்கும், நிறை முறையான காதல் வாழ்வில் சக்திக கனல் ஓங்கி வளரும். நாதவிந்துகள் ஓஜஸாகவும், தேஜஸாகவும் தவக் கனலாகவும் மாறி (Spiritual Lustre and Divine Energism) மனித சமுதாயத்தில் அமர வாழ்வையே விளக்க முன்வருகின்றன

கவிஞன் ஷெல்லி 'Epipsychidion' (காதலும்-கனவும்) என்ற பாடலில் என்ன கூறுகிறான்:

"வீணையிசைப் பாட்டொலியும்
விரல்நுனியின் துடிப்பும்என
விம்முகின்ற அழகுணர்வும்
வித்தாரக் கவிதையும்போல்,

தோணியினை நாம் செலுத்தும்
தீவினிலே ஏந்திழையே!
தொனியாவும் ஒளியெல்லாம்
சேதனங்கள் ஒவ்வொன்றும்

நாணத்துக் கன்னிமனக்
கனவொன்றின் எதிரொலிபோல்
நாற்புறமும் வையத்துச்
சுழற்சியிலே நித்தம் நித்தம்

மூண்டுஎழும் இசையோடு
ஆன்மாவின் ஆன்மாவாய்
முரண்பாடு ஏதுமின்றி
லயங்கொஞ்சச் சங்கமிக்கும்''

(T. V. S. மொழி பெயர்ப்பு)

ஷெல்லியும், பெண்ணை வீணையாகவே கருதி விரல் மேவி நாதம் எழுப்பி அனுபவிக்கின்றான்.

## கோஷாப் பெண்ணின் கதி என்ன ?

அழகியின் முகத்தை மூடிவைப்பதின் கருத்தென்ன? கற்பைக் காக்க, கோஷா திரை தேவையா? மனவுறுதி கொண்ட பெண்ணுக்கு கோஷா மூடி தேவையில்லை. மனவுறுதி இல்லாத அழகியை கோஷா மூடியால் தீய சிந்தனையினின்று தடுக்க முடியுமா?

வெளியுலகையே கண்ணால் பார்க்க முடியாமல் தடுப்பது கொடுமையினும் கொடுமை. கண்ணிருந்தும், கண்ணில்லாக் கபோதி வாழ்க்கை நடத்தலாமா?

முகமூடியில்லாத பெண்களின் அழகைக்கண்டு, ஆண் பித்தர்கள் அலங்கோலமாகப்பித்துப்பிடித்து அலைவதும் உண்மைதான், இதை எப்படித் தடுப்பது? சட்டமோ, சமூகமோ இதைத் தடுக்க முயலும் போது, பேரிழிவே வந்து விடுகிறது.

இயற்கையின் அழகு போதையை, 'காமக்கடல்' என்று தமிழ் மறையே கூறுகிறதே, என் செய்வது?

நீந்த முடியாத காமக்கடலை, குறளாசிரியர் குறுகத் தறித்த குறளில் நுட்பமாகவே குறித்துவைத்திருக்கிறாரே? வாழ்க்கையில், பெரிய வில்லங்கம்தான் கோஷா மூடி.

காமத்துப் பாலில், திருவள்ளுவர் பிரமாதமாக மிக நுட்பமாகக் காதலை ஆராய்ந்திருக்கிறார் என்றும், ஷேக்ஸ்பியர்கூட காதலை இவ்வளவு நுட்பமாக ஆழமாக விரிவாக ஆராயவில்லை என்றும், வ. வே. சு. ஐயர் கூறுகிறார், அவருடைய திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு முன்னுரையில்.

இந்த அபிப்பிராயத்தை நான் ஒப்புக்கொள்ளவே முடியாது. சுமார் 2000 ஆண்டுகளுக்குமுன், காதலைப் பல பகுதிகளாகப் பிரித்துக் குறட்பாக்களில் சூத்திரவடிவில் விதைத்திருக்கும திருவள்ளுவரின் அபூர்வத் திறமையைச் சங்கப் புலவர்கள் ஆச்சரியப்பட்டு அங்கீகரித்திருக்கலாம். சுமார் 400 ஆண்டுகளுக்குமுன் ஷேக்ஸ்பியர், காதலை நாடக வாயிலாக உலக இயற்கையை ஒட்டி அருமையாக ஆராய்ந்து கதாபாத்திரங்களின் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்; ஷேக்ஸ்பியரின் காதல் கருத்துக்கள் அமைதியாகவும சாந்தமாகவும் நுட்பமாகவும் ஆழமாகவும், விரிவாகவும் ரத்னப் பொலிவுடன் மின்னுகின்றன. ஷேக்ஸ்பியரின் சித்திரத்தில் ஆபாசமில்லை.

ஷேக்ஸ்பியர் எழுதிய 'Sonnets' *14* வரிப் பாடல்களில், பெண்மையையும் காதலையும் அபூர்வமாக அனுபவித்தே வருணித்திருக்கிறார். ஷேக்ஸ்பியரும், காதல் மேதைதான்; பெண்மையின் நிகரற்ற அழகையும், உணர்ச்சியையும், ஆன்ம எழிலையும் நன்கு உணர்ந்தவர்தான். தன் வாழ்க்கையிலே, காதலை உணர்ந்து, காதலின் தத்துவத்தைக் கவிதையாகவே சிருஷ்டி செய்திருக்கிறார்.

"காதல் இன்பம் நிகரற்றது; சகல இன்பங் களுக்கும் அப்பால் நின்று தனி இன்பம் ஊட்டுவது;

அழகு போதையிலே, பெண்மையின் ஜிலு ஜிலுப்பிலே, காதல் கொப்பளித்தே மின்னலிடு கிறது; அழகு, பெண்மையாக மின்னி முத்தமிட வரும்போது, காலக்கோடரிகூட மயங்கிப் பின்வாங்கி விடுகிறது.

உண்மையான பேரழகியின் சௌந்தரியம் சலிப்பையோ, கசப்பையோ தரவில்லையே! அழகு பேரழகாகப் பெருகி, காதல் போதையைப் பன் மடங்கு தூண்டி பரிமளிக்கச் செய்கிறது;

பெண்களின் கண்கள், காதல் பொக்கிஷங்கள்! இலக்கிய ஏரிகள்; சர்வகலாசாலைகள்; பெண்மை கண்ணடிக்கும்போது காதற் சொற்பொழிவே நிகழ் கிறது. பெண்மையின் உண்மை, எல்லை கடந்தது;

சொற்களை மிஞ்சி எழிலோவியமாக வளர்கின்ற பெண்மையின் மார்பகம், ஆண்மையைப் பற்றி இழுக்கும்போது, இயற்கையின் காதல் காந்தம் மத்தாப்பிடுகின்றதல்லவா? இரு காந்தக் கண்களை யும், இரு அமுத கலசங்களையும் கண்டு இன்புறு கின்ற மனிதன், மார்பின் முனையிலே உணர்ச்சிவயப் பட்டுக் கெஞ்சி நிற்கின்றான். ஏன், அதுதான் சிருஷ்டியின் ரகஸ்யம்."

பெண்களைப்பற்றி கீட்ஸ் (Keats) எவ்வாறு அனுபவிக்கிறான்: பெண்களை, ரோஜா மலர்களாக வும் பெப்பர்மெண்டுகளாகவுமே அனுபவிக்கிறான், கவிஞன் கீட்ஸ்; கீட்ஸின் கண்களிலே அழகு என் றால் அழகுதான்; அழகின் ஆழத்தையும் அளவுக்கு மிஞ்சிக் கண்டவன் கீட்ஸ்; "அழகியின் அழகே-மலை யுச்சி, ஞானியின் பேனா, கவிஞனின் வீணை கானம், நட்பின் இன்பக் குரல், சூரிய ஜோதி, ஆற்றின் அலையோசை, இன்பம் ஊட்டும் நிலவொளி, எல்லை யற்ற சௌந்தரிய ஜிலு ஜிலுப்பு;

பெண்மைத் தோற்றத்திலே, என் இன்பத் தொடர்பிலே, நான் அமர நிலையையும் விண்ணுலகை யும் கண்டேன், க்ண்டேன், இன்புற்றேன், முத்த மிட்டேன், கவிதை செய்தேன்; அழகியின் அலை களிலே, நான் அலைந்தலைந்து உள்ளமுருக இன்ப உறுதிபெற்றேன், வெற்றி கண்டேன்.

பெண்மையின் கண்களைப் பருகப்பருக, கன் னத்தில் முத்தமழை பொழிந்து, மார்பின் இன்ப மர்ம ஆழத்திலே மறந்து துயிலும்போது, காதல், வாழ்கையின் ஓங்கிய மின்னல்கொடியாக மின்னவிடு கிறதல்லவா?

பெண்மையே ஒரு நிகரற்ற காட்சிதான்; பெண் அசையும்போதும், கூந்தலைச் சுருட்டி விரிக்கும் போது, கண்ணொளியை அள்ளி எறியும்போதும், புன்முறுவல் பூத்து நிற்கும்போதும், ஞானியும் மனம் உருகி சரணகதியடைந்து விடுவான், இது உறுதிதான். அந்த அளவுக்கு அழகியின் வேல் விழிகள், பேசிப்பேசி வெற்றி முழக்கம் செய் கின்றனவே!"

பெண்மையின் வீரத்தையும் தேசாபிமானத்தை யும், "Saint Joan" நாடகத்திலே ஷா பிரமாதமாகச் சித்திரித்திருக்கிறார். ஜோன் ஒரு வீரப் பெண் மணி; தெய்வத் தொடர்பு கொண்டவள்; பிரான்ஸ் தேசத்தையே, தன் வீரத்தால் காப்பாற்றிவிடு கிறாள். இவளை, ஒரு பேய் என்று சந்தேகித்து இறுதியில், நெருப்பில் எறிகின்றார்கள் நன்றிகெட்ட ஜனங்களும், பாதிரிகளும், அரசனும்.

ஜோன், ஆண் உடை தரித்த வீரப் பெண்மணி; பெண்மையிலே, ஆண்மைக் கோலங்கொண்ட அவ தாரம்; இறையொளியாக, பெண்மை வீரம் பேசி வெற்றி பெற்றது!

பிரெஞ்சுக் காதல் மேதை லாயர் பால்ஸக் (Balzac), பெண்மையின் எழிலையும் அந்தரங்கத்தையும் அளவுக்கு மிஞ்சி அலசித் துருவிக் காட்டுகின்றார்.

"பெண்கள், அளவுக்கு மிஞ்சி அலங்காரத்தையே விரும்புகிறார்கள்; அவளை, அலங்கரிக்க வேண்டிய பொருளையெல்லாம் சேகரித்துக்கொடுக்க வேண்டியது, காதலனின் கடமை; அலங்காரம் செய்து கொண்டு, கண்களை நாலாபக்கமும் சுழற்றிக் கொண்டு, காதல் வலை வீசிக்கொண்டு, ஆண்கள் அனைவரையும் ஏமாற்றி விடுகிறார்கள்.

ஓர் ஓவியக்காரன் தன் படத்தை எழுதி அழகு படுத்துவதுபோல், புருஷன் தன் மனைவியை அலங்கரிப்பதில் ஈடுபட்டு இறுதியில் ஏமாந்துபோகிறான். தன் உடலில் அழகு மெருகேற்றிக்கொண்டு, அவள் பல காதலர்களைத் தேடி அலைகின்றாள்; காமரச ராணியாகவே, எங்கும் சுற்றுகிறாள். பெண்களின் அழகை நம்பி, மோசம் போவது அறிவீனம். பெண்ணை, நம்பவே நம்பாதே!"

பெண்களின் மனதைத் திருப்தி செய்யவே முடியாது; திருப்தி செய்ய முயல்வது வீண் முயற்சி. இரு காதலர்கள், போட்டியிட்டுத் திருப்தி செய்ய முயன்றாலும், மூன்றாவது காதலன் அவர்கள் இதயத்தில் உடனே இடம்பெறுவான்.

காதல் வெறியிலே, பெண்கள் நாவல் படித்து 'நாயகன்' வேட்டையாடுவது, வேடிக்கையாக இருக்கும்.

ஒவ்வொரு பெண்ணும், ஓர் அலங்காரப் பேய், அலங்கோலப் பேய், நன்றிகெட்ட திமிர்வாதம்; அழகைக் காட்டி, நெஞ்சைச் சுடுகின்ற பேய்த் தோற்றம்; பெண் சிரித்தால், உலகமே அழிந்து விடும்."

பெண்மையின் அலங்கோலத்தையே வருணிக்கின்ற, பால்ஸக் பெண்மையின் இனிய தன்மையை மறந்தே பேசுகிறுன்; பெண்மையின் எழிலே, விஷமாகவே கருதுகிறுன், லாயர் பால்ஸக். ஏன்? அவனுடைய கண்ணுக்கு, அப்படிப் படுகிறது பெண்ணின் மாயத் தோற்றம். மேல்நாட்டில், பிரெஞ்சு பெண்களின் மன நிலேயே இது! வேறு அல்ல.

பெண்களேப் பற்றி, நமது அருமைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளே என்ன கூறுகிறுர்கள் :

" மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டு மம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா

" மண்ணக வாழ்வினே விட்டெழுந்து—மனம்
மாசிலா மாணிக்க மாயொ ளிர்ந்து
விண்ணக வாழ்வை விரும்பிடவே—நிதம்
வேண்டிய போதனே செய்பவ ரார்?

" அன்பினுக் காகவே வாழ்பவ ரார்—அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவ ரார்
இன்ப வுரைகள் தருபவரார்—வீட்டை
இன்னகை யாலொளி செய்பவரார்?"

'தேவி' கண்ட பெண்,—கற்பு நிறைந்த, அன்பு நிறைந்த, தாய்மை நிறைந்த இந்தியத் தமிழ்ப் பெண் அல்லவா?

கல்வியில் புதுவழி கண்டவர் :

## ரவீந்திரநாத தாகூர்

கல்வியைப் பற்றித் திருவள்ளுவர் என்ன கூறுகிருர்:

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

இந்த மூன்று குறட்பாக்களின் கருத்தும் யாருக்கும் நன்கு விளங்கும். இவ்வளவு அருமையாக குறளாசிரியர் அனுபவித்துப் பாடியிருப்பதை தாகூரும் நன்குஉணர்ந்தவரே, உண்மையான கல்வியின் அவசியத்தையும், இயற்கையாக கல்வியை போதிக்க வேண்டிய அவசியத்தையும், கல்வியை ஒட்டி வளருகின்ற ஒழுக்கத்தையும், கல்வியால் உலகமே இன்புற வேண்டும் எனற அவசியத்தையும் நன்கு உணர்ந்தவர், மெது வங்கக் கவிஞர் ரவீந்திரநாத தாகூர்.

சிறந்த லட்சியங்களை அடிப்படையாகக்கொண்டது, தாகூர் கண்ட புது முறைக் கல்வி.

மனதிலே பயமில்லாமல், சர்வ சுதந்திரமாக, இயற்கையின் சூழ்நிலையிலே ஜாதிமதச் சச்சரவின்றி தளரா முயற்சியின் அவசியத்தை எடுத்துக்காட்டும் முறையிலே ஹிம்சையின்றி, தாய்ப்பால் போன்ற தாய்மொழி மூலம், சிறந்த கல்வியைக் கற்று குழந்

தைகள் அன்பின் ஆதரவில் வளரவேண்டும், ஆசிரியர்கள் அன்னிய பாஷையைக்கொண்டும், பிரம்பைக் கொண்டும் குழந்தைகளை பயமுறுத்தி கல்வியைக் கண்டு வெறுக்கும்படி செய்துவிடக் கூடாது. களங்கத்தை அறவே ஒழித்து, நெஞ்சிலே அன்பையும் இன்ப ஒளியையும் பாய்ச்சும் பாணியிலே கல்வி முறை அமைந்திருக்க வேண்டும் என்பது தாகூர் கண்ட முடிவு.

இயற்கைக்கு விரோதமாக, செயற்கை முறையிலே கட்டாயமாகக் கல்வி கற்பிக்கபபடும் பள்ளிக் கூடங்களை தாகூர் அந்தமான் தீவு என்று உணர்ந்தார். பெர்னுட்ஷாகூட பள்ளிக்கூடத்தை ஒரு சிறைச்சாலை என்றே உணர்ந்தார். அறிவை இன்பமாகக் குழந்தைகளுக்கு ஊட்டவேண்டியது அவசியம். தேன் போனற அறிவை விஷம்போல் எடுத்துக்காட்டுவது சரியா? குழந்தைகளின் மனநிலையை அறிந்தல்லவா, பாடம்கற்பிக்க வேண்டும். பிறக்கும் குழந்தைகள எல்லாம் இறைவன் ஆசியோடுதான் பிறக்கினறன என்றும், மனிதனிடம கடவுள் இன்னும் வெறுப்படையவில்லை என்ற நல்லசெய்தியுடன் தான் ஒவ்வொரு குழந்தையும் பிறக்கிறது என்றும் தாகூர் நனகு உணர்ந்தே கூறியிருக்கிறார். இப்படியிருக்க, ஆசிரியர்கள் ஏன் பிரம்பை எடுத்துக் கொண்டு குழந்தைகளைக் குரங்காட்டம் ஆட்ட வேண்டும்.

தாய் மொழியில்தானே எந்தக் குழந்தையும் ஆரம்பத்தில் கல்வியைக் கற்கமுடியும், நெஞ்சிலே நிமிஷத்தில் ஒளிபோல் பாய்வது தாய்மொழி. அன்னிய பாஷை மூலம் கல்வி கற்பது மிகமிகக் கஷ்டம். இயற்கையாகக் கல்வி கற்க முடியாமல் செயற்கை முறையிலே கல்வியைப் புகட்ட முயலும்போது முயற்சி வீண் முயற்சியாகவே தோல்வியடைகிறது. அந்தந்த நாட்டு மக்களுக்கு அந்தந்த நாட்டு மொழி

களில்தான் உண்மை ஒளிவீசி நிற்கும். தாய்மொழியில் வெகு சுலபமாகத் தெரிந்துகொள்ளக்கூடிய உண்மையை, பல வருஷங்கள் முயன்றே அன்னிய மொழியில் தெரிந்துகொள்ள முடியும். ஆங்கில பாஷை வாயிலாகத் தெரிந்து கொள்ளும் உண்மையை, தமிழன் தமிழிலும், வங்காளி வங்க மொழியிலும், தெலுங்கன் தெலுங்கிலும், மலையாளி மலையாளத்திலும் மிகச் சுலபமாக-விரைவில் அறிந்து கொள்ள முடியும். நமது உடலிலுள்ள இரத்த ஓட்டத்திலே இருதயச் சுழற்சியிலே தாய்மொழி தாண்டவமாடுகிறது. தாய்மொழியாலே தாய்ப் பாலின் சுவையும் உறுதியும் ஆக்கமும்வளர்கின்றன. உண்மை, நேரே கண்முன் விளையாடுகிறது. நீண்ட விரிவுரையின்றி, உண்மை ஸ்படிகம்போல் மின்ன விடுகிறது. அன்னிய பாஷைமூலம் கல்விபுகட்டுவோமானல், உண்மையைக் குழந்தையின் உள்ளத்தில் விதைக்க முடியாதல்லவா? நமது நாட்டுப் பண்பாடு நமது வாழ்க்கையிலே நமது நூல்களிலே நமது இலக்கியங்களிலே, நமது சமபாஷணைகளிலே அலைபோல மேலே வந்து நிற்கிறது. ஐரோப்பியப் பண்பாட்டை நம்மைப்போன்றவர்கள், உணர முடியுமா? அனுபவிக்க முடியுமா? கொஞ்சம் தெரிந்தாலும் நமது குழந்தைகளுக்கு அன்னிய மொழி மூலம் புகட்ட முடியுமா? மிக மிக கஷ்டமான காரியம் இது. குழந்தை தன் தாயை அறிந்துகொள்வதுபோல, நமது தாய்மொழி மூலமே நாம் நமது தாய்நாட்டின் பண்பாட்டையும் சுலபமாக உணர்ந்துகொள்ள முடியும். தாய்மொழி மூலமே, நமது அறிவு நன்றாய் கவலையின்றி வளர முடியும். கவலையற்ற அறிவின் வளர்ச்சியால்தான்கவலையற்றவாழ்க்கையும்வளர்ந்து முன்னேற முடியும். நாம் இலத்தீன் படிப்பதும், வெள்ளையன் சமஸ்கிருதம் படிப்பதும் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது! நேராக நெஞ்சில் நுழைய நேரமாகிறது இது இயற்கைக்கு விரோதமான, பண்பாட்டிற்குவிரோதமான கல்வியேஆகுமல்லவா?

ஆனால் தாய்மொழி மூலம் கல்வி பயின்று உலக உண்மைகளை அறியும் ஆற்றல் வளர்ந்த பின், பிற பாஷைகளையும் கற்க முயலலாம். பிற பாஷைகளின் மூலம பல புதிய உலக உண்மைகளை அறியும் சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா? தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், ஜெர்மன் இலக்கியம், பிரெஞ்சு இலக்கியம், சீன ஜப்பானிய இலக்கியங்கள் எல்லாம் எப்படிச் சிருஷ்டி எழிலோடு இயங்குகின்றன, என்பதைநாம் Comparative Study செய்வதற்கும்வசதி ஏற்படுகிறதல்லவா? பல உலக இலக்கியங்களைப் படித்து இன்புறுவதில் இலக்கிய இன்பம், வாழ்க்கை இன்பம பன்மடங்கு பெருகிவிடுமல்லவா? தாகூரின் விஸ்வ பாரதி சர்வகலா சாலையில் உலக இலக்கியங்கள் எல்லாம் கலந்து ஜீவிக்கின்றன. உலகக் கலைகள் எல்லாம பரிணமிக்கின்றன, உலக இசைகள் எல்லாம் கலந்து இன்பம் ஊட்டுகின்றன. சாந்திநிகேதனிலும் ஸ்ரீநிகேதனிலும் கலையும் கைத் தொழிலும சிறந்த கல்வி முறையோடு வளர்கின்றன வல்லவா?

பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை என்பது ஒரு தொத்து நோயாகவே பரவிவிட்டது என்பதை தாகூர் உணர்ந்து உணர்ந்து வருந்தினார், தான மாணவனாக இருந்ததுமுதல் ஆசிரியராக மாறும் வரை பரீக்ஷை முறையையே வெறுத்தார். பரீக்ஷைக் காக ஒருவன் படிப்பது அறிவீனம என்று உணர்ந்தார். பரீக்ஷையில் மாணவர்கள் உள்ளத்தில் பயமும் திகிலும் உண்டாகி கற்ற விஷயங்கள் எல்லாம் மன தில் தங்காமல் மாயமாய் மறைந்துவிடுவது இயல்பு என்று தாகூர் உணர்ந்தார். பரீக்ஷையால் மாண வர்களின் உடல்நிலையும் மனநிலையும் மங்கி மடிந்தே போகும் என்பது உறுதி. பரீக்ஷையின் பயத்தால் மாணவர்கள் தன்னம்பிக்கையை இழந்துவிடுவார் கள் அல்லவா? அறிவுத் தாகத்தையும் இழந்து விடுவார்கள் அல்லவா? பரீக்ஷைக் கட்டாயத்லதயும்

தாகூர் அறவே ஒழிக்கமுயன்று வெற்றிபெற்று விட்டார். அறிவின் பயனாக சாந்தி நிலவவேண்டு மானால் பரீக்ஷைமுறை தொலைந்தே தீரவேண்டும்.

மாணவர்கள் இயற்கையின் ஆதரவிலே கல்வி பயிலவேண்டும் என்று தாகூர் விரும்பினார். மர நிழல்களிலே மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் படி ஆசிரியர்கள் அமைத்தார். காலையிலும் மாலை யிலும் வெய்யிலின்கொடுமைஅறியாத நேரங்களிலே தான் வகுப்பு நடந்தது. இயற்கைக்கு விரோதமாக இயந்திரம்போல கடிகாரத்தைப்பின்பற்றி பாடங்கள் போதிக்கப்படவில்லை. இயற்கை மனத்தோடு சுய நலமற்ற முறையிலே தியாக சிந்தையோடு எளிய வாழ்க்கையையே லட்சியமாகக்கொண்டு மாணவர் கள் கல்வி கற்று வந்தார்கள். சாந்தி நிகேதனத்தில் விஸ்வபாரதி சர்வகலாசாலையில் சாந்தியே எங்கும் நிலவி நின்றது. உண்மையே ஒளிவீசியது.

விஸ்வபாரதி குருகுலம் போன்று விளங்கு கிறது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு இயற்கையான இன்பமான கல்வித் தொடர்பும், ஆன்மத்தொடர்பும் வளர்வதைப் பார்த்தால் யாரும் வியந்து போற்ற நேரிடும். மேல்நாட்டாரும் விஸ்வ பாரதி சர்வகலாசாலைத் திட்டத்தைக்கண்டு ஆச் சரியப்பட்டிருக்கிறார்கள். சகல நாகரிகங்களும், சகல பண்பாடுகளும், சகல இலக்கியங்களும், சகல மதங்களும், சகல மொழிகளும், சகல கலைகளும் முர ணின்றி, ஒன்றி வளர்ந்து மலர்ந்த மணம் வீசு வதைக் கண்டால் யார்தான் வியந்து நிற்கமாட்டார் கள்? மாணவர்களுக்கு ஆசிரியர் ஒரு ஞானத்தந்தை யாகவே விளங்கி வழிகாட்டி நின்றார். கோபமில்லை, சண்டையில்லை, எங்கும் சாந்தியும் உண்மையின் தாண்டவமும்தான்.

கல்வியின் தத்துவத்தைப்பற்றி சுவாமி விவேகானந்தர் என்ன சொல்லுகிறார்? மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி எனப்படும். கற்கும் விஷயங்கள் நன்ருக ஜீரணமாகிப் பயன்பட வேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய் ஊக்கம் அளிப்பனவாய் மனிதத் தன்மை தருவனவாய் ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்கவேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களை நன்ருகக்கிரகித்து அவற்றை உங்கள் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊன்றிநிற்கும்படி செய்வீர்களாளுல், ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம்செய்வதைவிடப் பெரிய கல்விமான்களாவீர்கள். வெறும் விஷயங்களைச்சேகரிப்பது தான் கல்வி என்ருல் புத்தகசாலைகள் அன்ருே பெரிய மகான்களாயிருக்கும். அகராதிகளன்ருே ரிஷிகளாகிவிடும்.

விவேகானந்தரின் கல்வித் தத்துவம் பரிபூரணமாக விஸ்வபாரதி சர்வகலாசாலையில் தாகூரின் பெருமுயற்சி வாயிலாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்றே நான் எண்ணுகிறேன். தாகூரின் கல்வி ஸ்தாபனத்திலே கல்வி வளர்கிறது, கலைவளர்கிறது, இசை வளர்கிறது, உண்மை வளர்கிறது, ஒற்றுமை வளர்கிறது, வேற்றுமை மறைகிறது, மனம் வளர்கிறது, மனச்சாட்சி ஒளி வீசுகிறது. உலகம் கலகத்தின் எல்லைதாண்டி இடையருது முன்னேறுகிறது. தாகூரின் விஸ்வபாரதியிலே உலக மாணவர்கள் மரநிழலிலே அமைதியாக உட்கார்ந்து பாடங் கேட்பது ஒரு நிகரற்ற உலக விந்தைதான். இங்கே அறிவின் சிகரம் தெரிகிறது. உண்மையின் கோபுரம் ஓங்கி நிற்கிறது, கலையும் கடவுளை நோக்கி முன்னேறுகிறது. எல்லாம் கல்வியின் அகண்ட ஒளி விலாசமாகவே காட்சியளிக்கிறது.

விஸ்வபாரதியின் கல்வித் திட்டத்திலே ஆண்களும் பெண்களும் சம அந்தஸ்தோடு கல்வி பயில்

கிறார்கள். Co-Education அருமையாக - அமைதியாக, ஆனந்தமாக நிகழ்கிறது. மாணவ-மாணவிகளாக கல்வி பயிலும் முறை நூதன முறைதான். நல்ல மன வளர்ச்சிக்கும், அறிவின் முன்னேற்றத்துக்கும், கல்வி வாயிலாகவும கலை வாயிலாகவும் இவ்வாறு இயற்கையின் எழிலோவிய ஆதாவில் ஆண்களும் பெண்களும் இன்பமாகக் கல்வி கற்பதும அருமையான காட்சிதான.

கீழ்நாட்டுக் கல்வியும மேல்நாட்டுக் கல்வியும கலந்து வேற்றுமையின்றி வழங்கப்படுகின்றன. நமது நாட்டிலே ஆனமீக வளர்ச்சி அதிகம், மேல்நாட்டுக் கல்வியில் விஞ்ஞான முன்னேற்றம் அதிகம். இரண்டும் கலந்து உலக அறிவுக்கு வளர்சசியைத் தருவது உறுதி. இதையே நமது கவிஞர் குருதேவ் தாகூர் மிக ஆழமாக உணர்ந்து இரண்டையும் விஸ்வபாரதியில் கலந்து பரிமளிக்கும்படி செய்கிறார். ஸ்ரீநிகேதத்தில், கிராம முன்னேற்றத்துக்கு வேண்டிய அளவு கல்வியும் தொழிலறிவும் புகட்டப்படுகின்றன. கிராம வளர்ச்சியில்தான் மனித வளர்ச்சியே முன்னேற முடியும, கிராமம் சீரும சிறப்பும பெற்று முன்னேறினல்தான் பட்டணமும் தேசமும் உலகமும உன்னத நிலையடைய முடியும. பொருளாதார வளர்ச்சிக்கு கிராமமே அஸ்திவாரம். கிராமம் சீரழிந்தால், பட்டணம் வளர்ச்சி குன்றி மங்கிவிடும். உலகம், கலகத்தின் எல்லையையே எட்டிப்பார்க்கும். இதை எல்லாம் அருமையாக உணர்ந்தவர் நமது குருதேவ் தாகூர். கவிதையிலிருந்து விவசாயம் வரை ஆராய்ந்து அனுபவித்தவர், நமது கவிஞர் அல்லவா?

விஸ்வபாரதி சர்வகலாசாலை ஒரு International University. உலக பாஷைகள் அனைத்தும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. உலக சிந்தனைகள் எல்

லாம் இங்கே பிரதிபலிக்கின்றன. உலக மேதைகள் இந்த நூதன சர்வகலாசாலைக்கு அடிக்கடி வந்து சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள்.

இந்த சர்வகலாசாலையில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் மாணவர்களின் தனித் தன்மையும் மேதா விலாசமும் மங்காமல் வளர்வதற்கு இதில் வசதிகள் உண்டு. Individuality, Genius நல்ல முறையில் அங்கீகரிக்கப்பட்டு, வளர்ச்சியடைவதும் கல்வித் துறையில் புதிய சிறப்பைக் காட்டக் கூடியதுதான்.

Child Psychology குழந்தைகளின் மனநிலைகளை நன்றாய் அறிந்தே, சாந்திநிகேதத்தில் கல்வி புகட்டப்படுகிறது. குழந்தையின் இதயப்பண்பாட்டை அறிந்து மனப்போக்கின் தன்மையை அறிந்து கல்வி போதிப்பதால் உண்மையான அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. தாகூர் எழுதியிருக்கும் Crescent Moon என்ற பாடல்களில் குழந்தைகளின் அபூர்வ மன நிலைகளை கவிஞர் அருமையாகச் சித்திரித்திருக்கிறார். குழந்தைகளோடு நெருங்கிப்பழகி விளையாடி, குழந்தைகளின் தூய மனநிலைகளைக் கண்டு பிடித்தவர் குருதேவ் தாகூர். விளையாட்டு மூலமும் இசை மூலமும் சின்னஞ்சிறு கதைகள் மூலமும, நாடகங்களின் மூலமும் குழந்தைகளின மனத்தை உற்சாகப் படுத்தி கல்வி போதிக்கும்போது, புதிய போக்கில் அமைந்த கல்வி, கசப்பின்றி தித்திக்கவே ஆரம்பிக்கிறது. குழந்தைகள், கதை கேட்கவும கல்வி கற்கவும ஆசைப்படுகிறார்கள்.

விஸ்வபாரதி ஒரு இலக்கியப் பூங்காவாகக் காட்சியளிககிறது. உலகச் சிந்தனை மலர்கள் பரிமளத்தை வாரி இறைக்கின்றன. சகல கலைகளும் சம அந்தஸ்தோடு, இங்கே உல்லாசமாக உலவுகின்றன.

பெண்மை:

# வால்ட் விட்மனும்
## அவனது இலக்கியக் காதலி
# ஆன்ஜில் கிரைஸ்ட்டும்

வால்ட் விட்மன் சிறந்த கவிஞன்: அவனுடைய கவிதைகளில், உலகத்தையே ஊடுருவிச் செல்லும. தத்துவங்கள் மின்னலிடுவதைக் கண்ட ஆன்ஜில் கிரைஸ்டு, கவிஞனை நேரே கண்டு பேச ஆசை கொண்டாள். கவிஞனுடைய 'புல்லிதழ்' கவிதைகளை, அருமையாக உணர்ந்து அனுபவித்து லண்டனில் முககியமான பத்திரிகைகளில் விமர்சனம் செய்தாள். விற்காத நூல் விற்க ஆரம்பித்தது. விட்மன் வறுமையில் சிக்கிச் சுழலும்போது அமெரிக்காவில் நூல் விற்கவில்லை; லண்டனில் விற்பனை நிகழ்ந்தது. பணம் விட்மனுக்கு நல்ல தருணத்தில் உதவியாகப் போய்ச்சேர்ந்தது. விட்மன் ஜில் கிரைஸ்ட்டுக்கு நன்றி செலுத்த ஆசைப்பட்டான். விட்மனின் போட்டோ பிரதி ஒன்றை, கவிஞன் ராசெட்டி (W. M. Rossetti) ஆன் ஜில்கிரைஸ்டிடம் கொடுத்தான்.

விட்மன் கவிதைகளைப் படிக்கப் படிக்க, ஜில் கிரைஸ்ட் நெஞ்சில் இலக்கிய ருசி பெருகப் பெருக, இலக்கிய ருசியின் இறுதியில் காதல் தேன் பரிமளிக்க ஆரம்பித்தது. விட்மனைக் காதலிக்கவே துணிந்து விட்டாள்.

ஆன்ஜில் கிரைஸ்ட், 41வது வயதில் நான்கு குழந்தைகளுக்குத் தாயானபின், புருஷன் இறந்த நிலையில், இலக்கிய ரசனையோடு கூடிய ஆண் துணையை விரும்பினாள். அவளுடைய இலக்கிய

இதயத்தில், காதல் வெள்ளம் அலைபுரண்டடித்தது. விட்மனே தனக்குத் தகுந்த காதலன் என்று முடிவு செய்தாள். கலையார்வம் கொண்ட விட்மனுக்கு, பெண் துணையின் ருசி அவசியமாகப்பட்டாலும், வயது தனக்கு அதிகமாகி விட்டபடியால், அவளை மணம செய்து கொள்ளவில்லை. ஆண் - பெண் தொடர்பான, சிநேகிதன் - சிநேகிதி நிலையில் அரு மையாகப் பழகிவந்தார்கள்.

விட்மன் கவிதைகளில், சில நுட்பமான பகுதி களில், இலக்கியம் காமத்துப் பாலாகவே மாறியிருக் கிறதல்லவா! இதையெல்லாம் கலைக் கண்கொண்டு பார்க்கும் ஜில் கிரைஸ்ட்டுக்கு காதல் சிந்தனைகள் கொப்பளித்து இன்பவெறி ஏற்றின. அவள் சில நயமான பாடல்களை, மிக நுட்பமான முறையில் இலக்கியக் கண்கொண்டு இதய இறுமாப்புடன் அனுபவித்திருக்கிருள். அவளுடைய எதிர்பாராத காதல் உணர்ச்சிகளை யெல்லாம, இலக்கிய ரசனை யாகவே விட்மனுக்குத் தொடர்ந்த காதல் கடிதங் களாகவே எழுதித் தீர்த்துவிட்டாள். விட்மன காந் தம், அவள் நெஞ்சில் அலையடிக்கவே தொடங்கிவிட் டது.

" தங்கள் புல்லிதழ்க் கவிதைகளைப் படித்துப் பரவசமானேன். தங்கள் எழுத்தோவியம், நிகரற்ற இலக்கிய இரத்னம," என்று விட்மனுக்கு அருமை யான கடிதம எழுதிவிட்டு, கவிஞனையும கவிதை களையும் காதலிக்கவே ஆரம்பித்து விட்டாள். மீண் டும் எழுதினள். " தஙகள் கவிதைகளைப் படித்து இன்புறும்போது, என் ஆன்மாவைப் பரமாத்மா தழுவிக்கொண்டதுபோல் உணர்ந்தேன்; அப் போதே காதல் என்பதை அறிந்தேன்; அன்பை அறிந்தேன்; அப்போதே நான் மாறிப்பிறந்தேன்; புதுவாழ்வு பெற்றேன்."

1876ல் விட்மன் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் போது, லண்டனிலிருந்து ஜில்கிரைஸ்டு புறப்பட்டு அமெரிக்காவுக்கு விரைந்து வந்தாள்; கவிஞனுக்கு ஆவலோடு தொண்டாற்றினாள், கவிஞன் உடல் நலம்பெறும்வரை துணையாகவே இருந்துவந்தாள். கவிஞன் உள்ளம அவளுடைய அனபுச்சேவையைக் கண்டு நன்றியோடு மலர்ந்தது.

1885ல் ஆன் ஜில் கிரைஸ்ட் காலமானாள்; விட்மன் கண்கலங்கிக் கதறினான்: "அந்தோ என் கலைத் தோழி, என் சிறந்த சிநேகிதை மறைந்து விட்டாளே!"

விட்மனுக்கு தன் வாழ்நாளில் 66 காதல் கடிதங்கள் எழுதியிருக்கிறாள, ஜில்கிரைஸ்ட்; விட்மன் மூன்று கடிதங்கள் பதில் எழுதியிருக்கிறான். ஜில் கிரைஸ்டின் காதல் கடிதங்கள் அனைத்திலும், இலக்கிய வெறி நிறைந்த விமர்சனம், காதல் உலகிலே புகுந்து விந்தைக் குமிழிகளாகவே சிந்தனைத் தடாகத்தில் நிமிர்ந்து நின்று உலவும்; ஜில்கிரைஸ்டின் புலமை, அவ்வளவு ஆழம்பாய்ந்தது; இலக்கியம் பாயந்த இதயம், மார்பிலே மின்னிப் பொறிமத்தாப் பாக ஒளியடிக்கும். இதையே விட்மன் கண்டு அதி சயித்தான். இலக்கியமும பெண்மையும் கலந்த அபூர்வ சந்தர்ப்பங்களை, கவிஞன் கவ்விப் பிடித்துக் கொண்டு விடமாட்டானல்லவா?

### அவள் அனுபவித்த கவிதைகள் :

விட்மன் கவிதைகளிலே ஜில் கிரைஸ்ட், உயிர் விளக்கமும, காதல் விளக்கமும், ஆன்ம விளக்கமும, உலகத் தொடர்பின் காந்தமும் பொலிவுற்று விளங்கக் கண்டாள். ஒரு கவிஞன், வாழ்க்கையை இவ்வளவு நுட்பமாக உலகத் தொடர்போடு, இன்ப வெறியோடு எப்படி எல்லாம் எழுதிக்காட்டியிருக்கிறான் என்று ஆச்சரியப்பட்டாள்; ஆண் பெண்

தொடர்பை, சிறந்த கவிதை வடிவில் இவ்வளவு ஆழமாகக் கவிஞன் பரிசிலனை செய்திருப்பதை, இலக்கிய ரசனையின் சிறந்த அஸ்திவாரம என்றே கூறவேண்டும். 12000 வரிகளில் உலகம் கவிதை யாகப் புஷ்பித்திருக்கிறதே; கவிதையில் காதல் மலர்ந்திருக்கிறது; காதலில், குழந்தையும் குமுறிக் கொண்டு நிற்கிறதே; ஆண்மையிலே, பெண்மை எந்த அளவு அந்தரங்கமாகத் தொடர்பு கொண்டு, தொங்கிக் கொண்டே இன்ப லீலைகளுக்கு ஏங்கிக் கொண்டு ஆவலாகத் துடிக்கிறது; இதயத் துடிப்பு, இலக்கியத் துடிப்பாக, கவிதை ஆலயத்தில் கொலு வீற்றிருக்கின்றதே; விட்மன் உள்ளத்தில், எத்தனை கோடி இன்பங்கள் சுழன்று சுழன்று 'புல்லிதழ்க் கவிதை'களாகப் பாடிக்கொண்டேவந்திருக்கின்றன; அபூர்வமான, அழகான, இலக்கிய ரகசியங்கள், கவிதையின் இதயத்திலே, புன்முறுவல் பூத்து நிற்கின்றனவே; என் இலக்கிய உள்ளம், கவிஞனின் இதய ரகசியத்தை அறிய ஆவலாகத் துடிக்கிறதே, ஐயோ! என் செய்வேன்? காதல், காதல், காதல்!

கடவுளையும மரணத்தையும் பற்றி, கவிஞன் மிக நுட்பமானகருத்துக்களை வெளியிட்டிருக்கிறுன். காதல், வீரம் இரண்டும் அருமையாக மலர்ந்திருக் கின்றன. மரண முனையிலே, கடவுளின் கண்பார்வை யிலே, வாழ்க்கையின் சஞ்சலங்கள் இறுதிஎல்லையில் நின்று கெஞ்சிக் கூத்தாடுகின்றனவே. மரணத்தில் நிராசையான முடிவு வந்தேவிடுகிறது. விட்மன், வேதாந்தியாகவும் கவிதை பாடியிருப்பதும் வியக் கத்தக்கது. உண்மை, காலம், நிராசை, தியாகம், தொண்டு, அறிவு விளக்கம, எல்லாம் விட்மன் கவிதைகளிலே கமபீரமாகப் பேசுகின்றனவே; எந் தப்பகுதியும், சொல்வன்மையுடன் மிளிர்கின்றதே, காதல் முதல் சாதல் வரை, கவிதைகுரல் எடுத்துப் பேசுகிறதே; இனபமும,துன்பமும் வித்தியாசமின்றி விட்மன் கவிதைகளிலே தோழமை கொண்டு திரி கின்றனவே.

விட்மன் மனம், மிக உயர்ந்த நிலையிலிருந்தல்லவா, இவ்வாறு சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது.

விட்மன் பெருமையையும், கவிதையின் அந்தரங்கத்தையும், காதலின் அருமையையும் என்னால் மறக்கவே முடியவில்லையே!

இலக்கிய பூங்காவில் உலவுகின்ற நான், விட்மனைக் காதலிப்பதே சாலச்சிறந்தது. இலக்கிய ஆன்மாக்கள், இன்பப்பொய்கையில் நீந்தி விளையாடலாம். விட்மன், அமரன்.

சிறந்த கடிதங்களின் உள் அந்தரங்கமான சாரம் இதுவே:

அருமைக் கவிஞரே!

தங்கள் கவிதைகள் எல்லாம் அருமையான நிகரற்ற சாகா வரம்பெற்ற கவிதைகள்; இயற்கையின் எழிலோடு, இலக்கிய மணத்தோடு அருளாவேசத்தோடு எழுந்து மின்னுகின்றன, தங்கள் கவிதா ரத்னங்கள்.

இயற்கையின் ஜிலுஜிலுப்பிலே, ஆண் உடலும், பெண் உடலும், எத்தனையோ வேற்றுமையான தோற்றத்தோடு, உணர்ந்து, கலந்து ஒன்றி இன்பம் துய்க்கும்போது, மனித வாழ்க்கைக்கு உடலின்பமும் மிகமிக அவசியம்தான் என்பதை தாங்கள் உணர்ந்தே அபூர்வமான கவிதைகள பாடியிருக்கிறீர்கள்.

<u>சிறந்த காதல் வாழ்க்கைக்கு</u>, <u>இலக்கியம் அவசியம்</u>, <u>இசை அவசியம்</u>, <u>ரஸனை அவசியம்</u>, <u>இன்ப உணர்ச்சியைத் தூண்டும் சகல பண்டங்களும் அவ</u>

சியம்தான்; எல்லாம் கலந்த நிலையில், ஆண்-பெண் ஐக்கியத்தில், ஆன்ம விஸ்தீரணம் உடனே நிகழ்கிறதல்லவா?

மரணத்துக்கும் அஞ்சாத தங்கள் மகோன்னத உள்ளம், என் நெஞ்சில் பாயும்போது, தங்கள் காதல் கவிதைகளின் மகோன்னத அந்தரங்கத்தையே அப்படியே உணர்ந்து, உள்ளம் மலர்ந்து உங்களையே தொட்டு நிற்க ஆசைப்படுகிறேன்.

உடலைத்தொட்டு நிற்கும்போது விண்ணுலகமே என் கண்முன் விரிந்து சுடரோவியமாகவே மலர்ந்து விடுகிறது. தங்கள் கவிதை உள்ளம், உடலாவிக் கலப்பையே உறுதியாகத் தூண்டுகிறதே, என் செய்வது? நெருங்கி நிற்பது நிமிஷ விந்தைதானே? கலந்து உறவாடுவது, காதற்கொடிதானே!

தங்கள் கவிதைக் காதலி

**ஆன் ஜில் கிரைஸ்ட்** *

* ஜில் கிரைஸ்ட் 1885 நவம்பர் 29ல் இறந்த செய்தி கேட்ட விட்மன் நெஞ்சம் கலங்கிப்போய்விட்டது; கலைக் காதலி, கவிதைக்காதலி மறைந்ததைக் கேட்டதும், கவிஞன் உள்ளம் துணையின்றிக் கதறியது.

விட்மன் கவிதைகளின் தத்துவத்தை அருமையாக உணர்ந்து அனுபவித்த ஆன்ஜில் கிரைஸ்ட் விட்மனுக்கு எழுதிய கடிதங்களில், காதலும் இலக்கிய மணமும் கலந்து புரளுகின்றன. முதலில் ஆன்ஜில் கிரைஸ்ட் எழுதிய முக்கியமானகடிதங்களை மாத்திரம் கவனிப்போம். அதன்பின் விட்மன் என்ன பதில் எழுதினான் என்பதை ஆராயலாம்.

## காதல் கடிதங்கள்

### 1

May 1870

அருமைக் கவிஞரே,

தங்கள் கவிதைகளைப் படிக்கும்போது, என் நெஞ்சில் இலக்கிய வெறி கும்மாளியிடுகிறது; தங்களுடைய ஆன்ம அறிவு, கவிதையின் ஆழத்தை அலங்கரிக்கும்போது, என் நெஞ்சில், காதற்கனல் இலக்கியத் தேனாகவே மாறிவிடுகிறது.

தங்கள் கவிதையின் நடை, மின்னல் ஆறாகவே குதித்தோடுகிறது; தங்களுடைய கடல் பாட்டு, கண்ணீர்க்கீதம், முரசுப்பாட்டு, மரணகானம், காதல் கீதம், சிருஷ்டி எழில், உடல் பாட்டு, ஆன்ம இசை எல்லாம் மிக மிக அருமையாகச் சுழன்றோடு கின்றனவே.

உலகளாவிய சிந்தனையாகவல்லவோ, தங்கள் புல்லிதழ்க் கவிதைகள் விரிந்திருக்கின்றன; சிருஷ்டியில் உள்ள வில்லங்கம் அனைத்தையும், சிருஷ்டியில் உள்ள ரகசியம் அனைத்தையும தாங்கள உணர்ந் துணர்ந்து பாடித் தீர்த்துவிட்டீர்களே! கவிதையுலகில், தங்கள் உள்ளம் இவ்வளவு ஆழமாகப் பாய்ந்து விட்டதே!

காட்டில் எவ்வளவு இன்பம், எவ்வளவு சுதந்திரம் ஒரு ஜீவராசிக்கு உண்டோ, அந்த அளவு தங்கள் கவிதையுலகில் நான் இன்பம் அனுபவிக்கிறேன்.

தங்கள் கவிதைத் தேனைக் குடிக்கும்போது, தங்கள் முகத்தை ஆசையுடன் பார்க்க என் இதயம் துடிக்கிறதே! என்ன செய்வேன்!

தங்கள் கவிதை உலகிலே, காதல் மொட்டுகள் மலர்ந்து, மணக்கின்றனவே! இயற்கைக் கடலும், இதயக் கடலும் கலந்து நாதமிடும்போது, காதலின் எதிரொலி கேட்கவில்லையா?

தங்கள் கவிதைகளில் நான் அனுபவிக்கும இலக்கிய வெறி, மிக மிக நுட்பமானது; மிக மிக ஆழமானது; செவிநுகர் கனிகளாக மாறிவிடுகின்றன, தங்கள் கவிதை மலர்கள்; தங்கள் பாடல்களைப் படிக்கும்போது தங்களை நெருங்கிப்பேச அவா எழுகின்றது; தங்கள் வடிவத்தைதக கண்டு தங்கள் கண்களைப்பருகி, தங்களை ஸ்பரிசிக்கும் ஆசையே சூறு வளியாகப் புறப்படுகின்றது.

தங்கள் கவிதைகளில், தாங்கள் திரிகால ஞானியாகவே காட்சியளிக்கிறீர்களே? உங்களை நேரில் சந்தித்தால், என் உள்ளம் சாந்தியடையும்.

நான் தனியே ஆண் துணையின்றித் தவிக்கின்றேன்.

தங்கள் அன்புக் காதலி

ஆன்ஜில் கிரைஸ்ட்.

2

3—9—1871.

அருமைக் கவிஞரே,

தங்களுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம், என் உள்ளம் கரும்பெனத் தித்திக்கிறது; சிந்தனைகள் தேன் துளிகளாக என் நெஞ்சில் குவிகின்றனவே!

தங்களை என்னால் மறக்க முடியவில்லையே, ஏன்? தங்கள் கவிதைக் கரும்பிலே, காதல் தேன் விளைகிறது; தங்கள கவிதை இதழ்களிலே, ஆண்-பெண் ஆன்மாக்கள் கலந்து உறவாடுகின்றன. மானிட உடலே, ஒரு இயற்கை விந்தையாகக் காட்சியளிக்கிறதல்லவா? காதலன்-காதலி-குழந்தைச் செல்வம, எல்லாம் தத்துவ விளக்கமாகவே பின்னி விளையாடுகின்றனவே!

தங்கள் கவிதைகளைப் படித்துவிட்டால், சகல கவலைகளும் ஒழிந்தேபோகும்; அத்தகைய அமரத் தன்மை கொண்டது; தங்கள் இலக்கிய இதழகள தொட்ட இடமெல்லாம தித்திக்கும இயல்புடையது, தங்கள் கவிதைக் கரும்பு!

உலக சிருஷ்டி லீலைகள் அனைத்தையும் தாங்கள் மிக ஆழமாக உணர்ந்து கவிதைத்தங்கமாகவே தங்கள் இலககிய இதயத்தைமாற்றியிருக்கிறீர்களே? யார்தான் இதைக்கண்டு அதிசயப்படமாட்டார்கள்?

தங்கள் உள்ளத்தில், காதல், சல்லிவேர் முதல் கனியின் தித்திப்புவரை மரமாகவே ஓங்கி வளர்ந்து பலன் தந்திருக்கிறதே!

தங்கள் இதயத்தில், கவிதை அருளாவேசத்தோடு, இன்ப அதிர்ச்சியோடு விரிவாக ஆழமாக மலர்ந்திருக்கிறதல்லவா? என் பெண்மை யுள்ளத்தில், தங்கள் கவிதைக் கதிர்கள் பாய்ந்து ஒளிவீசுகின்றனவே!

தங்கள் கவிதையில், உலகமே சுழல்கிறது; சூரியன், சந்திரன், கடல், ஆறு, புல், காடு, கானப் பட்சிகள், காதல் ஜோடிகள, தேன் கூடுகள, குழந்தையின் மழலை, யுத்தப் பாட்டு, முத்தமிடும் விந்தைகள், இலக்கிய மத்தாப்பு, சுழலும கானகம், குயில்

பாட்டு, மனோஇடம், மனச்சாட்சி, உடலாவிக்கலப்பு, மரணத்தின் மர்மங்கள், தெய்வ ஒளி, ஆண்-பெண் ஐக்கியம் எல்லாம் தங்கள் கவிதைக்குன்றில் நின்று விளையாடுகின்றனவே!

அத்தகைய இன்பங்களைக் காணும்போது, தங்களை நேரில் கண்டு பேசவேண்டிய ஆசை என் நெஞ்சைப் பிய்க்கின்றதே!

என் செய்வேன் கவிஞரே!

சொல்லின் செல்வனாக விளங்கும் தங்கள் உள்ளத்தோடு உறவாடவே ஆசைப்படுகிறேன் ஐயோ, ஆசைப்படுகிறேனே!

தாங்கள் மனமிரங்கி, தங்களை நெருங்கி தரிசிக்க அனுமதி கொடுக்கலாமா?

நமது நட்பு, காதலாகவே மலர்ந்து விட்டால், என் அதிர்ஷ்டம்தான்!

தங்கள் தியாகத்தால், தங்கள உறுதியான உடல்கூட நோய்வாய்ப்பட்டு மெலிந்துவிட்டது; பல போர்வீரர்களை ரணகளத்தில் காபபாற்றியதால், தங்கள் உடல் உருக்குலைந்துமங்கிவிட்டது; இருபது ஆண்டுகளாக, வாதத்திலும வறுமையிலும் சிக்கித் தவிக்கும் தங்களைபபோனற தியாகிக்கு என்னால் இயன்ற உதவியைத் திரிகரணசுத்தியாகச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

அறிவின் ஆவேச அந்தராத்மாதான் கவிதை-இதைத் தாங்கள் அனுபவித்திருக்கிறீர்கள்; நானும் தங்கள் கவிதைகளை பல லண்டன் பத்திரிகைகளில் விமர்சனம் செய்திருக்கிறேன்.

இருந்தாலும் தங்களை நேரில் கண்டு தங்களுக்குத் தொண்டு செய்தால்தான், என் ஆன்மா சாந்தியடையும்.

தங்கள் சிநேகிதி
ஆன்ஜில் கிரைஸ்ட்.

3

23—10—1871.

அருமைக் கவிஞரே,

என் காதல் உள்ளம் கரைகடந்து தத்தளிக்கிறது. ஆண்-பெண் தொடர்பிலே, தழுவி முத்தமிட்டு இன்புறுவதும் நிகரற்ற இன்பம்தான்; இதைத் தங்கள் கவிதை உள்ளம் மறுக்கமுடியுமா?

நான் முதலில் மணஞ்செய்துகொண்ட கணவர், எனக்குப் பூர்ண இன்பம் ஊட்டவில்லை; அவர் நல்லவர்தான், நல்ல இதயம் படைத்தவர்தான், ஆனால், அவரிடம் கவிதையுள்ளமோ. கலையார்வமோ சிறிதும் கிடையாது! மூளையில்லா இதயம், முழு இதயம் ஆகுமா? அறிவு கலந்த அன்புதானே, நிகரற்ற இன்பமாகக் காதல் உலகிலே பரிமளிக்க முடியும்? கவிஞன் காதல்தானே, கற்கண்டாக உறுதிபெறக் கூடும்!

பெண்களை மயக்க ஆண்களுக்கும் சக்தி அதிகம் வேண்டும்;

பெண்கள் லேசில் எதற்கும் உடன்பட மாட்டார்கள்;

ஆண்களுக்கு உடல்வலி வேண்டும், இதயக் கனல் வேண்டும்; இலக்கிய வெறியும் வேண்டும்; வாழ்க்கையிலே, பெண்களை மயக்கி வெற்றிபெறும் ஆற்றலும் இயற்கையிலே அமைந்திருக்கவேண்டும்.

என்னை எல்லா வகையிலும் திருப்திசெய்ய முடியாத என் கணவன் இறந்துபோனாலும், தங்களுடைய கவிதையுள்ளத்தையும், முகப்பொலிவையும், கண்ணொளியையும், புருவ காம்பீர்யத்தையும், உடலுறுதியையும் கண்டு தங்களை மிகமிக ஆழமாக, உறுதியாக, என்றும் பிரியக்கூடாது என்ற நிலையில் தங்களைக் காதலிக்கிறேன்.

என் போன்ற இலக்கிய வெறிபிடித்த பெண்ணின் காதலை, தாங்கள் உடனே அங்கீகாரம் செய்யத் தயாரா? சொல்லுங்கள், கவிஞரே!

மௌனம் சாதிக்காமல் உடனே பதில் எழுதுங்கள்.

தங்கள் கவிதைகளைப் படிக்கப் படிக்க, அவைகளை நான் விமர்சனம் செய்யச் செய்ய, என் காதல் வெறி வானளாவி உயர்ந்து விட்டதே!

காதல் கடிதங்கள், காதல் அலாரமாக தங்கள் உள்ளத்தில் குமுறி எழவில்லையா? தயவுசெய்து என் காதலை உடனே அங்கீகாரம் செய்து, பதில் எழுதும்படி மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன்.

என் மார்பிலே, காதல்தீ மத்தாப்பிட்டுத் துடிக்கிறது, கவிஞரே!

தங்களைத் தொட்டு இன்புறத்
துடிக்கும் காதலி
ஆன்ஜில் கிரைஸ்ட்.



UNIVERSITY EXTENSION LIBRARY
1153
031:6

## 4

[ ஆங்கிலக் கவிஞன் ராசெட்டிக்கும், ஆன்ஜில் கிரைஸ்டுக்கும் கவிஞன் விட்மனின் கடிதம் ]

வாஷிங்டன்
9—12—1869

அருமை நண்பர் ராசெட்டி,

ஆன்ஜில் கிரைஸ்டு தங்களுக்குஎழுதிய கடிதத்திலிருந்து சில நயமான இலக்கிய ஆராய்ச்சிப் பகுதிகளை, எனக்காகத் தாங்கள பிரதிசெய்து அனுபபிய தற்கு மிக மிக நன்றி.

என் கவிதைகளின் ஆழத்தையும் அழகையும் உண்மையையும், இவ்வளவு நயமான முறையில் லண்டன் பெண்மணி எழுதியிருப்பதை நினைத்தால், என் உள்ளம் உவகையால் கூத்தாடுகிறது.

என் இதய பாவத்தையும், என் கவிதையின் அந்தரங்கத்தையும் இந்த உயர்ந்த முறையில் இலக்கிய விமர்சனம செய்திருப்பதும் என் அதிர்ஷ்டம தான். லண்டனில் என நூலுக்குச் செல்வாக்கு வருவதற்குக் காரணம் ஆன்ஜில் கிரைஸட்தான்.

இத்துடன் இரண்டு போட்டோ பிரதிகள் அனுப்பியிருக்கிறேன். ஒன்று ஆன்ஜில் கிரைஸ்டுக்கு, மற்றொன்று தங்களுக்கே.

இந்தக் கடிதத்தையும் ஆன்ஜில் கிரைஸ்டிடம் கொடுத்து உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

- வால்ட் விட்மன்.

## 5

[ ஆன்ஜில் கிரைஸ்ட் வால்ட் விட்மனுக்கு எழுதிய கடிதம் ]

புரூக் பாங்க்
சர்ரே
23 Oct. 1871

அருமை நண்பரே,

தங்களை நெருங்கி வாழவேண்டிய தொடர்பை நினைந்து நினைந்து மனந்தாங்க முடியாமல் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

ஒவ்வொரு நிமிஷமும் தங்கள் ஞாபகம்தானே. தங்களை மறக்கமுடியாத நிலையில், தங்கள் ஆன்மாவோடு தொடர்புகொண்டு வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய ஆசை என நெஞ்சில் பொங்கிக் கொண்டிருக்கிறது.

தங்களை நினைத்து நினைத்து, தங்கள் கவிதை நூல்களை என் நெஞ்சிலே அணைத்துக்கொண்டு, மனம சாந்தியடையாமல் தவிக்கிறேனே! தாங்கள் இதை உடனே உணர்ந்து, மனஉறுதியோடு காதல் கடிதம் எழுதுவீர்கள் என்றே எண்ணி எண்ணி இனபுறுகிறேன்.

நமது காதல் தொடர்பால், தங்களுக்கு நிகரற்ற சிறந்த குழந்தைகளைப் பெற்றுத்தர முடியும் என்றும், இன்னும் என்னிடம் இளமை குமுறிக்கொண்டிருக்கிறதென்றும் தங்களுக்கு உறுதிகூறுகிறேன்.

இறைவன் அருளால், நாம் இருவருக்கும் அருமையான குழந்தைகள் உண்டானல், நமது லட்சியத்தின் வெற்றி எவ்வளவு சிறப்பாக வாழ்க்கையிலும் மின்னலிடும்?

தங்கள் காதலி
ஆன்ஜில் கிரைஸ்ட்.

## 6

[ வால்ட் விட்மன் ஆன்ஜில் கிரைஸ்ட் டுக்கு எழுதிய கடிதம் ]

3 Nov. 1871

அருமைச் சிநேகிதி,

தங்களுக்குக் கடிதம் எழுதுவதும் மிக மிக நிதானமாகவே எழுதவேண்டியதிருப்பதால், கால தாமதம் ஏற்பட்டுவிட்டது.

நான் தங்களுக்கு எழுதும் கடிதத்தால், நாம் இருவருக்கும் நன்மையாகவும் பயன்படக்கூடிய முறையிலும் விஷயங்கள் அமைய வேண்டுமல்லவா?

தங்களுடைய அன்பையும் காதலையும் நான் உணராமலில்லை; என் காதலையும் இந்தக்கடிதத்தில் ஒப்புக்கொண்டே எழுதுகிறேன. தங்கள் கடிதம் நீண்டிருக்கும்போது, என் கடிதம் ஏன் இவ்வளவு சிறிதாக இருக்கிறதென்று தாங்கள் ஏதாவது வருந்துகிறீர்களோ?

என் கவிதை நூலே அருமையான கடிதம் போன்றதுதானே; தங்கள் உள்ளத்தோடு நேரே உறவாடுகின்ற கவிதைக் கடிதம் அல்லவா, என் 'புல்லிதழ்க் கவிதைகள்' (Leaves of Grass) அதனுள் என் உடலும் ஆன்மாவும்கலந்துதானே மிளிர்கின்றன; இந்த நூலைப்படித்த இன்ப வெறியில் தானே, தாங்கள் எனக்கே காதல் கடிதம் எழுதத் தொடங்கிவிட்டீர்கள்.

நமது அருமையான தொடர்பு, இன்பத் தொடர்புதான்; இருவருக்கும இன்பம் ஊட்டும் தொடர்புதான், ஆம்!

விட்மன்.

# பேகன் சிந்தனைகள்

## (பேகன் 1560—1626)

66வருஷங்கள் வாழ்ந்த இவர் பல பாஷைகளின் உண்மைகளைக் கண்டவர்; லத்தீன் பாஷையில் மேதை; சட்ட நிபுணர்; வாழ்க்கையின் ஆழத்தையும் அபூர்வமான தன்மையையும் நேர்முகமாக அலசி ஆராய்ந்தவர்; ராணி எலிசபெத் காலத்தில், சிறந்த அரசாங்கப் பதவிகளையும், செல்வாக்கையும் செல்வத்தையும் அடைந்தவர்; அறிவை விசாலப்படுத்தும் முறையிலும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் முறையிலும் சிறந்த கட்டுரைகள் எழுதியிருக்கிறார்; நன்ருய்ப் பழுத்த அனுபவங்களை, சிறந்த நடையில் கட்டுரைகளில் ஆணித்தரமாக எழுதியிருக்கிறார். அவர் கண்ட உண்மைகள், உறுதியான, என்றும் நின்று நிலவும் ஆற்றல்பெற்ற பழமொழிக் களஞ்சியம் என்றுகூடச் சொல்லிவிடலாம். அவருடைய வசனம், ஷேக்ஸ்பியர் நாடகத்தில் உள்ள வசனம் போல, ஆழ்ந்த கவிதை மணக்கும் மினுமினுல் நடையில் அமைந்திருக்கிறது கல்லூரிப் படிப்பில், பி. ஏ. டிகிரி வாங்காமலே படிப்பை முடித்துக் கொண்டு, சட்டம் படித்து, லாயராகத் தொழில் கொஞ்சகாலம் நடத்தி, அரசாங்க உத்தியோகம் சிறந்த முறையில் திறமையால் பெற்று முன்னேறி, வாழ்க்கையின் இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்து, கடன் தொல்லை வரும்போதெல்லாம் அதிகமாக லஞ்சம் வாங்கி, இறுதியில் குற்றஞ்சாட்டப்பட்டு, 40,000 பவுன்கள் அபராதம் கட்டி, ஓர் இரவு சிறை வாசமும் அநுபவித்து, 66-வது வயதில் மறைந்தார்.

அவர் 58 கட்டுரைகள் எழுதியிருக்கிறார்: தொடர்ந்த சிந்தனைக் கடல்; வாழ்க்கையின விபரீதங்களை, கண்ணால் கண்டபடி அருமையாக எழுதியிருக்கிறார். பல கோணங்களில் நின்று, ஒருவன் மனித வாழ்க்கையை கவனித்தால், என்னென்ன கஷ்டங்களும, கலக்கங்களும், சஞ்சலங்களும், விபரீதங்களை ஒதுக்கித் தள்ளும மன உறுதியின் கூர்மைகளும் தோனறுமோ, எல்லாம சட்டத்தின் உட்பொருளோடு பேசுன கட்டுரைகளில் மிளிர்கின்றன; சில இடங்களில், அவர் யோசனைகள் தொடர்பாகக் கூறி, சந்தாபபவாதிகளின வில்லங்க மனபபான்மைகளையும எடுத்து உறுதியாக விளக்குகினறார். பேசுன புலமை அருமை; அறியாமையை அகற்றும், அபூர்வ ஆற்றல் பெற்றது பிழைகளை மீண்டும செய்யாமல், வழிவகுத்துத் தெளிவுரை சொல்லும் போது, யாரும ஆச்சரியப்பட வேண்டியது தான. அவர் மனம, அகண்ட உலகம்; அவர் அறிவு, ஒரு அநுபவ உலகம.

அவர் எழுதியிருக்கும் அபூர்வ கட்டுரைகள்: உண்மை, மரணம், மதத்தின் உள ஒற்றுமை, பழி வாங்கும் மனப்பான்மை, துர்அதிர்ஷ்டமும் துனபமும், போலித்தனம், பெற்றோரும குழந்தைகளும், திருமணமும தனிவாழ்க்கையும, பொறுமை, காதல், பெரும்பதவி, தைரியம், நன்மையும் இயற்கையின் நல்ல குணமும், பெருந்தன்மை, ராஜத்துரோகமும் துன்பமும், தெய்வத்தை நம்பாதநிலை, மூடநம்பிக்கை, பிரயாணம், அரசாங்கம், யோசனை, தாமதம, தந்திரம், ஆழ்ந்த அநுபவஅறிவு, மாறுதல்கள, நிறைவேற்றுதல், போலி அறிவு, சிநேகம், செலவிடும முறை அரசியலின் உயர்வும் தத்துவமும், சுகாதாரம், சந்தேகம், சொல்வன்மை, பயிரிடுதல் செல்வம், ஞானிகளின் முன்னுரை, லட்சியமோகம், வெற்றியும் வேஷமும், மனிதப் பண்பு, பழக்கமும் கல்வியும்: அதிர்ஷ்டம், வட்டித்தொழில், இளமையும் முதுமை

யும், அழகு, குரூரம், கட்டிடங்கள், தோட்டங்கள், வியாபாரத் தொடர்பு, நண்பர்களும தன்னைப் பின் பற்றுபவர்களும, வழக்கர்டுதல், கல்வியின் தன்மை, வகுப்புவாதம, சடங்குகளும் மரியாதைகளும, முகஸ்துதி, இடமபம, பதவியும செல்வாக்கும், நீதிஸ்தலம், கோபம, பொருள்களின் மாறுகின்ற நிலைகள், அறிவின் அகண்ட வளர்ச்சி. அவருடைய கட்டுரைக் கோவையில், அவருடைய சிந்தனைச் செல்வங்கள் குவிந்து கிடக்கின்றன. திருக்குறளைப்போல, வாழ்க்கைப் புயலில், அவரும் ஒரு ஞானவிளக்காக நின்று மன அமைதியைத்தந்து வழிகாட்டுகின்ருர். சிந்தனை உலகிலே, பேகன் ஒரு பெரியார்: எண்ணங்கள், எங்கும் பெருக்கெடுத்து ஓடுகின்றன. சூத்திர நுட்பத்துடனும், பழமொழியின் போழத்துடனும், அவருடைய கட்டுரை, கலங்காமல் உறுதியாக நின்று நிலவும்.

## காதல்

வாழ்க்கையைவிட, காதல் அகண்ட சக்திவாய்ந்தது. மேடையிலே நடிப்பதற்கு, காதல் தகுந்த பொருள்தான். மோகத்திலுமசரி சோகத்திலும்சரி, காதல் விரிந்த சக்திவாய்ந்தது; நாடக மேடைக்கு அதிகமான காம்பீரியமும அழகும் தரக்கூடியது. நாடக மேடையில் இன்பந் தரக்கூடிய காதல், வாழ்க்கையிலே சுழலாகவும் புயலாகவும் வந்துவிடுகிறது எந்த மேதாவியும், காதல் உலகிலே, மூதேவியாகிவிடலாம. காதலின் கொடிய தன்மை, அவ்வளவு ஆழமாக மனிதத் தன்மையையே தாக்குகிறது. மனித உயிரையே போக்குகிறது; கடவுளைத் தரிசிக்க வேண்டிய கண்ணுல், காதல் சின்னங்களைக் கண்டு, மனிதன் மனங்கலங்கி, இலட்சியத்தையே இழந்து, இதயம் துடிக்க பரிதாபகரமான நிலைக்கு இறங்கி விடுகிருன்; காதலில் சிக்குண்ட மனிதன், காதலியின் அழகை அபாரமாகப் புகழ்ந்து கொண்டே மனமழிந்து மயங்கி மண்ணில் மடிகிருன்;

காதலிக்க ஆரம்பித்தாலே, அறிவு மங்கி மழுங்கிப் புகைந்தோடுகிறது; காதல் உலகிலே, எந்த மேதாவியும் மக்காகவே மாறிவிடுகிருன். அறிவை அழிப்பது, காதல் தீ. மன்மதன் அம்புகள், மனித அறிவையே அறுத்தெறிகின்றன. அறிவில் சிறந்த ஒருவன், காதல் உலகில் புகுந்து, விபரீத வேதனைகளில் கும்மாளியிடும்போது, தன்னறிவை இழந்து, அறியாமையின முதற் குழந்தையாகவே மாறிவிடுகிருன்.

காதலோடு மதுவும் சேர்ந்தால், மிக விநோதமான முடிவுக்கு வந்து விடுவான, பித்துப் பிடித்த மனிதன். காதலை மறந்து, காதலைத் தியாகம் செய்ய முன்வரும் மேதை, மன உறுதியால் பொதுநலத் தொண்டில், தருமவிரிவில், பொலிவுற்று விளங்குவான். அவனுடைய மனத்தில் ஈரம் உண்டு. இரக்கம் உண்டு.

காதல் உலகில், உடல் இன்பக் கலப்பில் குழந்தைகள் பெருகும்; காதலில் நட்புக் கலந்தால், காதல் உலகம் பூர்த்தியடையும்; பிடிவாதமாகக் காதலிகக முயன்ருல், மனித சமூகம் ஒளியிழந்து மக்கி மடிந்தே போகும். இது உண்மை.

## திருமணமும் தனி வாழ்க்கையும்

கலியாணம் செய்து கொண்டவனுக்கு, குடும்பப் பொறுப்பும், துன்பமும் அதிகம்! மனைவிக்கும் குழந்தைகளுக்கும் வரும் கஷ்டங்களை, அவனே சமாளிக்கவேண்டும். கெட்ட நேரம் வரும்போது, குடும்பச்சுமைக்கு அவன் கேவலமான அடிமையாகி, தன் இலட்சியத்தை நாசம் செய்து தோல்வியடைகிருன்.

தனி வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பிரும்மசாரிகளே, சிறந்த செயல்களைச் செய்திருக்கிருர்கள். மனைவி, குழந்தைகள் இல்லை என்ற கவலையற்ற மனநிலையில், மிக உயர்ந்த நிலையில் சிந்தித்து அருமையான நூல்களை, மேதாவிகள் எழுதியிருக்கிருர்கள்.

பிரும்மசாரிகள், சிறந்த நண்பர்களாகவும், சிறந்த ஆசிரியர்களாகவும், சிறந்த தொண்டர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த வாழ்க்கை, சாமியார்களுக்குத்தான் பொருத்தம். அவர்களுக்கு எந்தக் குடும்பப் பொறுப்பும் இல்லையல்லவா? ஆனால் தனி வாழ்க்கை, எல்லோருக்கும் பொருந்தாது; குடும்ப வாழ்க்கையில்தான், மனிதன் மனநிலை, பல கட்டுப்பாடுகளாலும் துன்பங்களாலும், உயர்ந்த பரிசுத்தமான உலகத்தையே அடைகிறது. கஷ்டத்தில், களங்கம் சலவை செய்யப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில், மனத்தூய்மை கெட்டிப்படுகிறது; பொறுப்பிலே, உறுதி நிலவுகிறது; ஓடிப்போகும் மனப்பான்மை, மாறியே விடுகிறது. பெண்மையில், கற்பு மிக உயர்ந்த மனநிலை; புருஷனையே நெஞ்சில் உறுதியாக நினைக்கும் மனைவி, உத்தமிதான; சந்தேகமே இல்லை. இளைஞருக்கு, மனைவி தான தலைவி. மத்திய பருவத்தில், மனைவி நல்ல நண்பன்; முதுமையில், மனைவி - நர்ஸ்ஸாவாள். (Nurse)

ஆனால் திருமணவாழ்க்கையில், ஒரு விநோதம்: கெட்ட புருஷர்களுக்கு, மிக நல்ல மனைவிகள் வாய்த்து விடுகிறார்கள்; இந்த விபரீதத்தை என்னவென்று சொல்வது? மனைவியின் பொறுமையைச் சோதிப்பதற்கு, இதைவிட வேறு வில்லங்கமான வாழ்க்கையே தேவையில்லை அல்லவா? யார் சொல்லையும் கேட்காமல், தன் இஷ்டத்திற்கு அப்படி புருஷர்களை முன்பின் யோசனையின்றித் தேர்ந்தெடுத்துக்கொண்ட மனைவிகள், அபூர்வமாகவே திண்டாடுவார்கள், ஆம்! சந்தேகமே இல்லை.

## நட்பு

மனித வாழ்க்கைக்கு, நண்பர்கள் அவசியம் தேவை: தனிமையில் இன்பம் காண்பவன், ஒரு கொடிய காட்டுமிருகமாகவோ, அல்லது ஒரு தெய்வமாகவோதான் பிறந்திருக்க வேண்டும். சாமியார்

கள், அறிவை விரும்பியோ, இலட்சியத்தை விரும்பியோ, தனிமையிலே இன்பம் காணலாம். நண்பர்களோடு அரட்டையடிக்காமல், நயமான அறிவை அடைய சாமியார்கள், மேதாவிகள் தனிமையை விரும்பலாம்.

யாரையும் நம் நண்பர்கள் என்று நாம் ஒப்புக்கொள்ளக்கூடாது. எத்தனையோ லட்சம் முகங்களை கொண்ட ஒரு கூட்டத்தில், நாம் நண்பர்களைக்காண முடியுமா என்ன? அப்படி முகங்களும், படங்களும் ஒன்றுதான்; அவர்கள் பேச்சில், மனிதக் குரல் கேட்டாலும், அனபே இராது.

நல்ல நண்பர்கள் இல்லாத உலகம், ஒரு பாலைவனம்தான்: நண்பர்களையும் மனிதப் பண்பையும் வெறுப்பவன், ஒரு காட்டுமிருகம்தான். அவனுடைய தனிமையில், இன்பம் இல்லை: எங்கும் வெறுப்புத்தான். துன்பம் நம்மைத் தாக்கும்போது, நண்பனிடம் நமது இதயக் குமுறலைத் திறந்து காட்டினால், பாதித்துன்பம் தொலைந்தேபோகும்; இன்பம் வரும்போது, நண்பன அதை இரட்டிப்பாகப் பெருக்குகிறான். நண்பர்கள் சமயத்தில் இல்லாவிடில், துன்பத்தீயில் நமது இதயம் வெடித்துவிடும்.

நட்பின் பலன்கள், மாதுளைக்கனியில் உள்ள இன்ப ரத்னங்கள்போல், அருமையான உண்மைகளைக் கொண்டு, மனிதனை அபாயத்தின் எல்லையை விட்டுத் தப்பித்துவர வழிகாட்டுகின்றன. மனிதன், தான் நேரில் சாதித்துக்கொள்ள முடியாத நிலையில், நண்பன் மூலம் பலவிஷயங்களை இன்பமாக அமைதியாக நிறைவேற்றிக்கொள்ள முடியும். தன் மகனையும் மனைவியையும் தானே நேரில் சொல்லித் திருத்திக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில், நண்பன் மூலம் இதைச் சாதித்துக்கொள்ளலாம், மிகச் சுலபமாகவே! நட்பின் சிறப்பு அவ்வளவு ஆற்றல் பெற்றது.

## கடவுளை நம்பாமல் இருக்கமுடியுமா?

மனித இதயத்தில், கடவுள் என்றும் நிலவு கின்றார்; அவருடைய ஒளி, மனித வாழ்க்கையில் தெரிகிறது. கடவுளே அவசியமில்லை என்று நினைப்பவன, முட்டாள், அறிவிலி, மிருகம்; மனிதன் பாதுகாப்பில்உள்ள நாய்கூட, மனிதனை தெய்வமாக நினைக்கிறது; மனிதனோடு சேர்ந்து வாழ்ந்து, நாய் கூட குணவளர்ச்சி பெற்று முன்னேறுகிறது. மனிதன் முன்னேற கடவுட் கலப்பு வேண்டும் அல்லவா? அகண்ட உலக சிருஷ்டியின் சிறப்பை ஒரு நிமிஷமாவது சிந்தித்து உணர்ந்தவன், கடவுளை இல்லையென்று சொல்ல அஞ்சுவான. கடவுளே இல்லையென்று கதறும் கபோதிகள், போலி மனிதர்கள், ஆஷாடபூதிகள், நாசகாரச் சைத்தான கள். வாயால் ஓர் அறிவிலி, அகங்காரத்தில், கடவுள் இல்லையென்று சொல்லிவிடலாம்; ஆனல் நெஞ்சில் கிடக்கும தெய்வச் சுடரை, அகற்ற முடியுமா, என்ன? சிருஷ்டியில் மௌனமாகத் தோய்ந்து கிடப்பவர், பகவான், கடவுள்; இதை மறுப்பவன், மடயன் மூர்க்கன், பித்துக்குளி, சண்டாளன். உலகம் தோன்றிய காலமாக உள்ள, பெரியார்களின் பேருரைகள், ஞானிகளின உபதே சங்கள், வாழ்க்கையின் விபரீத நிகழ்ச்சிகள், இயற கையின் அகண்ட விநோதங்கள், மனித இயற்கை யின் மாபெரும் உண்மைகள், எல்லாம் ஈசனையே மனித உள்ளத்தில் சுட்டிக்காட்டுகின்றன. ஆம்! நெஞ்சில் சுடரும் நிர்மல ஜோதியை, யாராலும் தகர்த்தெறிய முடியவே முடியாது.

## அதிர்ஷ்டம்

அதிர்ஷ்டம், நல்ல காலம் வரும்போது மனம் உறுதியடைகிறது: இன்பமிகுதியால், தன்னம் பிக்கை வளர்கிறது. வெற்றிமேல் வெற்றி தொடர்ந்தே வருகிறது. உடனே வெளியுலகில், செல்வாக்கு ஒலிக்கிறது.

துர்அதிர்ஷ்டம், கெட்டகாலம்வந்து மனிதனைத் தாக்கும்போது, மன உறுதி தளர்ந்து சிதறிப்போய், தன்னம்பிக்கை இழந்து, எந்த மேதாவியும் மூதேவியாகி விடுகிறான்.

எப்போதும் அதிர்ஷ்டத்துக்கு புத்தி அநுசரணை. சில சந்தர்ப்பங்களில், மனிதன் அதிகமாக வெற்றிபெற்று இறுமாப்பு அடைகிறான்; சில அசந்தர்ப்பங்களில், மனிதன் மிகக் கேவலமான தோல்வியடைந்து, இதயம் முறிந்து மடிகிறான்.

சந்தர்ப்பம், அதிர்ஷ்டம் எப்படி வருகிறது? பிறருடைய முட்டாள் தனத்தாலும், பிறருடைய பிழைகளாலும், பிறருடைய எதிர்பாராத மரணத்தாலும், அவசர முடிவுகளாலும், ஒருவன் திடீரென்று அதிர்ஷ்டக் குன்றை எட்டிப்பிடிக்கிறான். அபூர்வ திறமையாலும், அந்தஸ்தும், பதவியும் பணமும் பெருகலாம் அல்லவா? மனித உள்ளத்தில், எழில் மிகுந்த கவிதைபோல, அதிர்ஷ்டம் ஜ்வாலையிடுகிறது; திறமைக்கு மேலும் கீழும், சந்தர்ப்பசக்கரம் விநோதமாகவே சுழல்கிறது.

## கட்டுரை—மரணம்

மரணத்தைக் கண்டு மனிதன் ஏன் அஞ்ச வேண்டும்; பிறப்பதும் இறப்பதும், இயற்கையில் சர்வசாதாரண நிகழ்ச்சிகள்: குழந்தைதான் இரண்டையும் கண்டு அஞ்சுவது இயல்பு. இரண்டும், ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், துன்பம்தான். ஆனால் சாகும் தருவாயில் சஞ்சலப்படவேண்டிய அவசியமே இல்லை. வாழ்க்கை அத்தியாயம் இறுதிப்பக்கம் வருவதும், இயல்புதானே. இறக்கும்போது, நாம் எதைபபற்றி வருந்தவேண்டும்? சிறந்த இலட்சியங்களை வீரச் செயல் மூலம் நிறைவேற்றி மடிவது, நல்ல மரணம்தான்: இறந்த பின்னும், இலட்சிய வெற்றியால், மரணம் தோல்வி

யடைகிறது என்றுகூட சொல்லலாம்; புகழின் கதவையே திறந்து வைக்கிறது, இந்த வீர மரணம். வீரச் செயலில் மடிவது, அபூர்வமான மரணம்; இதயத் துடிப்பின வேதனையின்றி, அமைதியாகச் சாகலாம். வியாதியால், தொடர்ந்து கஷ்டப்பட்டு மரணமடைவது, மிகமிகக் கஷ்டம்தான்.

மரணம் வரும்போது, பொறாமையும் மடிந்து விடுகிறதல்லவா? ஒருவன் இறந்தால், சகல மனஸ் தாபங்களும் பொறாமைச் சிந்தனைகளும் ஒழிந்தே போய்விடுகின்றன.

## சுகமும் சோகமும்

நல்லநேரத்தில் இன்பவாழ்க்கை வாழும்போது, நாம் நிதானமாக மனத்தைக் கட்டுப்படுத்தி எதையும் அளவுக்கு மிஞ்சி நாசம செய்யாமல் அளவோடு வாழ்ந்தால், அது தூய வாழ்க்கைதான, இன்ப ஜீவியம்தான். ஆனால், துன்பம் மனிதனைத் தாக்கும்போது நாம அஞ்சா நெஞ்சத்துடன், கவலையை மறந்து, மனோதிடம் கொண்டு துன்பத்தோடு அமைதியாகப் போராடினால், நமக்குச் சிறந்த ஆன்மீக வெற்றி உண்டு என்பது திண்ணம்; கிறிஸ்தவ வேதபுத்தகத்தில், இன்பத்தைவிட, துன்பத்தின் அகண்ட ஒளியைத்தான், ஜாபின் (Job) சோகச் சித்திரத்தில் வற்புறுத்தி இருக்கிறது. ஆதலால், கண்ணீரின் தீயில் கவலையைக் கழுவிக் கடவுளைக்காண முயல்வது, துன்பத்தில் சிக்கிய மேதாவியின் பொறுப்பு. சோக நாடகமே, சிறந்த உண்மை விளக்கம். கவலையிலேதான், கலை வளர்கிறது; கடவுளின் கைரேகை தெரிகிறது; மனித உள்ளம் தூய்மையில் ஊறி வெளியே வெற்றியுடன் தலைகாட்டுகிறது.

## பெற்றோரும் குழந்தைகளும்

பெற்றோர்களின இன்பம் தனி இன்பம்தான்; அவர்களுடைய கவலைகளும் அப்படியேதான். குழந்தைகளைக் கண்டால், கவலைகள் எல்லாம் பறந்தேபோகும். ஆனால், கஷ்டகாலம் வரும்போது, குழந்தைகள் ஒரு சுமையாகவும், துன்பவேதனையாகவும தெரியும. ஆனால் மரணம் பெற்றோரைத் தாக்க வருமபோது, குழந்தைகள் இன்ப முகத்தாலும் இனிய பேச்சாலும மரணத்தையே மறக்குமபடி செய்கின்றன.

குழந்தைகள் பிறந்தால், மனித வர்க்கம் மடியாமல் தொடர்ந்து வளரும் தனமை உண்டாகிறது. குடும்பத்தின பிற்காலச் சின்னங்களாக, குழந்தைகள், பிறந்து வளர்கின்றன. இதுவும் இயற்கையின் வெற்றிகரமான அமசபதான. தாய் தந்தையர்களின உயிரையும் லட்சியங்களையும வெற்றிகரமாகத் தொடர்ந்து பிரதிபலிக்கச் செய்பவர்கள், அருமையான திறமையுள்ள குழந்தைகள்தான் அல்லவா? குழந்தைகளின் மனநிலைகளுக்குத் தகுந்த தொழிலைப் பின்பற்றும்படி பெற்றோர்கள விட்டுவிடுவது நலம்; வேறு விதமாக வற்புறுத்துவது, கசந்த மனநிலையை உண்டாக்கும்.

## பெரும் பதவி

அரசாங்கத்தில் பெரிய பதவியை வகிப்பது, மிகவும் வில்லங்கமான நிலைமைதான்; பதவி உயர உயர, பொறாமையும் சுற்றிக்கொண்டு வளரும். திறமையால் திகழ்ந்தாலும், பிறர் பொறாமையால் பொசுங்கிக் கருகிப்போவது திண்ணம்; பதவியைக் கடைசிவரை,வகித்து நிலைமைகளைப் பல கஷ்டமான சந்தர்ப்பங்களில் சமாளித்து நிர்வகிப்பதும் மிகமிகக் கஷ்டம்.

ஒருவனுக்குப் பதவி வந்ததும், அவன் நன்மையும் தீமையும் செய்யக்கூடிய அதிகாரமே வந்துவிடுகிறது. பொதுஜனங்களுக்கு இடைஞ்சலாகப் பதவிவகிப்பது, பாபம; நன்மையே செய்யவேண்டும். அதையும் அமைதியாகவே செய்ய வேண்டும். தீங்கிழைப்பவன், கடவுளுக்கேவிரோதி; மனச்சாட்சியை மறந்து கெடுதல் செய்யும் அதிகாரி, இறுதியில் பொடியாய்ப் போவான். விதியின் விபரீதமான வேகத்தில், அதிகாரி அகப்பட்டுக்கொண்டு கதறிக் கண்ணீர் விட நேரிடும—இது உண்மை, சத்தியம். போலி நடிப்பு நடித்து, பிறர் கண்ணில் மண்ணை அள்ளிப் போடக்கூடாது தண்டத்துக்கு அதிகாரம் செய்து கொண்டு, பிறர் பொருளைப் பறித்துத் தின்றுவிட்டு ஏப்பமவிட நினைக்கலாகாது. அதிகாரி ஆசைப்பட்டு லஞ்சம் வாங்குவது, ஆபாசம். உள்ளம அழுக ஊர் முதலை அடித்துச் சாப்பிடுவது, மிக உத்தண்டமான ஆஷாடபூதித்தனம். லஞ்சம வாங்க 'லைசன்ஸ்' பெற்றுவிட்டதாகவே, அதிகாரிகள் நினைப்பதும் தவறு. பலநாளைத் திருடன் அகப்பட்டுக் கொண்டால், தண்டனையினின்று தப்ப முடியுமா? பதவி மோகத்தில், உயிரையும் மானத்தையும் விடலாமா? அதிகாரிகளே, லஞ்சம் வாங்கும் அதிகாரிகளே, உஷார்!

பெரிய பதவியை என்றுமே சாசுவதமாகவே அநுபவிக்க முடியுமா? பதவி என்பது, வழுக்கும், சருக்கும் பீடம்; வழுக்கி விழுந்தால், தலையே போய் விடும், மானம் கோவிந்தா, கோவிந்தா!!

பதவியில் இருப்பவர்கள் நன்மையே செய்ய வேண்டும்; தீமையைக் கனவிலும் கருதக்கூடாது. கீழான மன நிலைகளில் இறங்கக்கூடாது. சுய நலத்தை மறந்து, பொதுநல வாழ்வில் உறுதியாக நம்பிக்கை கொண்டு உண்மையே பேசி நன்மையே செய்ய வேண்டும். பேராசை கொண்டவன், பொது ஜன விரோதி, கடவுளின் கைதி.

## பிரயாணம்

பிரயாணம் செய்ய வேண்டியதும் மிக மிக அவசியம்; அறிவு வளர்ச்சிக்கு, இது மிக முக்கியம். உலகத் தொடர்புக்கு, பிரயாணம் அவசியம். மனம், பல பழக்க வழக்கங்களால், தெளிவு பெற்று, பன் மொழிப் புலமையால், எதையும் சுலபமாக அறியும் ஆற்றல் பெற்று விடுகிறது. எத்தனை ஊர்கள் சுற்றி வந்தாலும், நம்முடைய நாட்டு நல்ல பழக்கங்களை நாம் விட்டுவிடக் கூடாது; பிற நாடுகளைக் காப்பி யடிப்பதால், எவ்வித பிரயோசனமும் இல்லை. நம் முடைய தேசத்தின் தனிப் பண்பை நாம் மறந்து அழித்துவிடக் கூடாது; தன நாட்டை எடுத்துக் காட்டும் சிறப்பு ஒவ்வொருவரிடமும் நின்று பொலிய வேண்டும். உலகம் சுற்றி வருபவனுக்கு, உண்மை யின் முழு வடிவம் தெரியும்; சந்தேகம் குறையும்; மன உறுதி மினனும். சந்தோஷம் அதிகரிக்கும்.

## புத்தகம் படித்தல்

நூல்களைப் படிக்கப் படிக்க, அறிவு வளரும்; விரியும்: அறிவே ஆனந்தம்; அறிவே அணிகலம், அறிவே சக்தி.

தனிமையில் நாம் இன்பம் அநுபவிக்கிறோம்; நாம் பேசும்போது, அறிவு பேச்சை அழகுபடுத்தி ஆபரணமாகப் பொலிவுற்று விளங்குகிறது; எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து முடிவு செய்வதற்கு, அறிவு அகண்ட சக்தி வாய்ந்த கருவியாகப் பயன் படுகிறது.

சதா நூல்களைப் படித்துக் கொண்டிருந்தாலும், சுறு சுறுப்புக் குறைந்து, சோம்பலும் மந்தமும் வந்துவிடும்; பேச்சில் நூல் அறிவையே அதிகமாக உபயோகப் படுத்தினாலும், அது இடம்பமாகத் தோன்றும். இயற்கைக்கு விரோதமாகத் தோன்

றும்; நூல் அறிவையே வைத்து எதையும் ஆராய்ந்து முடிவுகட்டுவது, புலமையின் பலஹீனம். எதையும் அநுபவ அறிவு கலந்து செயலாற்றுவது சாலச் சிறந்தது. நூல் அறிவை, தந்திரிகள் விரும்பாமல் வெறுப்பார்கள். இயற்கையுள்ளம் படைத்தவர்கள், நூல் அறிவைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்; அநுபவமுள்ள புத்திசாலிகள், நூல் அறிவை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

தர்க்கம் செய்யவும், போராடவும் படிக்காதே; நம்புவதற்காகவும், எதையும் உடனே ஒப்புக்கொள்வதற்காகவும் படிக்காதே; எதையும் ஆராய்ந்து தெளிவுபெறவே கற்கவேண்டும்; கல்வி கருத்தைக் கலக்கமின்றி, தெளிவு படுத்த வேண்டும்.

சில புத்தகங்களை லேசு லேசாக ருசிபார்த்துப் படிக்கலாம்; சில நூல்களை அப்படியே விழுங்கிவிடலாம்; சில நூல்களை, சிற்சிலபகுதிகளில் படிக்கலாம்.

படிப்பால், ஒருவன் நிறைமனிதனாகிறான்; பேச்சால் 'ரெடி' மனிதனாகிறான்; எழுத்தால், ஒருவன் பிழையின்றி உறுதி பெறுகிறான்.

நாம் படிக்கும் நூல்களால், நமது மனக்குறைகள் மாற வேண்டும், அதுவே அறிவின் உறுதிக் கோடு.

## மாந்தேன் சிந்தனைகள்

மாந்தேன் புகழ்பெற்ற பிரெஞ்சு மேதை; அவர் எதையும் சிந்தித்தே எழுதுவார். வாழ்க்கையில் நிகழ்கின்ற பெரும போராட்டங்களிலிருந்தும், சட்ட வில்லங்கங்களிலிருந்தும், மிக மிக ஆழ்ந்த அகண்ட உண்மைகளை ஆராய்ந்து கண்டுபிடிககும பேராற்றல் படைத்தவர். ஷேக்ஸ்பியரும், பேகனும, எமர்ஸனும், மாந்தேன் நூல்களைப் படித்தவர்கள்.

திருவள்ளுவர் வாழ்க்கையில் கண்ட உண்மைகளை தெய்வப் புலமையுடன், சூத்திரங்களால் திருக்குறளைக் கவிதை நயத்துடனும் தத்துவக் கண்ணுடனும் சிருஷ்டி செய்திருக்கிறார்; மாந்தேன், மனித வாழ்க்கையில் குமுறிக்கொண்டு வரும் அபூர்வ உண்மைகளை நீண்ட கட்டுரைகளாக எழுதியிருக்கிறார். வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும், புதிய புதிய உண்மைகளைத் துருவி ஆராய்ந்து தீர்ப்புக் கூறியிருக்கிறார்.

திருமணம், சஞ்சலம், குடி, மனச்சாட்சி, பழக்கம், பதவியின் வெகுமதி, போர்ப்படைகள், புத்தகங்கள், மரணம், கொடுமை, ஆன்ம சோதனை, துன்பத்தில் ஆசைகள் அதிகரிக்கும் விதம், புகழ், பொய், மனச்சாட்சியின் சுதந்திரம், சோம்பலை ஒழிக்கும் அவசியம், காலநிலை, யுத்தமிடும் குழந்தை, கோபம், சிடுமூஞ்சித்தனம், மூன்று நல்ல பெண்கள், மனிதர்களின் மன நிலைகள், தந்தைக்கும் குழந்தைக்கும் உள்ள ஒற்றுமை, கட்டை விரல்கள், எது உபயோகமுள்ளது, எது யோக்கியமானது, மூன்று வித

மான மனிதத் தொடர்புகள், சம்பாஷிக்கும் முறை, மனத்தை ஆளும் முறை, நொண்டிகள், முகக்குறிகளின் லட்சணம், அநுபவம், இன்னும் பல ஆழ்ந்த தலைப்புக்களின்கீழ் மிகமிக நுட்பமான கட்டுரைகளை எழுதியிருக்கிறார், மாந்தேஸ். ஒவ்வொரு தமிழனும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இவர் 1533ல் பிறந்து 1592ல் மறைந்தார்.

## சிந்தனைகள்

1. **புத்தகம்:** அறிவும் உண்மையும் உறுதியாக புகட்டக்கூடிய உறுதியான நூல்களையே, ஆசிரியர்கள் எழுதவேண்டும்; வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையவேண்டும். எதையும் தெளிவாக எழுத வேண்டும்; சந்தேக மூட்டையாக எந்தப் புத்தகமும் தோன்றக்கூடாது. கருத்தில் தெளிவும், நடையில் தெளிவும் இருக்கவேண்டும், உண்மையை மறைக்கப் புத்தகம் எழுதக்கூடாது. விஷயமே இல்லாமல் அலங்கார நடையில் புத்தகம் எழுதுவதில் பயன் ஒன்றுமில்லை. புத்தகம் எழுதும் ஆசிரியர் உள்ளத்திலும் பேனாவிலும், இலக்கிய மணம் இருக்கவேண்டும். எதையும் கண்டு ஆச்சரியப்பட்டு, அறியாமைப் போதையில் மூழ்கிவிடக்கூடாது. காப்பியடித்து புத்தகம் எழுதக்கூடாது; மூலத்தொடர்பை ஒப்புக்கொள்ள வேண்டும். இயற்கையான சிந்தனைத் தொடர்பின்றி, எந்த ஆசிரியனும் பலருடைய கருத்துக்களை எடுத்து ஒட்டி ஒரு பிளாஸ்திரி நூலாக எழுதக்கூடாது. இத்தகைய நூல்கள், சிரிக்கத் தக்க மக்குப் பிளாஸ்திரி நூல்களாகக் குவிந்து விடும்; நிலைக்காது, காலப் புயலில் மாண்டொழிந்து விடும்.

**2. திருமணம்:** திருமணத்தில், நல்ல மனைவிகள் கிடைப்பது கஷ்டமதான். வாழ்க்கையில், நாயகன் நாயகி இருவரும மனம் கோணுமல் தொடர்ந்து வாழவேண்டிய கட்டாயம் வந்தே தீருகிறது; இது மிக மிகக் கஷ்டமான தொடர்புதான். இருவரும் ஒற்றுமையாக, இனபமாக, தொடர்ந்து கசப்பின்றி வாழ்ந்தால், இதுவே திருமணத்தின் வெற்றி என்று கூறலாம. வாழ்க்கையே ஒரு பெரும போராட்டம தான: பல குழப்பமான மன நிலைகள வரும்போது; தகப்பன் குழந்தைகளையே மறந்துவிட நேரிடுகிறது; அதேபோல, மனைவியும கணவனை வெறுக்கும் சந்தர்ப்பங்களும வரும். எந்த நிலையிலும மன உறுதியோடு, சுயநலமின்றி இருவரும ஒத்து வாழ்வதே உயர்வு

**3. சோம்பல்:** விதியின் விபரீதப் பாய்ச்சலில், நாம் மனம் கலங்கிச் சோமபேறிகளாக மாறிவிடக் கூடாது; சோமபலை உதறித் தளளிவிட்டு, மனோ திடம் கொண்டு விதியின விபரீதத்தை ஓரளவு எதிர்த்து, துர் அதிர்ஷ்டத்தோடு போராடி சமாளிக்க முயலவேண்டும். இதுவே வாழ்க்கையின் வெற்றி.

**4. கொடுமை:** நாம் கொடிய மனநிலையோடு யாரையும துன்பம் செய்யக்கூடாது; ஹிம்சையின்றி யாவரும் வாழவேண்டும், அஹிம்சையால், உலகம் எல்லாத் துறைகளிலும் முன்னேறும்; யாரையும் அடிமைபபடுத்த முயலுவது, அறிவீனம்; இயற்கைக்கு முரணுக உள்ளது; நெஞ்சில் ஈரமுளள மனிதத் தொடர்பு எப்போதும் வேண்டும்; சாட்டையடியால், சாந்தி வராது. உலக ஒற்றுமை வேண்டுமானல், கொடுமை ஒழிந்து அன்பு மலர வேண்டும்.

**5. எதற்கும் ஒரு காலம் உண்டு:** வருந்தி அழைத்தாலும் வாராது வாரா, பொருந்துவன போமினென்ருற் போகா; காலத்தை மீற முடியாது, யாரும்! சந்தர்ப்பங்களை ஒட்டியே வாழவேண்டும். நிமிஷ வேதனைகளைச் சிவி எறிய முடியுமா? பொறுமையால், காலத்தைத் தழுவிச் செல்வது நலம். ஆனுல், சாதாரண விஷயத்தையெல்லாம் கண்டு அஞ்சக் கூடாது; மனே திடத்தோடு, கால நிலையைச் சரியாக உணர்ந்து நடக்க வேண்டும். காலப் போக்கை உணர்ந்து நடந்தால், வெற்றி இறுதியில் உறுதி. ஆம்! பழுதில்லாத பகுத்தறிவு நமக்குத் துணையாக நின்று நிலவ வேண்டும். மனமுடைந்து மங்கிப் போனுல், வெற்றியை எதிர்பார்க்க முடியுமா?

**6. மனம்:** மனம், ஒரு பயங்கரமான கத்தி; இரண்டு பக்கமும் கூர்மையுடையது. எங்கு திருப்பினுலும், எப்படியும் வெட்டும். நிதானமாக, மனத்தை உபயோகிக்க வேண்டும். நிதானம் தப்பினுல், வெட்டுக் காயம்தான், சந்தேகம் வேண்டாம்.

**7. அழகி:** அழகுள்ள பெண்கள், அளவுக்கு மிஞ்சி அலங்காரம் செய்துகொண்டு, மனிதர்கள் மனத்தைக் காம போதையில் ஆழ்த்தக்கூடாது. மூடுவதும், மினுக்குவதும், ஆடையாபரணங்களால் அங்க அமைப்புக்களைப் படாடோபமாகக் காட்டுவதும் நல்லதல்லவே. அழகிலும் அமைதி வேண்டும்; ஆடையிலும் அமைதி வேண்டும். ஆடை மனப் புயலை, காமப் புயலை எழுப்பக்கூடாது.

**8. மரணம்:** எதற்கும் உயிரை விட்டுவிடுகிறேன் என்று சொல்வதில், அர்த்தமே இல்லை. கடமையை மறந்து, மரணத்தை அழைப்பது சரியல்லவே! வாழ்க்கையின் இறுதி வரை, நாம் செய்ய வேண்டிய கடமையைக் குறையின்றி நிறைவேற்றிய

பின், மரணம் நம்மைப் பிடித்துக்கொண்டால் பாதக மில்லை. கடமையை மறந்து, உயிரை மாய்த்துக் கொள்வது அறிவீனம்.

**9. கற்பு:** பெண்கள், தங்கள் கற்பைத் தாங் களே காத்துக்கொள்ள வேண்டும். காமவெறிக்கு இடங்கொடுக்கக்கூடாது. பிற புருஷர்களோடு பேச சந்தர்ப்பம் கிடைக்குமா என்று ஆசைப்படக் கூடாது. தன் கணவனை ஒட்டியே வாழ வேண்டும். உடம்பில் வெறி ஏற்றிக்கொண்டு, பிறரைத் தழுவத் துடிப்பது அறிவீனம். புருஷன், மனைவி இருவரும் ஒத்த தேகவலிமையுடன், மன உறுதியுடன், கலந்து இன்புற்று வாழ வேண்டும்.

**10. ஐம்புலன்கள்:** ஐம்புலன்களால், மனத் தெளிவு மங்கிக் குழப்பமடைகிறது. பகுத்தறிவின் உறுதியால் ஒளி பெற்று, இந்தக் குழப்பத்தைத் தாண்டிச் செல்லவேண்டும். மாயை, பொய்த் தோற்றம், நமது கண்களை மறைக்கிறது.

**11. அறியாமை:** அறிவின்றி வாழ்வது, அறி யாமைதான. மனித வளர்ச்சிக்கும, மனித முன் னேற்றத்துக்கும் பெருந்தடை அறியாமைதான. அறிவைத் தூண்ட வேண்டும். அறியாமை ஒரு இருட்டறை.

**12. ஆஷாடபூதி:** எதையும்மறைத்துப் போலி வாழ்வு வாழ்வது நல்லதல்லவே: யாரையும ஏமாற்ற வேஷம் போட்டுக்கொண்டு அலைவது, மிக மிக மோசமான நிலைதான்; வேஷதாரிகளைத் திருத்த முடியாவிட்டால், வெட்டி எறிய வேண்டியதுதான்.

## நீட்ஷியின் சிந்தனைகள்

ஆர்வத்துடனும் ஆவேசத்துடனும் நீட்ஷி ஜெர்மன் பாஷையில் சிறந்த வசன நாடகங்களை சிருஷ்டித்திருக்கிறார்; அகண்ட மனோதிடமும் சிறந்த சிருஷ்டிப் புலமையும் கொண்டவர்; 'விதியின் விபரீதச் சுழற்சியில் மனிதன் ஏன் வாழ மறுக்கவேண்டும்? வாழ்க்கையில் துன்பம் துடித்தாலும் இன்பத்தை ஏன் சுதந்திரத்துடன் அனுபவிக்கப் பின் வாங்கவேண்டும்?' இதுவே அவரது முடிவான அபிப்பிராயம். "வேஷதாரிகளை நம்பாதே; நேரே செல்; உண்மையைக் கண்டபின் அதை ஒட்டிவாழ்க்கையை தைரியமாய் நடத்து; இயற்கையை ஒட்டி வாழ்வாயாக. யாருக்கும் அடிமையாக வாழவேண்டாம்" இதுவே அவரது தீர்ப்பு.

நீட்ஷி நீண்ட சிந்தனை யுடையவர், ஆழ்ந்த சிந்தனையுடையவர். வாழ்க்கையின் எழிலையும் எல்லையையும் கண்டு, மனிதன் எப்படி வாழவேண்டும், ஏன் வாழ வேண்டும், எதற்குக் கட்டுப்படவேண்டும், எந்த சந்தர்ப்பங்களில் பழைய பயனற்ற பழக்க வழக்கங்களையும் உயிரற்ற சட்டத்தையும் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும், இயற்கையைத் தழுவி வாழ வேண்டும், பழைய சட்டத்துக்கோ நீதிக்கோ மனிதன் அடிமையாகக் கூடாது என்று நன்கு உணர்ந்தவர்.

1844 அக்டோபர் 15ல் பிறந்து, 1900 ஆகஸ்டு 25ல் மறைந்தார். வாழ்ந்த 56 வருஷங்களில், ஐந்து பெரிய நூல்களை எழுதி முடித்திருக்கிறார்.

1. ஜாராதுஷ்ட்ரா
2. நன்மைக்கும் தீமைக்கும் அப்பால்
3. ஒழுக்கத்தின் படிப்படி வளர்ச்சி
4. எனது சுய சரிதையும் அறிவாற்றலும்
5. இசையினின்று பிறந்த சோக நாடகம்

இந்த ஐந்து நூல்களும், ஜெர்மன் பாஷையிலிருந்து, ஆங்கிலத்தில் 1088 பக்கங்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் 1500 பக்கங்களில் மொழிபெயர்க்கலாம்.

மிக மிக அருமையான நூல்கள், நுட்பமான நூல்கள்; ஆழமான கருத்துக்கள் மிளிர்கின்றன. நீட்ஷி சிந்திக்கும்போது, கவிதை எழுதுகிறார்; கவிதை மணக்கும் வசனம் எழுதுகிறார்; சொற்கள், அபூர்வமான சொற்கள், அமைதியாகவே, எதையும் கம்பீரமாக விளக்குகின்றன. இதயம் பாய்ந்த சொற்கள் எழில் மண்டிய இறுமாப்புடன் கலையரங்கில் உதயமாகின்றன; 100 சிறந்த சிந்தனைத் தலைப்புக்களின் கீழ், அவருடைய கட்டுரைகள் பரந்து பரிமளிக்கின்றன.

நீட்ஷியின் நூல்களைப் படிக்க ஆரம்பித்துவிட்டால், நாமும் பித்துப் பிடித்தவர்கள்போல் அவருடைய சிந்தனைக் கடலில் கை வீசி நீந்த ஆரம்பித்துவிடுவோம். கரையேற மனம் வராமல், கருத்துக் கடலிலே மூழ்கி விடுவோம். இது உறுதி.

**நூல்கள், படிக்கவும், எழுதவும்:** சோம்பேறிகளைப் போல படிப்பதில் பயனில்லை; உனது இதய இரத்தங்கொண்டு அனுபவ முத்திரையோடு எழுத வேண்டும். மனித அனுபவம், பழமொழிகளாகவும், சூத்திரங்களாகவும் நின்று நிலவும், அழியவே அழியாது. எழுத்தில் உறுதிவேண்டும், வாழ்க்கையின் ஒளியாக அமைய வேண்டும்; மலைமேல் மன உறுதியோடு ஏறிச் செல்வதுபோல, இன்பச் சிலிர்ப்புடன் சிரித்துக் கொண்டே நூல்கள் எழுதவேண்டும். எதைக் கண்டும் அஞ்சலாகாது. நடந்து ஓடிப் பறப்பதுபோல, நமது சிந்தனையும் நூலும் அமைய வேண்டும். சொந்தக் கருத்தை, அஞ்சாமல் வெளியிடும் மனோதிடம் வேண்டும். உள்ளொளி பேறுவை ஊக்க வேண்டும். புலமையும் வெறியும் கலந்து நூல்களில் புகுந்து புரட்சி செய்ய வேண்டும்.

**வாழ்க்கையும் மரணமும்:** வாழ முடியாதவர்கள், மனோதிட மில்லாதவர்கள் சாவது நலம். மரணத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்வதில் யாது பயன்? வாழ்க்கையின் நெருக்கடியைஉணர்ந்து, தைரியமாக வாழ வேண்டும்; கோழையாகச் சாவது கோமாளித் தனம்தான் அல்லவா?

**போரும் போர் வீரர்களும்:** உலகத்தில் குழப்பமும், நெருக்கடியும் வரும்போது, போரும் அவசியமாகிறது; போரிட்டே அமைதியை நிலைநாட்ட வேண்டியதிருக்கிறது. போருக்குப் பின்வாங்கினால், அமைதி அடியோடு அழிந்தே போய்விடும். போர் வீரர்களே, அமைதியை நோக்கிப் போரிடுங்கள்; போருக்குப்பின் சாந்தி நிலவும். வில்லேந்திய கையுடன், போர் வீரன் உலக அமைதியை உறுதி செய்கிறான்.

**அரசாங்கம் :** மனிதர்களை அடிமையாக்கி நசுக்கும் ஒரு கொடிய இயந்திரச் சூழ்ச்சி; மனித முன்னேற்றத்துக்கு ஒரு அபூர்வமான முட்டுக்கட்டைதான். நன்மைக்கும் தீமைக்கும் அப்பால் சிந்திக்கும் ஆற்றல்பெற்ற அரசியல் அமைப்பு இருந்தால், நல்ல பலன்கள் உண்டு.

**கற்பு :** பெண்களின் கற்பை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இயற்கையின் எழில் அருமையாக மனத்தைப் பிடித்து இழுக்கும்போது, கற்பு நிலை மிகவும கஷ்டம்தான்; நிலையற்ற நிலைகளு கற்பை நாம் சோதனை செய்ய நேரிடும்; இதைவிட, காதலர்கள் இயற்கையாக வாழ்வது நலம். தடையின்றித் தழுவி நிற்பது நலம். கற்பு நிலை வற்புறுத்தப்படுவதும் கஷ்டம்தான். ஆண்-பெண், ஆர்வ அலைகள்போல் கலந்து கஷ்டமின்றி வாழ்வது நலம். சங்கிலிபோட்டுக் கட்டுவதால் கற்பு நிலை பெருதல்லவா? இயற்கையின் விசித்திர கோலங்களில், இதயங்களும கண்களும் பேச ஆரம்பிக்கும்போது, சட்டம் இயற்கையின் வெறியையும் ரஸனையையும தடுப்பதும் சரியல்லவே. சட்ட முனையில் முட்டிக் கொள்வதில் யாது பயன? இயற்கையைச் செயற்கையால் சீரழிக்க முடியுமா?

**நட்பு :** நல்ல நண்பன் கிடைப்பது கஷ்டம்; புரியாமல் பழகி விட்டு விரோதிகளாக மாறுவதும் கஷ்டம்தான். ஆதலால், தனிமையில் இன்பம் காண்பாய். சுயநலம், பொது நலமாக மாறுவது எதிர்பார்க்க முடியாத மனித இயல்பு. உனது நண்பனுக்கு, நீ சுத்தமான காற்றையும் தனிமையையும் ரொட்டியையும் மருந்தையும் வழங்க முடியுமா?

**பெண்கள் :** குமரியும் கிழவியும்! பெண்மையில், எந்தப் பகுதியும் புதிர்தான்; பெண்களைப்பற்றி ஆண்களிடம் பேசலாம் ; ஆண்களைப்பற்றி பெண்களிடம் பேசலாம்; ஆனல் பெண்களைப்பற்றி பெண்

களிடம் பேசவேண்டியது அவசியமா? மனிதன், பெண்களுக்கு ஒரு உபயோகமான கருவி, குழந்தை பெறும வசதிக்கு மனிதன் ஒரு தூண்டுகோல். மனிதனுக்கு அபாயமும் இன்பமும் வேண்டும். அதனால் தான் பெண்களை ஒரு அபாயகரமான விளையாட்டுப் பொம்மையாக விரும்புகிறான். சிருஷ்டியால் ஈடுபட்ட ஆணும் பெண்ணும் ஒரு புறமிருக்க, பெண்மை என்றால் பிரசவமே ஞாபகத்துக்கு வருகிறது. பிரசவமே ஒரு புதிர்தான், அபூர்வமான அதிசயமான புதிர். குழந்தைகளை நன்றாய் அறிந்து கொள்ளும் சக்தி ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் உண்டு. மனிதனிடமும் குழந்தை யுள்ளம் உண்டு. அதைப் பெண்கள் நன்றாய் ஆழமாய் அறிந்து கொண்டு, மனிதக் குழந்தைகளுடன் பெண்கள் விளையாடுகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் வயிரம இழைத்த அதிசய பொமமை. காதலின் வெற்றியை, நல்ல திறமையுள்ள குழந்தைகளைப் பெறுவதில் காட்டவேண்டும்.

காதலில், வீரம் வேண்டும். பயமின்றி கம்பீரமாக காதலிக்க வேண்டும. மரியாதையின் தன்மையை பெண்கள சுலபமாக அறிந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், காதல் துறையில், பெண்களைக்கண்டு ஆண்கள் முதலில் அஞ்சப்பட்டு அஞ்ச வேண்டியதாகவே இருக்கிறது. வாழ்க்கையின் பிற்பகுதியில், பெண்கள் எத்தனையோ தியாகங்களுக்கு உள்ளாகிறார்கள். காதலிக்கும்போதும், வெறுக்கும்போதும், பெண்களின் மன நிலையைக் கண்டு, ஆண்கள் அஞ்சாமலிருக்க முடியவில்லையே! மனிதனுடைய மிக ஆழ்ந்த உள் நிலை நிமைதான்; பெண்ணின் மன நிலை, தாழ்ந்த கேவலமான நிலை தான். அற்ப விஷயத்துக்கும் பெண்கள் வெறுப்பைத் தூண்டுவார்கள. காந்தக் கல்லைப் பார்த்து, இரும்பு சொல்லியது: "நீ காந்தத்தால் என்னை இழுப்பதால் நான் உன்னை வெறுக்கிறேன்." பெண்

களைப் பார்த்து ஆண்கள் இதையே சொல்லித் தீர வேண்டியதிருக்கிறது. எப்படியும் பெண்களின் சந்தோஷமும ஆண்களைப பொறுத்ததே. பெண்களே, தனிப்பட்ட முறையில், ஆண்களின் துணையின்றி வாழ்க்கையின் இன்பத்தையும் உண்மையையும உணரமுடியாது ஆண்கள சொற்படி பெண்கள் பணிந்து நடப்பது வாழ்க்கைக்கு நல்லது. இதில் காதலே பூர்ண வெற்றியடையும, உலகமே பூர்ண பக்குவமடையும்.

**குழந்தையும் கண்ணுடியும்:** கனவில் ஒரு குழந்தை தோன்றி, கண்ணுடியை மௌனத்தில் ஆழ்ந்திருந்த ஞானியின்முன் காட்டியது. ஞானியின் புதிய பழுத்த அறிவு புயல் போலக் காட்சியளித்தது. ஞானியின் புதிய முதிய அறிவு, பெண் சிங்கம்போல் அமைதியாகக் கர்ஜனை செய்தது; மின்னல்களின் சிரிப்புகளுக்கு இடையே, அறிவு மழை பொழிந்தது. ஆம், இது ஞானக்கனி.

**புலவர்கள் :** ஆஹா, புலவர்கள் போலிப் புலவர்கள், சிருஷ்டிக்கச் சக்தியற்ற புலவர்கள், பழைய குப்பையைக் கிண்டி வாந்தியெடுக்கும் புலவர்கள் தானே! புதிய உண்மைகளை தரிசிக்கச் சக்தியற்ற அறிவிலிகள், பழைய துருபபிடித்த நூல்களைத் தூக்கிச் சுமந்து கொண்டு, திண்டாடுகிருர்கள். —ஆம்! நானே, புதிய சிருஷ்டியில் ஈடுபட்டிருப்பதால, அவர்கள் என்னுடைய மேதையைக் கண்டு அஞ்சி வெறுக்கிருர்கள். போலிப் புலவர்களின் ஆஷாட பூதித்தனம, நாசமாய்ப்போவது நலம். போலிப் புலவர்கள், இலக்கிய இயந்திரங்கள், மணி காட்டும பழைய கடிகாரங்கள்.

பிறர் புதிய உண்மைகளைப் பற்றிச் சிந்திக்கவே கூடாது என்று, கட்சி கட்டிக் கொண்டு கடிக்க வரும விஷ ஜந்துக்கள் தானே போலிய புலவர்கள்;

போலிப் புலமை, விஷமாகவே மாறிவிடுகிறது. சிருஷ்டிக்க சக்தியற்றவர்கள், ஏன் புலவர்கள் என்று ஆடம்பரம் செய்ய வேண்டும்?

**கவிஞர்கள் :** என்றும் நிலைத்து நிற்பது உண்மைக் கவிதை. இயற்கையின விசித்திர எழிலில் சிக்குண்ட கவிஞர்கள, மதிமயங்கிப் பாடுகிறார்கள். நல்ல கவிதை எழுதுவது கஷ்டம்தானே. சிறந்த உண்மைகளும் கூர்மையான பாஷையும் வேண்டு மல்லவா? கடலே, எழில் நிறைந்த கனலோடு மயில் போல ஆடி அலைகிறது; கவிஞன, இதைக் கண்டு மதிமயங்கிப் பாடிக் கதறுகிறான். இயற்கை, கவிஞன் இதயத்தில் இறுகபபாய்ந்து இனப நாதமாகப் பெருக்கெடுத் தோடுகிறது. போலிக் கவிஞர்களின் பாட்டோ, வறண்ட உணர்ச்சியற்ற குப்பைதான்.

**ஆர்வம் :** தனிமையில், மலை உச்சியில், சிந்தனையின் ஆழத்தில், ஆர்வம அபூர்வமாகவளரும்; பூர்ண பக்குவ மடைந்து, செயலில் பக்குவமாய் வெற்றி பெறும். ஆவேசம, ஆர்வமாக வளர்ந்து உண்மையைத் தரிசிக்கும.

**சோக கீதம் :** உலகசிருஷ்டியால், எங்கும் சோக கீதம்தான்; சிருஷ்டியின் வில்லங்க அமைப்பில், கவிஞனும் கதறியே தீர்க்கவேண்டும்; பாமையையும் கழுதையையும் கண்ட கவிஞன், சோககீதம்தானே பாடமுடியும்! சொற்கள், தண்ணீர்த் திவலைகளாகவே புலம்பி இசைக்கின்றன. துன்பநாதம உலகத்தைச் சுற்றி ஓலமிடுகிறதல்லவா?

**மௌனம் :** வாழ்க்கை இயந்திரம் உயிர்க்கடிகாரம், மௌனமாகவே மணியடிக்க ஆரம்பிக்கிறது. மலை நடுவே, மௌனம் பழுத்து, பேருண்மைகளைக் கண்டு சிரிக்கவே ஆரமபித்துவிடும; தனிமையால் இனிமை, இனிமையால் அகண்ட ஒளி வெள்ளம்; கனவு தாண்டிய மௌனம், சுடரோவியமதான்.

**விழிப்பு:** கனவினின்று விழிப்புற்ற மன நிலை அதிசயமான நிலைதான். அபூர்வமான நிலைதான். மிகமிக உயர்ந்தது, நிகரற்றது; இனிமை ததும்பி நிற்கும் விழிப்பு நிலை, அகண்ட சக்தி வாய்ந்தது.

**ஆடலும் பாடலும்:** பெண்கள் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள். அவர்கள ஆடப்பிறந்தவர்கள்' பாடப்பிறந்தவர்கள. அவர்கள் உடலிலும் குரலிலும், இனிமையும் எழிலும் விரிந்து பாவி உள்ளத்தை இழுக்கும் காமலகரியாகவே சுழன்று சுழன்று மனிதனின் கனிந்தஉள்ளத்தையே விரைவில் முற்றுகை யிடுகிறது. அழகைக் கண்ட மனிதன் சிரிக்கிறான், உருகுகின்றான். பின்னால் அழவும் நேரிடுகிறது. ஏன், இதுவே வாழ்க்கையின் விபரீதம்!

**சிறந்த மனிதன்:** சிறந்த சிருஷ்டியை நோக்கிச் செல்கிறான்; பழைய பாதையை விட்டு விலகி, புதிய உண்மைகளைக்காண அவாவுகின்றான். தன்னம பிக்கையும் மன உறுதியும் கொண்டவன், பிறர் தயவை எதிர்பாராமல் மனோதிடம் கொண்டு, முன் னேறிச் செல்லும் சிறந்த மனிதன், தன்னுடைய குறைகளையே கண்டு சிரித்துவிட்டு மனம் தளராமல் மேல் செல்வான்.

**அலங்கோலமனிதன்:** மனித வடிவத்தில், பிரே தங்கள்போல அலைகின்றார்கள் சிலர்; வெறுக்கக் கூடிய அலங்கோல மனித வடிவம் இதுவே. உண் மையை நாசமாக்கும் மனித வடிவமல்லவா?

**பிச்சைக்காரன் :** மனிதன் வாழ்க்கையை வெறுத்துப் பிச்சைக்காரனாகிறான்; நன்றி கெட்ட உணர்ச்சியற்ற கொடிய உலகில், ஒருவன் பிச்சைக்காரனாக அலைவது மேலான வாழ்க்கை; செல்வத்தை உதறி எறிந்து விட்டு, உடனே பிச்சைக்காரனாக எங்கும் சுற்றித் திரிவது மனத்துக்கு அமைதியைத் தரும். அலைவதிலே, ஒரு சாந்தி உண்டு.

**அறிவும் இசையும் :** அறிவு அகண்ட சக்தியுள்ளதாக இருக்க வேண்டும். அறிவைத் திரட்டி அறியாமையைப் போக்க வேண்டும். சுயமாகச் சிந்திக்கப் பழகவேண்டும்; பிறர் நூல்களையும் சிந்தனைகளையும் படித்து ஒப்புவிப்பதில் எவ்விதபயனுமில்லை. பிளேட்டு மாதிரி வாந்தி எடுக்கக்கூடாது. மூலத்தின் சுடரை நிர்மூலமாக்கலாமா? உள்ளே புகுந்து ஆராய்ச்சிக் கண்கொண்டு அறிவைத் திரட்ட வேண்டும். இசையால் சோக வடுக்களை மனித இதயத்திலிருந்து ஆற்றலாம். மனித வாழ்க்கை துன்ப மிகுதியால் நைந்து சிதறும போது, இசை சிதறிய மன நிலையைக் கண்டு ஒருமுகப்படுத்தி இன்பம் தந்து வாழ்க்கையை நம்பிக்கைத் துறையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. இசை இனப உச்சிக்குப் பறந்து செல்லும்போது, தசையும் இனபஉணர்ச்சியால் கெட்டிப்பட்டு உறுதியடைகிறது. இசை செவியில் பாய்ந்ததும், உள்ளம் இன்பக் கடலாடுகிறது. இசையால், வாழ்க்கையில் புதிய நம்பிக்கையும வெற்றியும் ஏற்படக்கூடும். இது என் அந்தரங்க அனுபவம்.

கவிஞன் கீட்ஸ் :

## கவிதையும் உறக்கமும்

'அழகே இயற்கையின் நாணயம்' என்று ஆங்கில மகாகவி மில்டன் உணர்ந்தே கூறியிருக்கிருர். "அழகே உண்மை, உண்மையே அழகு" என்று இளங் கவிஞன் கீட்ஸ், மிகமிக ஆழமாக உணர்ந்து அனுபவித்த இன்ப இறுமாப்புடன் பாடியிருக்கிருன்.

எதிலும் அழகைக் கண்டான் கீட்ஸ். வாழ்க்கையின் ஆழத்தில், இயற்கையின் இனபலீலைகளில், விதியின் விபரீதத்தில், பூனையின் பட்டுடலில், சிமமதின் கர்ஜனையில், புலிக்குட்டியின் புதிய இனிய மழலையில், உறக்கத்தின் கனவுக் கதிரில், கவிதையின் கம்பீரமான கொந்தளிபபில், பெண்களின் புன முறுவலில்,—ஆம், எதிலும உள்ளும் புறமும்!

அழகை, இதயத்தின் அந்தரங்க மூலையில் எப படி அனுபவிப்பது? மனக்கண்ணுல்-அகக்கண்ணுல்!

உறங்குவதும் கலைதான், உறங்குவதும் கவிதை தான்; உறக்கத்தில்தான், கற்பனைச் சிறகு பிரமாத மாகவே மின்னி வட்டமிடுகிறது. நல்ல கவிஞன தான் நன்ருய்உறங்குவானை; உறக்கத்திலே, அற்புத மாகக் கனவுகளைக் கண்டு ஆவேசத்துடன் அனு பவித்து, அந்த ஆபூர்வமான அனுபவத்தைக் கவி தைக் கனலாகவே சிருஷ்டிக்கிருன்.

கவிதை எழுதுவது, சாதாரணவிஷயமல்லவே! எதையும் எப்படியும், யாபபை ஒட்டிக் கிண்டிவிட லாம் என்று நினைப்பது தவறு. புறக்கண்ணுல்

கண்ட அதிசயத்தை, அகக்கண்ணால் கண்ட அற்புதத்தை, அதி அற்புதமான கவிதை மின்னலாகத் தீட்ட முடியுமா? உண்மைக் கவிஞனால் முடியும். கீட்ஸினால் உடனே முடியும்! கவிதையை அனுபவித்தவனல்லவா?

அருளாவேசத்தோடு உதயமாகும் கவிதையை, இயந்திர போலிக் கவிஞர்களால் சிருஷ்டிக்க முடியுமா?

உண்மைக் கவிஞன், உறங்கி விழித்ததும், தான் கண்ட செல்வக் கனவுகளைக் கவிதைக் களஞ்சியமாக சிருஷ்டிக்கிறான். இன்ப வெறியில், பாடுகிறான்; அவனுடைய வலது கை, துடித்துப் பறக்கிறது மழைபோலக் கொட்டுகிறது, கவிதை; அதிலே சொல் வன்மை, இயற்கையாகவே தேன் கூடாக அமைந்து விடுகிறது. உண்மைக் கவிதை, ஆவேசக் குரலில், இடியாகவும், மின்னலாகவும், புயலாகவும் அகண்ட சக்தியோடு உதயமாகும், என்று கீட்ஸ் உணர்ந்தே கூறியிருக்கிறான். கவிதை, ஒரு ஒளி வெள்ளம், ஜோதி மழை; இனிமையும், சிந்தனைத் தெளிவும் உறுதி மொழியும் கொண்டது கவிதை.

உண்மைக் கவிஞன், மன உறுதியின்றி, மொழி வன்மையின்றி, கருத்தொளியின்றிக் கதறமாட்டான். போலிக் கவிஞர்களே, விளக்கெண்ணெய்க் கவிஞர்கள், எம்டி (காலி) டம்பாச்சாரிகள்!

அகராதியை அடுக்கிப் பார்ப்பது, கவிதையல்லவே; யாப்பைத் திருகிப்பார்ப்பதும் கவிதையல்லவே!

உண்மைக் கவிதை, சுந்தரக் கவிதையல்லவா? அழகை தரிசிக்க வேண்டாமா, கவிஞன் உள்ளத்திலே அழகை, அத்தர்போல அனுபவிக்க வேண்டாமா, கவிஞன்? உள்ளம் பூரித்த கவிஞன். உணர்ச்சியின் உச்சியில், இறுமாப்புடன் பாடுகிறான்; இது தான், கவிதை!

அவன் கவிதையிலே, ஆறு, கடல், குயில், மயில், சிங்கம், புலி, குழந்தை, அழகிய கன்னிகள், சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், சிருஷ்டி எழில் மேவிய சகல சராசரங்களும் ஓடியாடிச் சிரித்து விளையாடுகின்றன. இதை அனுபவிக்கத்தெரியாத கவிஞன், உண்மைக் கவிஞனாக இருக்கமுடியாது என்பது, கீட்ஸின் அந்தரங்கத் தீர்ப்பு. புலியின குரலும, கவிஞன்காதில் தாய் மொழியாகத் தித்திக்கும் என்றால், கீட்ஸ் உணர்ந்துதானே கதறியிருக்கிறான!

கவிஞன், மனிதனை மனிதனாகவே சரிநிகர் சமானமாகவே கருதுகிறான்; வித்தியாசமாக எண்ணுவதில்லை. மனிதன் சுதந்திரமாக வாழ வேண்டும என்பதுதான, கவிஞனின் அந்தரங்க தாகம, எதையும் காரணமின்றிக கட்சிக்காக வெறுப்பதில்லை. அரசனும், மனிதனதானே; மனிதப் பண்பை மறந்தவன், அரசனுமல்ல, மனிதனுமல்ல. பதவிஉயர்ந்தாலும், குணம குறையக்கூடாது. உன்னத ஸதானத்தில், மமதையோடு குரங்காட்டம் ஆடுவதில் என்ன பிரயோஜனம?

கவிஞன், உறங்குவான், உறங்குவான, உறங்குவான்; கனவு காண்பான், கனவை அநுபவிப்பான்; கனவைக் கவிதையாகவே சிருஷ்டிப்பான்.

உறக்கத்திலே, கவலை தீரும்; கவிதையிலே, கவலை தீரும். காலைக் கதிர், கவலையை மாற்றும். லட்சியம ஓங்கும்.

உறக்கத்தையும், கவிதையையும் ஷேக்ஸ்பியர் புகழ்ந்திருக்கிறார்; கம்பனும பாடித்தானிருக்கிறான. உறக்கத்தைக் கொலைசெய்பவன், சண்டாளன் என்று ஷேக்ஸ்பியர் கூறியிருக்கிறார்; இது அனுபவித்த தூக்கம். அனுபவித்த கவிதையல்லவா? கம்பன உறக்கத்தின் தீமையையே திட்டிக் காட்டுகிறான். (கும்பகர்ணனின் உறக்கம்.)

உறங்கி விழித்ததும், கவிஞன் கீட்ஸ் வாழ்க்கையின் குறுகிய காலவரையைபபற்றி அருமையாக வருணிக்கிறான். ''நினைறு, சிந்திய நமது வாழ்க்கை ஒரே நாள் தான்; ஒரு விருக்ஷத்தின் சிகரத்தினின்று உருண்டோடும் மிருதுவான பனித்துளி போன்றது; கடலின் கொடிய ஆழத்திலே ஊசலாடுகின்ற தோணி போனறது; வெடிக்கும நமபிக்கையில் உள்ள ரோஜா மலர் போன்றது; முகத்திரை நீங்கிய கோஷாப் பெண் போன்றது; மரக்கிளைகளிலே குதித்துக் குதித்து ஊஞ்சலாடும, கவலையற்ற பள்ளி மாணவன் போனறது, எப்படி நம்முடைய வாழ்க்கை? நிலையற்ற குறுகிய காலக் கொந்தளிப்பு, அமைதியற்ற நீர்குமிழி.''

கனவு காணும் கவிஞனே !
உறங்குவாய், உறங்குவாய், உறங்குவாய்!
இன்ப வெறியில், இன்ப வெறியில்,
பாடுவாய், கதறுவாய்.
அழகு காண்பாய், உண்மை காண்பாய்,
உண்மையை உறுதியுடன் உரைப்பாய்!
நீ ஒரு அபூர்வப் பிறவி,

ஜீனியஸ், மேதை,
ஒளிக்குயில், ஆம்!

பாரதியாரும் உண்மைக் கவிஞரல்லவா?

அருமையான சிந்தனைகள் கவிதை வடிவத்தில் மின்னிப் பொலிகின்றன. கீட்ஸின கவிதை எழில் தந்தச் சிற்பம போனறது; இயற்கை எழில், மங்காமல் கவிஞன் கண்ணிலும் உள்ளத்திலும் மின்னிக் கொண்டு, கவிதையில், சொற்சித்திரமாகவும் பொற்சித்திரமாகவும் அமைந்து விடுகிறது. காவியம், கீட்ஸின் கையில், ஓவியமாகவே உதயமாகிறது; கவிஞனின் காவிய மொழி அத்தனை சிறப்புவாய்ந்த எழிலோடு வந்து விடுகிறது. கீட்ஸின் கவிதை மணிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

காதல், ஒரு பொம்மை; அழகாய் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது, தொட்டு விளையாட மிகமிக இன்பமாகவும் மிருதுவாகவும் ரூபலாவண்யத்துடன இருக்கிறது; சோமபேறி, காதலையே சுற்றிச்சுற்றி வருவான. எத்தனையோ மாதங்கள, காதல வெறி பிடித்து இளைஞர்கள பெண்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு, அவர்களுடைய சிப்பை, ஒரு அலங்கார மான கிரீடமாகவே கருதி மயங்கி மயங்கித் திண் டாடுவார்கள். வெறியில், மயஙகாமல் இளைஞர்களே, உண்மையான காதலில் இறஙகி விழிப்புற்று வாழ விர்களாக! (இறைறயக் காதல்)

## [ கீட்ஸின் கவிமணிகள் ]

பெண்மை, பேருண்மை தாங்கி நிற்கின்றது; சிருஷ்டி எழில், ஓவியக் கோபுரமாக பெண்மையின் கூந்தலிலும, கண்களிலும, பழுத்த மினனுகின்ற மார்பிலும், கூாமையான விரல்களிலும், பாதச் சிற் பத்திலும, சிரிப்பின விரிவான ஆழ்ந்த பொருளிலும பரவிககிடக்கின்றது; பெணகளின விசால விழி களிலே, காதற் புயல், காதல் லாகிரி, காதல் போதை : கருணையற்ற பெண்மையில். சிருஷ்டி எழில் பகுத்தறிவைக் குறைத்து நன்றி கெட்ட மன நிலையைக் கூடத் தூண்டும்போல் தெரிகிறது. பெரும்பாலும பெண்களே, இப்படித்தான்.

ஆனல் ஆண்-பெண் இன்பத் தொடர்பிலே தான், இயற்கை சாந்திப் பால் வழங்குகிறது.

பெண்மையின அபரிமிதமான அழகைக்காணும் போது, பெண்களை அனுபவிக்கும் முறையில், என அகக்கண்ணில், அவர்கள் ரோஜா மலர்களாகவும், மிட்டாய்களாகவும காட்சியளிக்கிறார்கள். பெண்கள பெப்பர் மெண்டுகள்தான்.

கவிஞன், ஒரு அபூர்வப் பிறவி அவன் சிந்தனே அபூர்வமின்லல். சிருஷ்டியின எந்தப் பகுதியும், அவனுடைய கவிதைப் பொருளாகவே வந்து உதவுகிறது. அவன் முன் அரசனும் ஆண்டியும் ஒன்றுதான; மனிதன, மனிதத் தனமையோடு விளங்குகிருன். அவனுடைய கற்பனே நிறைந்த கவிதை யுலகிலே, குழந்தையின் குரலும புலியின் குரலும் விந்தைப் பொருள்களதாம. உளளம குதிக்கப் பாடும் உத்தமக் கவிஞன் பிறர் ஆக்ஞைக்குப் பாடாமல் இனப வெறியிலே, இனப உச்சியிலே பாடுகிருன். அவன் காதலிப்பது, அழகும் உண்மையும் தான.

* * *

பேரெழில் வாய்ந்த பூனேயே! உன் உடல் ஒரு ஓவியம்: உனது சுடர்க் கண்களும், வெல்வெட் காதுகளும், பதுங்கி நடக்கும் பாதங்களும், வளேந்து நெளியும் வாலும அழகின் அமசங்கள். எத்தனேயோ எலிகளேயும் சுண்டெலிகளேயும நீ விழுங்கி ஏப்பமிட்டு விட்டாயல்லவா? என்ன ஆச்சரியம்! உன் கண்களில், தீப்பொறிகள மின்னுகினறனவே! பெண்களிடம், எத்தனே தடவை கடுமையான பூசை வாங்கியிருக்கிருய்? உன் சிருஷ்டியே, ஒரு விந்தை தானே! 'மியூ மியூ' என்று கதறிக்கொண்டு, என் மேல் பாய்ந்து கடித்துவிடாதே, கவிஞன் உள்ளத்தோடு, உனது தோற்றத்தை நான் ரசிக்கிறேன்.

மில்ட்டன், ஒரு மகாகவி: சிருஷ்டியிலே, இசை சுழன்ருேடிச் சிந்தனே உலகையே அலங்கரிக்கிறது, நிகரற்ற கவிஞர்; கற்பனே யுலகிலே, கருத்தோடு; பாஷையின் புலமை வெறியோடு, சிருஷ்டிக்கும கவிதா மன்னன், மில்ட்டன. யாரும் காபியடிக்க முடியாதல்லவா, இந்தக் கவிஞனே?

காதலே, இன்பம்; நிகரற்ற இன்பம்; பெண்மையிலே, எல்லேயின்றி எழில் சிறகடித்துப் பறக்கிறது; தொட்ட இடமெல்லாம் தித்திக்கும பேரெழில் வாய்ந்த வடிவமல்லவா, பெண் வடிவம;

உடம்பெல்லாம், திரவம்; கண்ணும் கையும் குரலும், மனிதன் அறிவையே ஏமாற்றி விடுகின்றன. பெண்களின் இனிய கண்கள, போதைக் கேணிகள்; மிருதுவான ஈரமான உதடுகள், மனித உதடுகளைத் தடுமாறவே தூண்டுகின்றன;

நங்கைகள், சாந்திக் கனிகள்; புன்முறுவல் பூத்து நிற்கும் கன்னிகள், பழுத்த மின்னுகின்ற இனிய கனிகளாகவே காட்சியளிக்கிறார்கள.

காதல் உலகிலே, வெள்ளிக் கனவிலே, திரவக் கைகள் தொட்டுச் சிலிர்க்கக் கலந்து விளையாடுகின்றன.

ஆகா, என்ன பெண்மை!

பெண்மையின் பழுத்த மார்பிலே, காதலன் உறங்கி விழிப்பது, எவ்வளவு அபூர்வமான இன்பம், —நிகரற்ற இனபம்தான். நெஞ்சலையின் ஏற்ற இறக்கத்திலே, காதலன் கனவு கண்டு இன்பம் துய்க்கின்றான், காதலன் கவிஞனாகி இன்ப வெறியில் கதறும்போது, கவிதை சிந்தனையின் பொன் சிகரத்தையே தொட்டு விடுகிறது.

நிகரற்ற தூய காதல், சட்டத்தை மீறியே, சமூக எல்லையைத் தாண்டியே, இன்பம் துய்க்கத் துணிவு கொள்ளும்; அதுவே இயற்கையான காதல், நுட்பமான இங்கிதமான காதல், கவிதை நிறம் செறிந்த காதல். தூய காதல் அகண்ட சக்தி வாய்ந்தது.

* *

தூக்கமே, அருமையான தூக்கமே! நீயே, சர்வ சஞ்சீவி; கவலையைக் களையும் ஆற்றலை உன்னிடமே கண்டேன்; மனச்சாட்சி என் உள்ளத்தில் புயலாக வந்து தாக்கும்போதும், நீயே என்னைக் காப்பாற்றத் துணிகின்றாய்! உன் பேராதரவே அபூர்வம்!

*     *     *

இளங் கவிஞன் கீட்ஸ், சந்திரனைக் கண்டு ஆச்சரியப்படுகிறான்; குழந்தை முதல், இரவிலே கண்கள் நிலவோடு நின்று இன்புற்று சாந்திபெற்றிருக்கின்றன; நிலவொளியின் அகண்ட சக்தியைக் கவிதையெழிலோடு வருணிக்கிறான்; நிலவு ஒரு அற்புதம், மலையுச்சியிலே ஒளி விளக்காக நின்று அலங்கரிக்கிறது; ஞானியின் பேனாவும், கவிஞனின் நாணல் குழலும் நண்பர்களின் அன்புக் குரலும் எவ்வளவு இன்பம் ஊட்டுமோ, அவையனைத்தும் உன்னிடமே கண்டு மெய் மறந்தேன; நீ, ஓர் இன்ப உச்சி, எழிலொளி, சௌந்தரியச் சிகரம்;

உன்னிடம் பெண்மையின எழில் அனைத்தையும் கண்டிருக்கிறேன்; பச்சை நாணலின்மேல் சாய்ந்து கொண்டு, சந்திரனை ருசி பார்த்து அனுபவிப்பதும், காதல் உலகிலே தனி இன்பமதான். நிலவுமறையும்போது, அருணோதயத்திலே, சூரியன், ஜலக் கொங்கையினின்று தன் கதிரைத் தூக்கி விரிக்கும்போது, அலைகின்ற அலைகளிலே, என்ன ஜிலு ஜிலுப்பு, என்ன அற்புதம்! உச்சியில், சூரியன், தன் கடமையை நிறைவேற்றும்போது, ஒளிக் கதிரின் அக்னி காற்றிலே பரவித் துடிக்கிறது.

அகண்ட காதல் சக்தியே! நீயே
என் உள்ளத்தை ஆள்கின்றாய்;
நீயே சோக கீதம;
நீயே சாந்தி நீர்;
உன்னை நினைக்கும் போதெல்லாம்,
காதல் நினைவுகள் புரட்சிகரமாக
சிறந்த இனிய வேதனையின்
ஆழத்தினின்று
தத்தளித்துக் கொப்பளித்து
வருகின்றனவே!
என் செய்வேன்!
காதலும் கவிதையும், தொடர்ந்த
ஜிலுஜிலுப்புடன
என இதயத்தில் புகுந்து
ஆசையுடன என் கற்பனை உலகையே
அசைக்கின்றனவே!
என்ன இன்பம, ஆஹா!
காதலின லட்சியத்தையே,
கவிதையின் கோட்டைமதிலில்
இனிய கொடியாக வெற்றியுடன்
பறக்கவிடலாமா?
ஒரே முத்தம்
பழைய ஞாபக டயரியைப்
புரட்டிக் காட்டி
மின்னலிடுகிறது.

* * *

கவிதை, இன்ப வெறியில்,
காதல் தடாகத்தில்
நீர்க்குமிழிகளாகக் காட்சி யளிக்கிறது;
கவிதையும் காதலும
கற்பனை யுலகிலே கலந்து கசிந்து
நெருங்கி மயங்கி வாழ்கின்றன,
சிரித்து விளையாடுகின்றன.

* * *

அழகியின் உடலெல்லாம்
ஒளிக்கதிர்க் கதம்பம்;
அவள் கைகள், நீண்ட
நட்சத்திரக் கதிரோவியம்;
அழகியைக் கண்ட அழகன்
ஆசைப்பட்டு,
கொதித்துக் கொப்பளிக்கின்றான்;
என்ன இன்பக் குழப்பம்!

* * *

காதல் உலகிலே,
உடலை உடல் பதம்பார்ப்பது
எவ்வளவு அழகு;
அவயவங்கள், நெருங்கி
நெகிழ்ந்து முருகி, முறுக்கி
முறிகின்றன, இறுதியிலே;
மனித முத்தம்,
ஒரே வெறி முத்தம்
அழகின் அமுதமாக
வாழ்விலே மிதந்தோடி வருகிறது.
காதல் உலகம், தேன் உலகம
தித்திக்கும உலகம், கனவுலகம்,
ஆம்! காவிய உலகம!
அழகி, மோகினி
ஒரு ஒளித்திரி,
நின்று நிமிர்ந்து புன்முறுவல்
பூத்து எரிகின்றாள்;
இந்த ஒளி வெள்ளத்திலே,
அவள் சிரிக்கும் நிலவிலே,
காதலன், அழகன், பித்தன்
குளித்து, உள்ளம் பூரிக்கின்றான்;
அவளுடைய அழகின் போதையினின்று,
இறைவனே என்னைக் காப்பாற்றவேண்டும்!
இரவிலே, இருட்டின் மெருகிலே,

அவள் அந்தரங்க அழகு
அபாரம், அபாரம்!
அவளுடைய சிரிப்புத் துண்டுகள்,
வயிர ஒளிக் கிரணங்கள
இன்ப வெறியிலே, தழுவி நிற்பதே
நலம், நலம், சாந்தி, சாந்தி.

*　　*　　*

நிலவே! உனது ஒளி ஒரு அற்புதம்! நீயே கவிஞர்களைச் சிருஷ்டிக்கின்றாய்: உனது ஒளி வெள்ளத்தில், உலகமே ஒரு விந்தையாகக் காட்சியளிக்கிறது, கவிஞன் உள்ளம் பூரித்து, உன்னை அனுபவித்துப் பாடும்போது, கவிதையே தனிச் சோபையோடு உதயமாகிறது! மேகங்களை நீ அலங்கரிக்கின்றாய், ஆறுகளை ஜோதிக் கதிராக மாற்றியமைக்கிறாய், அழகிய கண்களில் அழகிய கனவுகளைக் கொட்டிப் பொலிகின்றாய்! தனிமையிலே இலைகளைத் தழுவி நிற்கின்றாய்! நீ இன்ப முகத்தோடு அலைவதைப் பார்த்தால், நீ அருமையான கதைகளைச் சொல்ல ஆசைப்படுவதுபோலத் தெரிகிறது. இயற்கையின் சொர்க்கமாகவே, உன செயல் விளங்குகிறது. உள்ளத்தையே கொள்ளை கொள்ளும் அபூர்வமான வெள்ளி விளக்கல்லவா, நீ! மலர்கள் எல்லாம் உன் ஜோதி மழையில், வெள்ளி மலர்களாக மின்னிப் பொலிகின்றனவே! உனது ஒளி விழாவில் நின்று கொண்டு உள்ளம் பூரித்த கவிஞன் பாடாமல் இருக்க முடியுமா, என்ன?

*　　*　　*

காதலர்கள் சந்தித்துக் கண்களால் பேசும் போது, அவர்கள் கண்களிலே கவிதை மின்னல் குமுறிக் கொண்டும் மின்னிக் கொண்டும மிதந் தோடுகிறது. காதல் கண்களிலே காதல் ஒளி கனல்கின்றதல்லவா; காதலர்கள் சம்பாஷணை கவிதையாருகவே ஓடிக் கொந்தளிக்கிறது.

*　　*　　*

கவிஞன், தானே பிறக்கின்றான், உள்ளத்திலே ஒளியோடு உதயமாகிறான்; போலிக் கவிஞன்தான், செயற்கைக் கவிஞன், உளறும அறிவிலி.

* * *

எனக்குக் காதல் நினைவு கடுமையாக வந்து தாக்கும்போது, நான் ரோஜா மாலையிலே தலைசாய்த்துப் படுத்து உறங்குவேன். சிந்தனை தித்திக்கும், கனவு பரிமளிக்கும்.

* * *

தன்னம்பிக்கை அவசியம் வேண்டும். துன்பம் வந்து உள்ளத்திலே புகைந்து கொண்டு நிற்கும் போது, தன்னமபிக்கைதான் நம்மைக் காப்பாற்ற முடியும். வேதனையை மறந்து, வெற்றியை நோக்கி முன்னேறலாம.

* * *

கேட்ட பாடல்களைவிட, கேட்காத பாடல்களே அதிகமான இன்பம் கொண்டவை. ஆன்மீகப் பாடல்களிலே அதிகமான இன்பம உண்டு.

* * *

புகழ், ஒரு நிதான மில்லாத தாசிப் பெண்; நீ உயிருடன் இருக்கும்போது, புகழ் வராது; நீ இறந்தபின்தான், புகழ் புறப்படும். ஆகையால், புகழை நம்பாதே! ஐயோ, நம்பாதே!

* * *

கீட்ஸின் கடிதங்கள் எல்லாம், கவிதை மணிகள் தான், கவிஞன் உள்ளத்திலே குமுறி எழுகின்ற உண்மைகளை, கடிதத்திலே கவிதை மணத்துடன் தீட்டினன் கீட்ஸ்; இளங்கவிஞன் வாழ்க்கையில் அனுபவித்த அபூர்வ உண்மைகளை இலககிய இறுமாப்புடன் கடித மாலைகளில் புனைந்திருக்கிறான்.

கடிதங்களைப்பற்றி வேறு தனிக் கட்டுரை எழுதலாம், பின்வரும் இதழ்களிலே.

கற்பனை உலகமே தனி உலகம்; அதில் பல இன்பங்களையும் ஏக காலத்திலே அனுபவிக்கலாம், பல பருவங்களும் கற்பனையுலகிலேசந்திக்கும்; எந்த மலரையும், எந்தக் கனியையும், எந்த நிலையிலும் சந்திரனையும் சூரியனையும், நினைத்த உடனே சந்தித்து இன்புறலாம்; கவிஞன் உலகமே கற்பனை உலகம்தான், லட்சிய உலகமதான், இன்பக் கதம்ப உலகம்தான்.

கற்பனையால், எந்தப் பெண் அழகியையும் சிந்தித்து இன்புறலாம். ஒரு பெண் ஆடை நழுவி, நகை நழுவி, அபூர்வமாக கையில் ஒயின கிண்ணம் தாங்கி நிற்பதைக் கற்பனை உலகிலே நீண்ட நேரம் அனுபவிக்கலாம் அல்லவா? பெண்மை அழகு, கற்பனையால் பன்மடங்கு சோபை பெற்று எழிலோவியமாக கவிஞன் கண்ணில் மின்னவிடுமல்லவா?

கற்பனையைப் பட்டுக்கயிறு கொண்டு கட்டிச் சிறைபபடுத்தாதே! கற்பனை, இன்ப வெறியில் அலைந்தலைந்து வளர்வதாக!

*　　*　　*

கவிஞர்களே! குயிலின இன்ப இசை வெறியைக் கேட்டு இனபுற்றிருக்கிறீர்களா? குயிலின் இனிய பாட்டிலே, மிகமிக அருமையான இனிய ரகஸ்யங்கள் மிதந்து வருகின்றன; வேதாந்த உண்மைகளும், வாழ்க்கையை அலங்கரிக்க உதயமாகின்றன. இனப துன்ப உண்மைகள் குயிலின் இசைக குரலிலே சிலிர்த்து எழுகின்றன!

*　　*　　*

பெண்மையின் அழகும் நாளடைவில் அழிந்து போவதுதான்; எதுவும நிண்டு நீடித்து நிற்பதல்லவே! அழகியின் பொலிவுற்ற கண்களும், மங்கி மங்கி மறைவதும கண்கண்ட உண்மைதானல்லவா?

வாழ்க்கையே ஒரு கனவு, தோன்றி மறைகின்ற இசைக்குரல்; கனவு கசங்கிக் கசந்து கரைந் தோடுகிறது.

தனிமையிலே நான் இன்பம காண்கின்றேன்: என் தனிமையிலே, அவ்வளவு இனிமை! என் அறிவெல்லாம் கற்பனையோடு கலந்து கமழ்கின்றது,- இதைவிட வேறு இனிய உலகததைச் சிருஷ்டிக்க முடியுமா, என்ன?

நான கற்பனை உலகிலே, இன்ப உச்சியில் நின்று இன்புறும்போது, திருமணம கூடத் தேவையில்லை யென்று தோன்றுகிறது.

*  *  *

மனித வாழ்க்கையிலும் நானகு பருவங்கள் உண்டு: வசந்தம, கோடை, இலையுதிர்காலம், குளிர் காலம. இந்த நான்கு பருவஙகளும், மனதைச் சுற்றி வளருகின்றன.

வசந்தத்தில், மனிதன் இன்ப வெறியோடு எதையும் ருசிபார்க்கிறான், அழகின் ரசத்தை அள்ளிப் பருகுகினறான்.

கோடையில், வசந்தத்தின் பழுத்த கனிகளைத் தின்று சிந்தித்து இனபுறுகிறான

அவன ஆன்ம வளர்ச்சியில், இலையுதிர்காலம வருகிறது: சிந்தனையில் ஆழ்ந்து, சிறகுமூடி மௌனியாகி நிற்கின்றான்.

பனி காலத்திலோ, மெய் சுருங்கி மனம் சுருங்கி மறைகிறான், மனிதன்.

நானகு பருவஙகளும், உடலையும மனதையும் தொட்டு வளர்ந்து தேய்கின்றன,

என் கவிதையெல்லாம் எழுதி முடிவதற்குள், நானே மறைந்துவிட நேருமோ எனறு கவலையுறுகிறேன்: இந்த அகண்ட உலகிலே, நான் தனியே நின்று சிந்திக்கிறேன்; எனது கவிதை உலகையும் கற்பனை மின்னலையும் இயற்கையின் எழிலையும் எவ்வாறு விட்டுச்செல்வேன்; காதலும் புகழும் கரைந்து மறைந்துவிடுமோ, ஐயோ!

கவிதைக் கடலிலே, நான் பத்து வருஷங்கள் ஊறிக்குளித்து இன்புறக் காலம் இடந்தருமா?

*   *   *

காதலியின் கரங்கள் எனைத் தழுவும்போது நான் அவளுடைய போதைக் குரலிலே ஒட்டிக் கொண்டேன். அவளுடைய உதடுகள் எனக்கே உரிமையாகிவிட்டன, அவள வாயினின்று வழிந்தோடுகின்ற இன்பம பிரமாதம, ஐயோ, காதல் ஜ்வாலையே!

பெண்மையின் விழிகளிலே போதை, அதரங்களிலே போதை, இடையிலே காதல் லஹரி; மின்னல் கூந்தல், சூரிய ஒளி வெள்ளத்தில் மத்தாப்பிட்டது; அவளுடைய தோள்கள், லிலி மலர்கள்; நெருங்கிய மார்புகள, முத்தமிடுகின்றன; இவ்ளுடைய அவயவப் பூங்காவில் எந்த பினனத்தைத் தொட்டாலும், என் உள்ளம் காதல் தீயில் உருகி வடிகிறதே, என் செய்வேன்?

அழகியே, என் மீது கருணை காட்டுவாயாக! என் நெஞ்சை அள்ளும் அழகுக் கனி நீ! ஆம்!

*   *   *

இனிய நம்பிக்கையே! என் தலைக்குமேல் உனது வெள்ளிச் சிறகை விரித்துக் காட்டுவாயாக!

துன்பத்தைத் துரத்தியடிக்க உனது ஒளிக் கதிர் தேவை! வழி காட்டுவாயாக!

எனது நாடு, எனது தேசம் என்றும் வறுமை நீங்கி இன்பமாக சுதந்திரத்துடன் வாழத் துணை செய்வாயாக!

*   *   *

பெண்ணைக் கண்டதுமே, எனது காதல்வெறி கடுமையாகவே வந்துவிடுகிறது; அவளுடைய அழகுத் தடாகத்தில், ஒட்டகம்போல் அதிகமாகவே நீரைக் குடித்து தாகசாந்தி செய்து கொள்ளும்

ஆவல் என் உள்ளத்திலே குமுறி எழுகிறதே! காதலே நித்திய இன்பம், அழிவதில்லை, சாவதில்லை யென்றே எண்ணுகிறேன்!

* * *

கீட்ஸின் கவிதைகளுக்கு அகண்ட அற்புதமான சக்தி உண்டு, என்று லாம்ப், லீஹண்டு, ராபர்ட் பிரிட்ஜஸ் ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்கள்; இளமைச் சின்னங்கள் சிதறிக்கிடந்தாலும், கவிதைக் கொடி உறுதியாகவே தலைதூக்கி நிற்கிறது. சிற்சில இடங்களில், மில்டன், ஷேக்ஸ்பியரைவிட, மிக அழகாக உணர்ந்து கவிதையை ஒரு தந்தச் சிற்பமாகவே கீட்ஸ் சிருஷ்டி செய்திருக்கிறான்; அவனுடையகாவியம், கிரேக்கஓவியமாகவே காட்சியளிக்கிறது.

இளங் கவிஞனின் இனிய சொற்கள், இதயக் கடலினின்று கற்பனைச் சிறகோடு உதயமாகின்றன. கற்பனைச் சித்திரங்கள் அபூர்வம்தான், அசைக்க முடியாத உறுதியான சித்திரங்கள்தான. இலக்கிய இறுமாப்பு, தந்தச் சிற்பத்தில் குஞ்சங்கட்டிக் குலுங்குகிறது; எவ்வளவு அருமையான கவிஞன், கீட்ஸ் பார்த்தீர்களா?

மனிதன் உலகில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம என்ன? "அழகே உண்மை, உண்மையே அழகு"; இதை மாத்திரம மனிதன் உணர்ந்தால் போதும் என்று கீட்ஸ் உறுதி கூறுகிறான்.

ஆனல் இதை எல்லோராலும உணர்ந்து கொள்ள முடியுமா? கற்பனைக் கண்கொண்டு, உணர்ச்சி இதயம் கொண்டு, அகக் கண்ணுடியால் உணர வேண்டிய விஷயத்தைக் கவிஞன்தான உணர முடியும்.

கீட்ஸின் கவிதைகளிலே, நாம் காண்பது அனுபவித்த அழகும், அனுபவித்த உண்மையுந்தான்; சொற்சித்திரம், மனமோகனச் சித்திரம்தான், அனுபவ முத்திரைதான்; அனுபவிக்காமல் எழுதுகின்ற கவிதை, உருப்படியாகாது என்பதை கீட்ஸ் நன்கு உணர்ந்தவன.

கீட்ஸ் எழுதியிருக்கும் கவிதை "எண்டிமியான்" (Endymion), நீண்ட நாவல்போல ஓடுகிறது; இதில் அருமையான வருணனைகளைக்காணலாம. தொடர்ந்த சொல்லோவியங்களும் மின்னலிடுகின்றன. பல விமர்சகர்கள், இதை மட்டமான கவிதை என்று குறை கூறினார்கள்; ஆனால், கீட்ஸ், இதைபபற்றி லட்சியம் செய்யவே இல்லை. மனோதிடம கொண்டு, மகோன்னதமான கவிதைகளை மீண்டும் இன்பவெறியில் எழுத ஆரமபித்து விட்டான்.

'இசபெல்லா' (Isabella) என்ற காதல் ஓவியம், மிக அருமையான சிருஷ்டி, பொகாஷியோவின் கதையைத் தழுவி எழுதிய கவிதைதான் இது; உண்மைக் காதலுக்கு, இயற்கைதான் தூண்டுகோலும, வழிகாட்டியும்; ஜாதி, செல்வம, அந்தஸ்து வந்து தடைசெய்ய முடியாது. நல்ல காதலை, தூய காதலை நாசம் செய்வது, இயற்கைக்கு விரோதம், மனிதவளர்ச்சிக்கு முரண்; ஆகையால் நாம் இயற்கையாகவே காதலிப்போம் என்ற முடிவுக்கு வருகிறான், கீட்ஸ். காதலன் லொரென்சோவைக் கொலை செய்தது பெருந்தவறு: காதலியின் சகோதரர்கள், கொலை செய்யத் துணிந்துவிட்டார்கள். இசபெல்லாவின சகோதரர்கள், உண்மைக் காதலை அறியாத வியாபாரபபுலிகள் அல்லவா? பணத்தால் யாரையும கொலை செய்யலாம் என்று துணிந்து விட்டார்கள், அறிவிலிகள்.

தன் காதலனின் ஆன்மாவையே பூஜைசெய்கின்ற இசபெல்லாவின காதல் அபூர்வமானதுதான்!

# கவிதையின் சிருஷ்டி எழில்

## ஜனநாயகக் கவி

## வால்ட் விட்மன்

ஜனநாயகக் கவிஞன் வால்ட் விட்மன் "எனது பாடலி"ல் தன்னுடைய சிறந்த லட்சியத்தையும், வாழ்க்கையின் தத்துவத்தையும், வெற்றி-தோல்விகளின் விபரீதமான பொருளையும் அந்தரங்க முடிவுகளையும் கம்பீரமான கவிதா வெறியோடு கதறியிருக்கிறன்.

'எனது பாடல்' நடை, சொந்தமான சிருஷ்டி ஜ்வாலையினின்று எழுந்த சுடரோவியம். உலக இலக்கியங்களிலே, சிருஷ்டி யூற்று எபபடி உதயமாகிறதோ, அதேபோல் விட்மனின் உள்ளத்திலிருந்து கவிதை ஒரு வெள்ளமாகவே உதயமாகிவிட்டது என்று சொல்லிவிடலாம.

பச்சைப் புல்லின் மேல் படுத்துக்கொண்டு எழுதிய காவிய நூலே Leaves of Grass புல்லிதழ்கள். இது ஒரு சிறந்த சிருஷ்டிக் கனவு, அகத்தினின்று தோன்றிய அருளருவி. எங்கும் பரவி வளர்ந்திருக்கும் பச்சைப் புல்லைக் காணும்போது, கவிஞன கண்ணில் கடவுளின சிருஷ்டி மினனலிடுகிறது. இயறகையிலே, கடவுளின் கைரேகை தெரிகிறது எனறு கவிஞன் உள்ளம் பூரித்து, இதன தத்துவத்தை ஒரு குழந்தையிடம் விரித்துச் சொல்லமுடியாமல் தத்தளிக்கிறன். கவிஞன் ஆழ்ந்த உண்மைகளை, எப்படியோ அருளாவேசத்தோடு உணர்ந்து அனுபவிக்கிறன்; பாஷையிலும் மந்திர சக்தியோடு, தன உணர்ச்சிகளையெல்லாம் என்றும் அழியாமல் கொட்டிக் கட்டிவிடுகிறன்; கடவுளின் அகண்ட சக்தியை,

தன் இதய வாயிலாக அனுபவிக்கும் சக்தி வாய்ந்தவன் அருட் கவிஞன்; யாப்பில் அடங்கினாலும் சரி, அடங்காவிட்டாலும் சரி, அவனுடையபாஷையிலே, சிருஷ்டி மின்னல் விளையாடுவது உண்மைதானே? இதை ஆட்சேபிக்க முடியுமா?

Leaves of Grass—உத்தேசம் *14,000* வரிகள் அடங்கிய கவிதை நூல், உலகில் உள்ள சகல தத்துவங்களையும், இதில் காணலாம். வசன கவிதையிலே, இறையொளி, இதயக் கண்ணாடியில் இடையறாது பிரதிபலிக்கிறது. மின்னும் சொற்கள், மேலும் மின்னுகின்றன. பின்னும் சொற்கள் மேலும் பின்னுகின்றன.

மின்னலுக்கும் பின்னலுக்கும் மத்தியில், உண்மைகள் தோன்றி மறைகின்றன. சிருஷ்டி எழில், வரிகளுக்கு மத்தியில், சொற்களின் உள்ளத்தொடர்பில், கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. புல்லிதழ்க் கவிதையை அமைதியாகப் படிக்கவேண்டும்; சாந்தி வழங்கும கவிதைகள் நம உள்ளத்தில்ஊறி மலர்ந்து விடும்.

### சிந்தனை மின்னல்கள்

ஆ, நட்சத்திர இரவு! அது நூல்கள், உபதேசங்கள் அனைத்தையும் கடந்த பெருமையுள்ளது; அதனுடன் மனங் கலந்த காலம், ஆத்மானுபவக் காலமாகும்; அஃது எல்லையற்ற தெய்வ விளக்கம்! பால் வெளியைக் காண்கிறேன்! அது சத்தமில்லாத இசை விரிவாகக் காண்கிறது; சொல்லுக்கடங்காத சொரூப கானம்.

இயற்கையோடு வாழ்ந்தால், எவ்வித நோயும் நம்மைத் தீண்டுவதே இல்லை. ஆஸ்பத்திரி தேவையே இல்லை. நான் இரவிக் கதிரிற் குளிக்கிறேன். நானும் அம் மணம், இயற்கையும் அம் மணம்; உடை, தொந்திரவாக இருக்கிறது.

*　　　*　　　*

சூரியஜோதி, கவிஞனுக்கு உகந்த விருந்து; உதயம் உள்ளத்தில் பாய்கிறது. கிழக்கே ஞானோதயம் மின்னலிடுகிறது; ஆசியாவே சகல கலைகளுக்கும் அந்தரங்கமான தாயகம்.

*　　　*　　　*

சந்திரன், மேகத்தில் மூழ்கி மூழ்கி வானில் நீந்தி நீந்திச் செல்கிறது. கவிதையும் இலக்கியமும் அறியாத தனிச் சிறப்பொன்று அதனிடம் காண்கிறது. சந்திரனே, அழகு தேவதை! ஒரு பெண்ணைப்போல் அது தனுக்காக தன் இரகசியத்தை மறைத்து வைக்கிறது. திடீரென்று முழுப்பொலிவுடன் ஒரு நாள் தோன்றி, மறுநாள் மெல்லமெல்லத் தன அழகை மறைத்துக்கொள்கிறது. கவிகளையும் கலைவாணரையும், காதலரையும அது தன்னிடம் வணங்கி மயங்கச் செய்கிறது. "தன் காதலர் வியந்து போற்றி ஆவலாகத் தொடரும்போதும, தனது பெண்மை இரகசியத்தை, யாருக்கும் புலனாகாமல் தனுக்காக மறைக்கும் வித்தை, அதற்குத் தான் தெரியும்" என்று ஒரு புலவர் எழுதுவது சரி!

*　　　*　　　*

மீனும் மதியும் மிளிரும் இரவில், எனக்குத் தாராளமாகப் பாட்டும் கவிதையும் உதிக்கின்றன.

இலக்கியப்பசி என்னைவிடவில்லை; என் பையில் ஏதாவது நல்ல நூல்களை எப்போதும் நான் வைத்திருப்பேன். திருப்பித் திருப்பிப் படிப்பேன். எனினும, இயற்கைதான் என் உரைகல். அதில் எல்லா நூல்களையும் பதம் பார்ப்பேன. அகராதி, இலக்கணங்கள் வைத்து இலக்கியங்களை நான் அளவிடுவதில்லை; காடும மலையும் கடலும கதிரும் நம நூல்களை நிதானிக்கின்றன! உடலைக்கடந்த உள்ளானமா, 'இஃது இப்படி' என்று தீர்மானிக்கிறது.

*　　　*　　　*

நிதான புருஷன் கவிஞனே; அவன் ஒவ்வொரு பொருள, குணத்திற்கும அளவான தகுதியளிக்கிறன்; பல பானமையான வஸ்துக்களை அவனே நிதானிக்கிறன்; தனது காலதேசஙகளுககுத் திறவுகோல். அவனே; குறையைநிரப்பி, கண்டிக்க வேண்டியதைத் தணிக்கையிட்டுச் சரி செயவோன், அவனே! ஹிந்து, தனது அன்பு மாணவனுக்கு, மூவாயிரம ஆண்டுகளுக்கு முனனிருந்த கவிகளிடமிருந்து, இன்று உருபபடியாய் வந்த காதல், போர் நீதிகளைப்பற்றி உபதேசிக்கக் கேட்கிறேன.

*　　　*　　　*

உலகின் மௌன வாசகத்தில், ஆத்ம சிருஷ்டி நடக்கிறது; பூரணமான ஒருவனுக்கு, அல்லது ஒருத்திக்கு, உலகும் பூரணமாயிருக்கும என்று உறுதி கூறுகிறேன்; மனக் கசடனுக்கு, மனவேதனையே வந்து தாக்கிக்கொண்டே'நிற்கும்.

*　　　*　　　*

பாட்டின பயன், பாடகனுக்கே மிகுதியாக மீளுகிறது; திருடனுக்கு, திருட்டு மீள்கிறது; கொலைஞனுக்கே, கொலைப்பயன் பெரும்பாலும் வருகிறது; காதலனுக்கே, காதற்பயன் பெருமபாலும் திரும்பி வருகிறது; பிரசங்கிக்கே பிரசங்கப் பயன்.

*　　　*　　　*

இருள், புயல், பசி, கேலி, விபத்துக்கள், தோல்விகள் அனைத்தையும், மரங்களைப்போல விலங்குகளைப்போல எதிர்த்துப் பொறு.

* * *

நாம் அடையும் உலகு, தொழிலுலகு; முன் செல்லும் புதிய உறுதியுலகு; அதற்கு வழி துலக்குவீர்,

* * *

பணத்தை புறக்கணி; கேட்பவருக்கெல்லாம் தானம் செய்; மடையர் பித்தர்களையும் ஆதரி; உன் உழைப்பு வருவாயால், பிறருக்கு உதவு; கொடுங்கோலரை வெறு; கடவுளைபபற்றி வாதாடாதே; மக்களிடம் பொறுமையாகவும் தயவாகவும் இரு. யாருக்கும் தொப்பி எடுக்காதே! செல்வத்தாலும், செல்வாக்காலும், உலகத்தைச் சீரழிக்காதே!

* * *

பயணப்படு, கவலையற்ற ஜீவனே! ஆழக் கடலுக்கே ஓட்டு; உன்னுடன் நான்; என்னுடன் நீ; துருவுவோம் உலகை. ஏனெனில் மாலுமி செல்லத் தைரியமற்ற இடத்துக்கு நாம் செல்கிறோம். நாமும கப்பலும ஒழிந்தாலும பரவாயில்லை. மேன் மேலும் செல், என் திராத்மாவே!

விட்மனுடைய கவிதைகள் அனைத்தையுமே படித்துமுடித்ததுமே, பாரதியாரின்வரிகள் நினைவுக்கு உடனே வருகின்றன :

"எத்தனை கோடி யின்பம்
வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!"

ஜனநாயகக் கவிஞன் விட்மனுக்கு, உலகம் ஒரு கடல்; இறைவன், அதன் தலைவன்.

கடல் அலையடிக்கிறது; உள்ளக் கடல் ஊசலாடு கிறது. சிற்றின்பக் கரையினின்று, பேரின்பக் கரைக்கு விட்மனின் ஆன்மா ஆனந்தமாக நிராசையாக நிம்மதியாக நீஞ்சி முன்னேறுகிறது. விண்ணொளி மின்னொளியாகவே வந்துவிடுகிறது. விதியினுள், இறையின் நிறைமொழி மௌனமாகவே விளையாடுகிறது. அழுகவோ, சிரிக்கவோ, நெஞ்சும் மொழியும் இடந்தரவில்லை. அகண்ட சக்தியின் ஆசிமொழி அமைதியாகக் கவிஞனின் கலங்கிய உள்ளத்தை அலசித் தூய்மைப்படுத்துகிறது. உலகம் உருண்டையா, தட்டையா என்று யோசிக்க இதுவா நேரம்?

கவிஞர்களுக்கு இரண்டு பெரிய தேவைகள்; அனுபவம், அமைதி.

விட்மன் ஆதியில் கம்பாசிட்டர்; இறுதியில் கடவுட்பித்தன்.

பெண்களின் கண்களிலே கவிதை சதிராடுவதைக் கண்ட விட்மன், பின்னால் ஆன்மாவின் ஒளிக்கதிரைக் கண்டு வியந்தான்.

வறுமையைக் கண்டு அஞ்சாத விட்மன், துரும்பின் ஆவேசத்திலும இறையொளி விம்மிக்கொண்டு வருவதைக் கண்டு, ஆனம விந்தையை தன்னையறியாமலே உணர்ந்து உளளம் பூரித்தான்.

பேருண்மைகளை நோக்கிச் சென்ற விட்மன், அகராதியின் இறுமாப்பைச் சிதறவடித்து புதிய சொற்களையும, புதிய சொற்றொடர்களையும் சிருஷ்டி செய்தான். அகராதியின் ஆழத்திற்கு மேல் ஆழமாக, உயரத்திற்குமேல் உயரமாகவே, அவனுடைய கவிதைச் சொற்கள் ஓவிய விந்தைச் சிறகுபெற்றுப் பறந்தே வருகின்றன.

விட்மன் கவிதையிலே, சிருஷ்டி எழில் அதிகம்; ஆங்கில இலக்கியம் புதிய பாதையில் வளர்ந்திருக்கிறது. ஆம்!

தாகூரின் 'கீதாஞ்சலி'யிலும் பாரதியாரின் 'நந்தலாலா' பாட்டிலும், விட்மனின் இலக்கிய எதிரொலி கேட்கிறது.

விட்மன் பாடல்களில், சில நயமான பகுதிகளில் இசை நயமிருப்பதாக அமெரிக்க இசை நிபுணர்கள் கண்டுபிடித்து, கிராமபோன் ரெகார்டுகளிலும், ரேடியோவிலும் ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

விட்மன் ஒரு ஜீனியஸ் (Genius) மேதை. அவன் உள்ளத்தடாகத்தில், கவிதை தானுகவே ஊறி உருவம் பெற்று மலர்கிறது. சித்தக் கடலாகவும், சிந்தனைக் கடலாகவும் பொங்கி வழிகிறது, அவனது புதிய ஒளி பொருந்திய கவிதை: சொற்கள், கவிஞனின் அந்தரங்க இதயச் சிறகோடு பறந்து வட்டமிடுகின்றன.

விட்மன் கவிதைகளின் ஆழத்தையும் சிருஷ்டி எழிலையும் கண்டு அனுபவிக்க வேண்டுமானுல், பொறுமையோடு, அமைதியாக அனுபவித்துப் படிக்க வேண்டும். சில சில இடங்களில் ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ் வொர்த்தைவிட நயமான சொற்பிரயோகங்களையும் சிந்தனைக் கதிர்களையும் காணலாம். பொறுமையின அருமை யறிந்தவர்கள், கவிஞனின் உள்ளத்தை அருமையாக உணரலாம்.

---

[Whitman's genius is rhapsodic and whimsical, but poetically profound and thrilling. V. R. M.]

வால்ட்விட்மன் நடை, அதிகமான சக்தி வாய்ந்தது. அபூர்வமான சிருஷ்டி எழில் கொண்டது. சிந்தனைகள் சிதறிக்கிடந்தாலும், நடையின சிருஷ்டி எழிலிலே கவிஞனின் உள்ளம் உறுதியாக நேரே நின்று பேசுகிறது. சொறகள் இயற்கையை ஒட்டியே இதயத்தை நெருங்கியே அமைகின்றன. யாபபின் விலங்கத்தில் சிக்கிக்கொள்ளாமல், வாயு வேகம மனோவேகமாகச் சொற்களை அள்ளி வீசுகிறான் விட்மன். ஏன் அவன் உள்ளம கவிஞன் உள்ளம் அல்லவா?

அகராதியில் எந்தச் சொல்லும் ஓரளவு ஊமையாகத்தான் உறங்கும. கவிஞன கைபட்டதும், சொறகள் அபூர்வ சக்திபெற்றுத் துடித்துக் குமுறுகின்றன. ஏன? அதுதான கவிஞனின் மந்திர சக்தி வாய்ந்த நடை. ஷேக்ஸ்பியர், வோட்ஸ்வொர்த், மில்டன, ஷெல்லி, கீட்ஸ முதலான கவிஞர்களைவிட, எந்த உயரத்திலும் எந்த ஆழத்திலும் கவிதை மின்னிப் பறக்கவேண்டும் எனபதை. விட்மன பிரமாதமாக உணர்ந்தவன தான. உள்ளம் கொதிக்கும போது, அதே சீதோஷ்ண நிலையில் கவிஞனின நடை கொதித்துக் குமுறிக் கொண்டே நுரை வீசுகிறது. துன்ப உலகில் ஜனங்கள் துடிக்கும்போது, அதை உணர்ந்த கவிஞன் நெஞ்சம துடித்துக் கவிதைக்கனலை பீரங்கியாகவே முன்னே நிறுத்துகிறான், ஜனநாயகக் கவிஞன் விட்மன். கண்ணீர் கனல் வீசுமா என்றால், பாஷையிலே, கவிஞன் மொழியிலே, கண்ணீர்த் துளிகள கொதித்துக் குமிழியிட்டு நிற்கும. கண்ணீர், கவிஞனின் சித்திரத்தில், துன்பக்கொடியாக நின்று பேசிடும.

மகிழ்ச்சியும் அப்படியேதான். சந்தோஷம், சகல தோஷங்களையும் முறியடித்து விரட்டியடிக்கும. பட்டினி கிடக்கும் பாட்டாளி மக்கள் போரில் ரணப் பட்டுக் கிடக்கும்போதும கவிஞன் விட்மன் நேரே நின்று துணையாகக் கவனித்து, காயத்தைக் குணப்

படுத்தி, போர் வீரன் உள்ளத்திலே உவகையை ஊட்டுவான். கண் போன போர் வீரன், கவிஞனின் ஆறுதலைக் கேட்டதும, இழந்த கண்ணை மீண்டும் பெற்றவன்போல் இன்ப உச்சியில் விளையாட முன் வருகிருன். கவிஞனின் சிருஷ்டி எழில், துன்பத்தைப் போக்கி இன்பத்தையும சிருஷ்டி செய்கிற தல்லவா? ஆன்மா, உடல் இரண்டையும் சுற்றிப் பிணைத்து நிற்கிறது, வீரம நிறைந்த விட்மன் கவிதை.

கடவுள், காதல், மரணம், குழந்தை, மனைவி, தாய், முட்டாள், பித்தன், குடும்பம, பிராணிகள், பயிர்கள, வேலை, அமைதி, யுத்தம், சாந்தி, எல்லா வற்றையும்பற்றி, விட்மன் ஆனந்த வெறியோடு சொற்களைச் சூறையாடியே கவிதையுலகிலே அருமையான சிருஷ்டிகள செய்கிருன். இயற்கை நலம கொண்ட விட்மன் நடையிலே, மாசுபடிந்த மனித இயற்கையின் தோல்விகளை, தெய்வத்தொடர்பாகத் தொட்டுத் தீட்டிக் காட்டுகிருன், உள்ளக் குமுறலோடு கவிஞன் பிறருடைய தீய செயல்களைக் கவனிக்கும்போது, அவனுடைய பாஷை புகைந்து சுருண்டு அனல் கக்குகிறது. 'எனது பாடலில்', மனிதவாழ்க்கை ஒரு விரிந்த தத்துவமாகவேபரந்து நிற்கிறதல்லவா?

சிற்சில இடங்களில், விட்மன் நடையிலே, மந்தம் தெரிகிறது: கவிஞன் மந்தமாயிருக்கும்போது, காந்தம்போய் மந்தம் வந்துவிடுகிறது ஆனல் நடை சில இடங்களில் விளக்கெண்ணையாக வந்துவிட்டாலும், சுட்டிக்காட்டும் தத்துவம் உள்ளே பின்னிக்கொண்டுதான் நிற்கிறது. எள்ளினுள் எண்ணெய்போல், சொற்களிலே தத்துவம் மின்னவிடுகிறது.

வீதிப்பாட்டு (Song of the open road) பிரமாதமாக இருக்கிறது. 'உலகமே, அதில் வந்து விளையாடுகிறது. வாழ்க்கையிலே, வீதியிலே, ஆனம அறிவு, கனிந்து ததும்பி நிற்கிறது. எந்தச் சொல்லும், கற்கண்டுத் துகளாகக் காட்சியளிக்கிறது. இந்தப் பாட்டிலே, கவிஞனின் உள்ளத்திலே, தத்துவம் ஒரு தேன கூடாக மலர்ந்து மின்னலிடுகிறது. 250 வரிகளிலே, பாட்டின் தத்துவம், சிறகடித்து வருகிறது.

இன்பப் பாட்டு (A Song of Joys) அருமையான பாட்டு. கவிதை யலைகளிலே, கடல், சந்திரன், மழைத்துளி, சூரியக்கதிர், மீனின் மின்னல், இலைகள், மலர்கள், கோவில்மணிகள், எல்லாம் சுந்தரக் கவிதைச் சித்திரங்களாகவே உதயமாகியிருக்கின்றன.

"எனது இன்ப எழுச்சி" (Spontaneous Me) என்ற பாட்டு மிக நுட்பமான பாட்டு. காதல் சிந்தனைகள், காதல் ரசம், காதல் மணம், 'காதல்-மரம் ஏறிகள்', காதல் கரங்கள், காதல் உதடுகள், காதல் கொங்கைகள், எல்லாம் இயற்கையிலே ஒட்டிக்கொண்டே உறங்குகின்றனவே! ஆஹா, என்ன அதிசயம்! இளமையிலே, காதல்நுரை துள்ளிக்குதிப்பதைப் பார்த்தீர்களா? இதுவே இயற்கையின் சிருஷ்டி எழில்! (The limpid liquid within the young Man)

இயற்கை எப்படி சாந்தி வழங்குகிறது, பார்த்தீர்களா? விட்மன நடையும், கவிதையுலகிலே சாந்தி வழங்குகிறதல்லவா?

## " கண்ணீர் "

கண்ணீர், கண்ணீர், கண்ணீர்!
இரவிலே, தனிமையிலே, கண்ணீர்!

கடலோரத்திலே, கண்ணீர், கண்ணீர்!
குமுர்பிய மூளையினின்று, கண்ணீர்!

கரைந்தோடுகிறது, ஐயோ!
இருட்டின் ஆழத்திலே, ஈரக்கண்ணீர்,

மண்ணிலே மறைகின்ற சுடுகண்ணீர்!
புய லோட்டத்திலே, கண்ணீர்,

ஆ! கண்ணீர், உடைந்தோடும் கடல்போல்
பீறிட்டுப் பெருக்கெடுத் தோடுகிறது,
கண்ணீர்.

## " உதய கீதம் "

நான் திறந்த வெளியிலே பாடுவேன்; குழந்தையின் ஆசையும், மனிதனின் தேவையும, என் கவிதைக் கம்பிகளில் பிணககப்பட்டுப் பவனி வரும்;

என் கவிதைகளிலே, குரலோடு ரத் தக் கொதிபபும கத்தி முனையும், இன்ப வெறியும, போர் முழக்கமும மின்னலிடும்;

இதுவே, பாட்டின் பரந்த விரிந்த கொடி, உஷார்!

[கண்ணீரையும், அழுகையும்சித்திரிக்க நிகண்டு தேவையா?]

கவிஞரே, வருக, வருக! ஆன்மாவே, வருக, வருக! இங்கேயே வருக! சின்னஞ் சிறு அருமைக் குழந்தாய், வருக, வருக! மேகங்களோடும், காற்றலைகளோடும், ஆழ மறியாத ஒளிக்கடலோடும் பின்னி விளையாட வருக, வருக! காற்றின் குரலிலே, பெண்மையின் சிரிப்பு மிதந்து வருகிறது; நான் ஒரு கவிஞனாக, இயற்கையின் விந்தைக் குமிழிகளிலே மூழ்கி மூழ்கி மிதந்து பறந்து வருகிறேன்! போர் முரசம் கேட்கும் என் உள்ளத்திலே, கவிதை தீப்பொறி யுமிழ்கின்றதே, ஆ! பீரங்கிமுனையிலே, விடுதலை, விடுதலை, விடுதலை!

கவிஞன் விட்டமன, மரணம், உறக்கம், பிறவியைப்பற்றிச் சிறந்த பாடல்கள் பாடியிருக்கிருன். அற்புதமான சிந்தனைகள், அருமையான பாஷையிலே புஷ்பித்திருக்கின்றன. கவிஞனின் சிந்தனை உலகம், மிக உயர்ந்த நிகரற்ற கற்பனை உலகம்; கற்பனைக்கொடி கனவுலகிலே, பறந்து சுழல்கிறது. வாழ்க்கையிலே, கனவின் நிழல்கள் ஊசலாடுகின்றன; சொற்கள், ஆக்கம் பெற்றுச் சுழல்கின்றன.

## உலகமும் மரணமும்

உலகத்தில் எத்தனையோகோடி ஜீவராசிகள் பிறந்து அலைந்து உறங்குமிடத்தில், மரணம் ஓர் அற்புதம்தான்:

அழகிய சாந்தி வழங்கும் மரணமே, வருக, வருக! வந்து வந்து, அலைந்தலைந்து உலகத்தையே அருமையாக வளைத்துக் கொள்கின்ருயே!

மிருதுவான கருணை நிறைந்த மரணமே, பக லிலும் இரவிலும் எந்த நேரத்திலும், முன்னே பின்னே வந்து வளைத்துக்கொள்கின்றாய். உனது அந்தரங்க முற்றுகை, அருமையான அதிசயம தான்! இன்பம் துன்பம், காதல், எதையுமே நுட்ப மாக மிருதுவாக முற்றுகையிடுகின்றாய்!

மரண அலைகளில் சுழல்கின்ற மனிதப் பிறவி களால் மரணத்தை நோக்கி நிற்கின்ற ஜீவராசிகளை நான மனமார வாழ்த்துகினறேன.

இயற்கையின் ஒவ்வொரு பகுதியிலும், உனது ஆட்சி நிறைவேற்றப்படுவதால். விருக்ஷத்தின் தலை யில் உனக்குப் பாட்டுக் கட்டுகின்றேன்; அலையின் தாழ்ந்த குரலில்கூட, மரணகீதம் பரவி நிற்கும். உன்னைப் பற்றிப் பாடுவதில், எனக்கு அளவுகடந்த இன்பம்; தாய், தந்தை, குழந்தை, எல்லோருமே இறுதியில் உன் இன்ப அணைப்பில் உறங்கியே மறைகிறார்கள்.

உனது அகண்ட அரிய சக்தியைப்பற்றி, நான் இன்ப உச்சியில் பாடிய பாடல்கள், மாக்கிளைகளின் மகோன்னத உயரங்களில் நின்று விளையாடுகினறன. உன் கை தீண்டியதும, ஆன்மா உயர்ந்த சிகரற்ற நிலையை அடைந்து விடுகிறது.

போரிலே, உனது வேலை மிக மிக அற்புதம்: உன் அகண்ட சக்தியை, அங்கே மிக உயர்ந்த நிலை யில் காண்கின்றேன். வீரர்களின் பரிதபிக்கத்தக்க வீரத்திலே, மரணம் இன்ப வெறியோடு தாண்டவ மாடுகிறது. மரணகீதம், எங்கும் சுழலும்போது, நேரே கவனிக்கும் காட்சியில், நெஞ்சே புகைந்து விடும்போல் தெரிகிறது.

மரணம், மனிதனை அமர நிலைக்கே உயர்த்தி விடுகிறது; மரண முனையில், உண்மை அனைத்தும் கண்முன் கவிந்து நிற்கிறது, மரண உலகிலே, தியாக தீபம் தீர்க்கதரிசியாகவே வந்து முளைநிற கிறது மரண மத்தாப்பிலே, தொட்டகுறை, விட்ட குறை தெரிகிறது.

## உறக்கமும் கவிதையும்

நிர்வாணமாக, ஆடையின்றி மனித வடிவங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்திருக்கும்போது, உறக்கமே, கவிதையுலகிலே ஓவியமாகவே காட்சி யளிக்கிறது.

உறங்கும்போது, வடிவங்கள் ஆடாமல் அசை யாமல் தூக்கத்தில் மூழ்கியிருக்கும்போது, ஓவியம் ஆரம்பமாகிறது.

காதலன் காதலி இணைந்து இசைந்து உறங்கு கிறார்கள்;

சகோதரிகள் சந்தோஷமாகக் கலந்து தூங்கு கிறார்கள்.

தாயும் குழந்தையும் எந்தப்பகுதியிலும் பிணைக் கப்பட்டு உறங்குகிறார்கள்;

பலர் பேதமின்றிக் கலந்து உறங்கிக் கனவு காண்கிறார்கள்;

எல்லோருடைய வாழ்க்கையிலும் கனவுகளிலும் நான் கலந்து உறங்கிக் கனவு காண்கிறேன்.

உறக்கமே ஒரு தனி இன்ப உலகம்;

மரணத்தையே மறக்கத் துணைசெய்வது, உறக் கமும், கனவும்.

நான் இருட்டைக் குடைந்து, ஆன்ம உலகிலே சஞ்சரிக்கும்போது, என் இன்பம் பன்மடங்கு மின்ன லிடுகிறது. பிறவி, கனவு, மரணம்—மூன்றும் உறக் கத்தின முகமூடியைத் திறந்து பார்க்கும்போது, கவிதையின பெருஞ்சிந்தனை முன்னே ஆனந்த வெறியுடன் வந்து நிற்கிறது. கனவுக் கூட்டங்கள் என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்கும்போது, உறக் கத்தின் கவிதைக் குன்று கம்பீரமாகக் காட்சியளிக் கிறது.

பிரேதங்களின் உறக்கம் பிரமாதம்; உயிரின் நிறம் சாம்பலாகி வெளுத்துப் போய்விடுகிறது. கவி ஞன் சொற்கள், பிரேத வடிவங்களுக்கு உயிர் ஊட்டு கின்றன.

கவிஞன் பாஷையிலே பிரேதங்கள் பேசிச் சிரிக்கவும முன்வந்து விடுகின்றன். உலக நாடக அரங்கில், உறக்கம, கவிதையின் அந்தரங்கத் தையே வாரி இறைக்கின்றது. "உறங்குவாய், உறங்குவாய்" என்று கவிஞன் மந்திரிக்கும்போது, உலகம உறங்கியே போய்விடுகிறது.

### பிறவி

பெண் ஒரு அதிசயம்;

சிறந்த பெண்ணிடமிருந்து, சிறந்த ஆண் பிறவி நிகழ்கிறது;

பெண்மையின் அற்புதம், குழந்தையிடம் வந்து குமுறிக்கொண்டு நிற்கிறது;

ஆண் குழந்தையும், பெண் குழந்தையும் இயற் கையின அற்புதங்கள்;

மனிதன் அதி அற்புதமான சிருஷ்டிதான்;

பெண்ணிடம் மனிதன் தோன்றி, தன்னையே மனிதன் வாயிலாக மீண்டும் வனப்பு வாய்ந்த தோற்றத்துடன் சிருஷ்டி செய்துகொள்கின்றான.

ஆண் - பெண் காந்தத் தொடர்பிலே, பிறவியின் அற்புதம பிரமாதம்தான்.

## அடிமைச் சந்தை

மனித வடிவத்தில் உள்ள ஆணையும் பெண்ணையும், சந்தையில் விற்கலாமா? எவ்வளவு அறிவீனம, எவ்வளவு அநாகரிகம்?

ஆண் அற்புதம்; பெண் அதைவிட அற்புதம்; ஆண் பெண் கலந்து வெளியாகும குழந்தை அதைவிட அற்புதம்;

ஆண் உள்ளத்திலே, பெண்மையை நினைத்தாலே, காதல் குமுறிக் கவிதைக் கனியாகப் பொங்கி வழிகிறதே! என்ன விந்தை?

பெண்மை, உடலோவியம; தொட்ட இடமெல்லாம் தித்திக்கும இயல்புடைய இயற்கையின் இன்பக்கேணி; பெண்மையின் சௌந்தர்யம, கரும்புத் தீர்த்தம;

சகல வளைவுகளிலும் நெளிவுகளிலும், காதல் எழில் ஓங்கி வளர்ந்திருக்கிறது; கூந்தல் முதல் குதிகால்வரை, அழகு அலைமோதுகிறதே!

பெண்மையை வெறுக்க முடியுமா?

பெண்மையை விற்க முடியுமா?

பெண்மையில், கண்கள் உலகத்தையே பந்தாடுகின்றனவே!

பெண்மையிலே, அழகு மின்சாரமாகவே ஓய்வற்று விளையாடுகிறதே!

கண்களிலிருந்து கட்டைவிரல் வரை, ஒரே அழகு போதையாக மலர்ந்து மணக்கின்றதே! என் செய்வது?

அழகியின் கூந்தலை, பாஷையில் பின்னி அலங்கரிக்க முடியவில்லையே!

குறியின் குமுறல், கவிதையின் ஆற்றலையே பொடியாக்கிவிடும்போல் தெரிகிறதே!

குமுறலின் கோடியில், வாயிலும் மார்பிலும முத்தமிடும்போது, கவிஞன் உள்ளமும பாஷையும கரும்புச் சாருகவே மாறிவிடுகின்றனவே!

காதல் நாடகத்திலே, வாழ்க்கையிலே, ஆண்மையும் பெண்மையும் வளைவுகளிலும நெளிவுகளிலும் உடலோவியத்திலே உறுதியாகச் சந்தித்துத் தழுவும்போது, கவிதைக் கம்பிகள் இசையுலகிலே பறந்து நாதமிடுகின்றனவே;

இரவிலே, இன்பக்காதல் உலகிலே, ஆணும் பெண்ணும் ஆனந்தமாகத் தழுவி முத்தமிட்டு, காதற் கனிகளான குழந்தைகளை, வீறுபெற்ற சிங்கக் குட்டிகளாகப் பெற்றுத் தேசநலனைக் காக்கட்டும.

## எனக்காக ஒரு பெண் காத்திருக்கின்ருள்

ஒரு பெண் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ருள்;

அவளிடம் அனைத்தையும் காண்கின்றேன், எதுவும குறைவில்லை;

குறியின் சிருஷ்டியிலே, உடல், ஆன்மா, அவைகளின பொருள், எல்லாம் கலந்து மின்னுகின்றனவே!

அழகியின் காதல் உலகிலே, தாய்மை, காதல் வெறி, அழகு போதை, அரசியல் இன்பம், குழந்தை எழில், தெய்வத் தொடர்பு, நீதி, நம்பிக்கை, உடலின் எழில், பால் எல்லாம் கலந்து புரளுகின்றனவே!

காதல் நுரை இருவரையும் காந்த சக்தியோடு இழுத்துப் பிணணிப் பந்தாடுகிறதே!

காதல் உலகே, சகல சிருஷ்டிகளுக்கும் ஆரம்பமும் அஸ்திவாரமும்! கலை, இசை, நடனம், ஓவியம் எல்லாம் காதல் உலகிலே பிறந்து வெளிவருகின்றன;

குழந்தைகள், எழிலோவியமாக தொடர்ந்து பிறந்து, பல்வேறு அழகுக் கோவிலாக வாழ்க்கையிலே மின்னலிடுகின்றனவே;

காதல் உலகிலே, இன்பத்தைத் தடுக்கவே கூடாது:

இயற்கைக்கு எதிர்க் கட்சியாக, சட்டம் முள் வேலி கட்டக் கூடாது;

கடல் அலைகள், மரக்கிளைகள், நிழல்கள் கலப்பதுபோல, காதலர்கள் கலந்து இன்ப உலகில் வாழ வேண்டும்: இதைத் தடை செய்பவன், பாபி;

காதலை எதிர்ப்பவன், முட்டாள், ஈரமிலா நெஞ்சுடையான்; அவன் இதயமில்லாத இறுகிய சண்டாளன்;

காதலை வளர்க்கத் தந்தையும் தாயும் துணையாக நிற்கவேண்டும்.

இளமைக்கும் முதுமைக்குமிடையே, காதல் மின்னல் தோன்றி மறைந்துவிடுகிறது;

காதல்போதை இளைஞனைத் தாக்குவதுபோல், கிழவனையும் தான் தாக்கி நொறுக்கிவிடுகிறது ;

நரைத்த தாடியையும் தழுவிநிற்கும் காதல், நெஞ்சு நிறைய மண்டிக்கிடக்கும்! ஆம்!

பெண்களின் கண்கள் கவிதைப் பொக்கிஷங்கள்!

காதல் உலகிலே, ஐம்புலன்களும் ஆசை வெறியில் இன்ப அதிர்ச்சியில் இன்பம் நுகருகின்றன என்று கவிஞன் விட்மன் உறுதி கூறுகிறான்; நமது குறளாசிரியரும், இதையே மிக நுட்பமான சூத்திர நடையில் வற்புறுத்துகிறார். இருவரும் எதையும் அனுபவித்தே வருணித்திருக்கிறார்கள். கவிஞர்கள் உள்ளங்களில், காதல் வந்தே தீரும; இயற்கையை மீறி இதை விரட்டியடிக்க முடியுமா?

ஆனால் காதற் பொக்கிஷத்தை அடிக்கடி திறந்துபார்க்க, இலக்கியச் சாவியாக மின்னலிடுவது கவிதை!

## "இரவும் மரணமும்"

இரவும் மரணமும், அருமையான சகோதரிகள், கைகோத்துச் சுற்றி வருகிறார்கள்; தெய்வப் பொருளைத் தாங்கிநிற்கும மனிதவடிவம் போரில் ரணப் பட்டுமடியும்போது, இந்த களங்கப்பட்ட உலகத்தின் உள்ளத்தை இரு சகோதரிகளும் ஓய்வின்றிச் சுத்தம செய்கிறார்கள்;

மடிந்த மனிதனின் பிரேதம் சவப்பெட்டியில் கிடப்பதைக்கண்டதும, என் உதடுகள் பரிவுடன் அந்த வெள்ளை முகத்தை ஆவலுடன் முத்தமிடுகின்றன.

ஓ, கண்ணீர்விடும் இரவே! மரணத்தின் மகோன்னத மர்மத்தை நீயே உணர்ந்து, உபதேசம் வழங்குவாயாக!

# சொல்வன்மையும் வால்ட்விட்மனும்

*சொற்பொழிவு நிகழ்த்துவது சாதாரண விஷயமல்லவே!*

*தொண்டையைக் கிழித்துக்கொண்டு கதறுவது சொற்பொழிவல்ல;*

*மேடையில் கைகால்களை அதிர்ச்சியோடு வீசிக் காட்டுவதும் சொல்வன்மையல்ல;*

*கண்களைக் குடிகாரன்போல உருட்டிக் காட்டுவதும் சொற்பொழிவல்ல;*

*காலத்தையொட்டி, சந்தர்ப்பத்தை ஒட்டி, நிதானமாக, மிகக்குறைந்த அபிநயத்துடன், இனிய தொண்டையுடன், விஷயப பொருத்தத்துடன், அமைதியாக, வெற்றிகரமாக எல்லோருக்கும் புரியும் படியான எளிய இனிய நடையிலே தளர்ச்சியின்றிச் சொல்லுறுதியோடு பிரசங்கம் செய்வதுதான், அழகான சொற்பொழிவாகும்.*

*மீண்டும் மீண்டும் சொன்னதையே திரும்பத் திரும்ப ஒப்பிவிக்கக்கூடாது;*

*எதையும் காப்பியடித்துக் கதறக்கூடாது;*

*ஞாபகசக்தியேதுணை என்று மேடையில் ஏறி முழங்கக்கூடாது; பகுத்தறிவும், நல்ல சொந்த பாஷையும் பொலிவுடன் அமைய வேண்டும்;*

---

*புதிய அமெரிக்க இலக்கிய வெளியீடுகள்:* (1899) *விட்மன் கைப்பிரதியிலிருந்து எடுத்தது.* (Research Criticism)

உண்மையை மீறி உளறக்கூடாது;

சத்தியத்தை மீறி, சாட்டையடியாகப் பேசுவதும் பயன்படாது;

ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு, வேறு விஷயத்தில் அசந்தர்ப்பமாகவே இறங்கி இறுமாப்புடன இரையககூடாது;

சொல்வன்மையிலே, சிந்தனைகள் வரிசையாக நிறை மொழியிலே நிமிர்ந்து நிற்கவேண்டும்;

தொட்டால் உதிர்ந்துபோகும் பாஷையிலே பேசுபவன், சபையின்முன், அறியாமையின் எல்லையில் சைபராகிவிடுகிறான்,

உளறிக் குழறி ஊமையாகி, சபையிலே மனிதத் தன்மை இழந்து, மரமாக நிற்பதில் யாது பயன?

ஊமைக்கு உளறுவாயன், சண்டப்பிரசண்டம் என்று வருவதில் பெருந்தோல்விதானே!

சொல்வன்மையில் (Oratory), விட்மன் தனி அழகையும் சொல்லுறுதியையும கண்டான்; பேச, முனவருபவர்கள் எல்லோரும், நல்ல முறையில்ா புதிய முறையில், இயற்கை யெழிலை நாசம்செய்யாமல் பேசிப் பழகவேண்டும எனபது, விட்மனின் அயதரங்க அபிபபிராயம. தன் மனதில் தோன்றி உண்மைகளை யெல்லாம், விட்மன் அனுபவ வாயிலாக எழுதிவைத்தான். அசைக்கமுடியாத அனுபவவெறி கலந்த உண்மைகள் தான்; விட்மன் நூல்கள முன் வெளியிடப்பட்டவைகளில் இந்தவித குறிப்புகள் சேர்க்கபபடவில்லை. அமெரிக்க இலக்கிய ஆராய்ச்சி நிபுணர்கள், American Literature சஞ்சிகைகளில், இந்த நுட்பமான குறிப்பைத் தேர்ந்து வெளியிட்டிருக்கிறார்கள்.

சொல்வன்மையின் சிறந்த அம்சம் என்ன? மனிதன், தன்னை மனிதனாகவே உணர்ந்து, மனிதர்களோடு இயற்கையாகப் பேசி வழிகாட்டியாக, ஒளி வீசுகிறானே; எவ்வளவு சிறந்த பதவி வந்துவிட்ட போதிலும், அதிகார மமதையோடு சொல்வன்மையைக் காட்டுவது இயற்கைக்கு விரோதம். உயர்ந்த இலக்கியத்தின் தன்மையும் உட்பொருளும், மனிதனும் சிருஷ்டித் தத்துவமுமதான். மனிதன் மனிதனாக வாழவேண்டும்; மனிதன் மனிதனாகவே பேச வேண்டும். பேச்சிலே, சிருஷ்டி எழிலை பாஷையிலும், அபிநயக் குறிப்பிலும் உறுதி செய்யலாம்.

எல்லோரும் மேதைகளாகப் பிறக்காவிட்டாலும், மேதைகளின் சொற்பொழிவுகளைப் பின்பற்றி, சொல்வன்மையை நிதானமாக இயற்கையாக அப்பியசிக்கலாம். ஒரு லட்சியத்தைக்கொண்டு, அதை வாழ்க்கையில் நிறைவேற்ற மனஉறுதி கொண்டால் சொல்வன்மை தானாகவே நெஞ்சில் புஷ்பித்துக் கனிய ஆரம்பிக்கும்.

லட்சியம் வாழ்க்கையில் மலரும்போது, சொல்வன்மையும் சொற்பொழிவில் மின்னவிடுகிறது.

பொது மேடையில் பல ஜனங்களுக்கு முன் பேசும்போது கண்டபடி பேசக்கூடாது. நிதானமாக எடுத்துக்கொண்ட விஷயத்தை ஒழுங்காக, இயற்கையாக, தேவையற்ற ஆடம்பரமின்றிப் பேச வேண்டும்.

சிறந்த சொல்வன்மையுடையவன், இயற்கையாகவே பேசுவான்; அவனுடைய குரலும், பாஷையின் நடையும், வாதமிடும் முறையும், உணர்ச்சி வெள்ளமும், கற்பனைக் கொடியும், அமைதியாக அழகாய் யாவரும் விரும்பும்படி அமைந்திருக்கும்; செயற்கைப் பேச்சாளன், இயற்கையான சொல்வன்மைக்கு நேர் விரோதி; அவன் உணர்ச்சி, பேசும்

நடை, வாதிக்கும் விஷயம் எல்லாம் இயற்கைக்கு முரணாகவே நின்று தலைகீழாகக் கூத்தாடும்; உடனே பொதுஜனங்கள், இதைச் சொல்வன்மையாக மதிக்கவே மாட்டார்கள். பம்பரம்போல் ஆடவேண்டிய பாஷை, ஆடம்பரமாகக் கூததாடலாமா? தடல்புடலாகப பேசுபவன், எந்த உணர்ச்சியையும ஜனங்களின் உள்ளங்களில் தைக்கும்படி செய்யமுடியாமல், தோல்வியடைவான்; ஜனங்கள், அவன பேச்சை வெறுத்து மறுத்து நகையாடுவார்கள். அவன் குரலே திமிரோடு திண்டாடும்; சிந்தனைவரட்சியுடன், லட்சியத் தோல்வியுடன், பாஷையின் படாடோபத்துடன், ஜனங்களின் கண்ணில் அவன் ஆபாசமான காட்சியாக நின்று தயங்கித் துடிப்பான்.

லட்சம் பக்கங்கள் ஆடம்பரமாக உண்மையின்றிப் பேசுவதைவிட, சிலவரிகள் லட்சியத்தை ஒட்டிச் சென்றால் போதும்; இயற்கைப் பேச்சில், உண்மையின ஓங்கிய கொடி கம்பீரமாக நின்று நிலவுமல்லவா?

சொல்லடுக்கு, சொல் வன்மையே அல்ல; சொற்களை அலங்காரமாக அள்ளி எறிவதில் யாது பயன்?

கருத்தை யொட்டியே, லட்சியத்தைப்பற்றியே, உணர்ச்சியைக் கொண்டே சிறந்த சொல்வன்மை நிகழும்; அனுபவ மேதைகள் எல்லாம், ஆழ்ந்த உண்மைகளை, சொல் வன்மையின் சிறப்பால், ஜனங்களின் நெஞ்சில் உறுதியாகவே விதைத்துவிடுகிறார்கள்.

நல்ல எண்ணமுள்ளவனே, சுத்தமான சொல் வன்மைக்குத் தகுதியானவன்; தீய செயல்களும் சிந்தனைகளும் உடையவன், சொல் வன்மைக்குத் தகுதியற்றவன்;

அருளாவேசமுள்ள, சொல் வன்மையிற் சிறந்த மேதைகள உண்மையே பேசுவார்கள்; அவர்களின் இதய ஒளி, உபதேசத்தில் உறுதியாக இயற்கை யெழிலோடு வந்து பாய்ந்து தாண்டவமாடும். நெஞசிலே மலர்ந்த உண்மைகள, சொல்வனமையை அற்புதமாகவே அலஙகரிக்கும். ஜனங்கள், சத்தியத்தையும் லட்சியத்தையும் பின்பற்றியே வாழ்ந்து சொற்பொழிவாளரின் இதயத்தையும சொல்வன்மையையும் கண்டு கண்டு இனபுறுவார்கள. லட்சிய வெற்றியே சொல்வனமையின் வெற்றியாக மாறி விடுகிறது; சரளமான பாஷையிலே சத்தியம ஒளி வீச வேண்டும.

சத்தியத்தைக் கயிறுகட்டி இழுக்கலாமா? பாஷை கயிருகமாறலாமா? சொல்வன்மையின் அழகையும ஆழத்தையும அறியாத அகராதிப பித்தர்கள். பாஷையைக் கயிருகத் திரித்துப் பொயயைக் கயிறுகட்டி யிழுக்கிருர்கள். சொல் வன்மையில் தோல்வியடையும சண்டாளர்கள் இவர்கள்,

நல்ல சொல் வன்மையில், குரலும் அபிநயமும் அளவோடு கலந்து பாஷையை உறுதிசெயயும்; குதித்துக் குமுறிக் கூமாளமடிப்பது, சொல்வன்மையுமல்ல, சொறபொழிவுமல்ல?

எத்தனையோ வருஷஙகள் வாழ்க்கையிலும் லட்சியங்களிலும சொற்பொழிவுகளிலும் ஊறிக் கிடக்கும் உள்ளத்தில்தான், சிறந்த சொல்வனமை ஆக்கமபெற்று மின்னலிடும; சொல்வனமையில் சிறந்த சாதம (Chatham) டெமாஸ்தனிஸ் (Demosthenes) பெரும புலமையோடு பெரு முயற்சியோடுமே சொல்வனமையில் வெற்றி பெற்ருர்கள. அகராதிக்கும் சொல்வனமைககும வெகுதூரம். அனுபவம முதிர முதிர பெரிய கூட்டஙகளில் பேச்சாளனின் குரல் நேரடியாகவே முரசடிக்கும. உலக சரித்திரம் முழுதுமே, வெற்றியின அஸ்திவாரம், சொல்வனமையின் உறுதியே! இதை யாராவது மறுக்க முடியுமா?

உலகம் உயர்வதும் சொல்வன்மையினுல்; உல கம் தாழ்வதும் சொல்வன்மையினுல்தான்.

தேசம் உயர்வதும், அரசியல் உயர்வதும், பாஷை உயர்வதும, தொழில் உயர்வதும் சத்தியம் நிலைநிற்பதும், ஒழுக்கம் உறுதிபெறுவதும் சொல் வன்மையால்தான.

தலைகீழாக மாறி வருகின்ற சொல்வன்மை, தவிடுபொடியாகப் போவது உறுதி.

சிறந்த கவிதையை சிறந்த முறையில் வரு ணிக்க வேண்டுமானுல், அதை 'Eloquence' என்று தான் சொல்லவேண்டும; சிறந்த இயற்கை நலங் கொண்ட சொல்லோட்டமே சிறந்த கவிதை:

''கத்தியின்றி, ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்''

இது கவிதையின் சொல்வன்மையைக் காட்டவில் லையா? ஆஸ்தானக் கவிஞர் திரு. ராமலிங்கம் பிள்ளையவாகளின் சொல்வனமையைக் காட்டவில் லையா? பழுத்த கவிதை உள்ளம், எவ்வளவு அமை தியாக கமபீரமாகப் பேசுகிறது; பாருங்கள்!

உலகத்தை உணர்ந்த உத்தமன், சொல்வன் மையின் சிருஷ்டி எழிலால், தன் நெஞ்சையே திறந்து காட்டுகிருன்; உணர்ச்சிவாய்ப்பட்ட சத்தியமே, சொல்வன்மையாக பாஷையிலே புஷ்பிக்கிறது.

சிறு சொற்களை, அனுபவமற்ற முறையில், முறிந்த குண்டூசிகளைபோல, ஜனங்களின்முன் தூக்கி எறிவதில் என்ன பிரயோஜனம்? லிங்கன், பாக், ஷா, காந்தி, ராஜாஜி, ஜவாகர் பேசும்போது, எந்த பாஷையைக் கையாண்டாலும் சரி, உள்ளம உலகத்தைச் சுற்றி அலங்கரிக்கவில்லையா? அவர்கள கலகத்தை விரும்பி நிற்கவே இல்லை; உலகத்துக்கு உண்மையான அமைதியும் சாந்தியும் வழங்க வேண்டுமே என்று கவலைபபட்டு, சததிய காம்பீரியத்துடன் பேச முன்வரும்போது, சொல்வன்மை மிக மிக அருமையாக பாஷையிலே மலர்கின்றது.

படாஸ் முறையில் பாஷையைத் தீப்பந்தமாகச் சுற்றி எறியக்கூடாதல்லவா? சண்டையில், மண்டைகள் நொறுங்கினால், சொல்வனமை ஓடி ஒளிந்து விடுமல்லவா? குஸ்தியில் இறங்கினால், பேச்சாளியின் அந்தஸ்து சைபராகிவிடும.

'படார் படார்' என்று பாம் எறியக்கூடாது, சொல்வன்மையின் இமிடேஷனாக!

* * *

'அண்ணா'வின் சொற்பொழிவு அபூர்வம்; Oratory முறையை அருமையாகப பின்பற்றி, ஆஙகில இலக்கிய முறையில கூறியிருககும் சொல்வனமையின சிறபபு அனைத்தையும, நமது தாய்மொழியான தமிழ மொழிக்கு ஊட்டி, உணமையை எடுத்துப் பேசுமபோது, 'அண்ணா'வின் அபூர்வமான திறமையை நாம் உணர்கின்றோமல்லவா?

யார் யார் எப்படி எப்படி அழகாய்ப் பேசினாலும், நாம் உண்மையையே லட்சியமாகக் கருதிக் கேட்க வேண்டும.

" எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு " (குறள்)

பாரதிதாசன் சொற்பொழிவிலே, கவிதையே சொல்வன்மையாக வந்து நிற்கிறது; கவிஞர் பேசும் போதும பாடும் போதும், இசைப, உணர்ச்சிவெள்ளத்தை பாஷையில் தேக்கிவைக்க இசை துணைபுரியும்போது, கவிஞரின் சொல்வன்மை மிக மிக நயமாகவே அமைந்து விடுகிறது. கவிஞரின் இதயத்தை, பாஷை இசை நயத்தோடு வாங்கிகொண்டு நடனமாடுகிறது; சொற்கள் சிறை விரித்துப் பறக்கின்றன. கவிஞன் சொல்லுக்கு, அதிகமான எழிலோவியச் சொல்வன்மை, மேதா விலாசத்தினின்று ஆவேசமபெற்று மேடையில்வந்து விளையாடுகிறது.

* * *

பாரதிதாசன் கவிதைகளிலே, சொல்வன்மை அதிகம். கவிதையும சொல்வனமையும சுதந்தரமாகச் சந்திக்கின்ற இடம், கவிஞர் உள்ளம்தான்; Poetry + Oratory இரண்டும் இசையுள்ளத்தோடு, கவிஞரின் நெஞ்சிலே மலர்ந்தொலிக்கின்றன. கவிஞரின் மயில், மயிலோவியமாக மலர்ந்திருக்கிறது. இதை யாராவது காப்பியடிக்க முடியுமா?

"மயில்"

"உள்ளக் களிப்பின்
ஒளியின் கற்றை

உச்சியில் கொண்டையாய்
உயர்ந்ததோ என்னவோ!

...................................... ......

ஆயிரம் ஆயிரம்
அப்பொற் காசுகள்

ஆயிரம் ஆயிரம்
அம்பிறை நிலவுகள்

மரகத உருக்கின்
வண்ணத் தடாகம்

ஆனஉன் மெல்லுடல்,
ஆடல், உள் உயிர்''

பாரதிதாசனின் ''இன்பத் தமிழ், தமிழ்க்காதல், சங்கநாதம். எழுச்சியுற்ற பெண்கள், எழுதாக் கவிதை, புரட்சிக்கவி, இசையமுது, எல்லாம் சொல் வன்மை நிறைந்த கவிதைகள்; சொற்கள், நேரே கூர்மையாக நின்று முகம் பார்த்து முறுக்காய்ப் பேசுகின்றன.

பாரதியாரின் கவிதைகளிலே 'ஊழிக்கூத்து' சொல்வன்மையின் வெற்றிதான், பாஷையிலே, ஊழி இடியேருக வந்து குமுறிக்கொண்டே நிற்கிறது. 'வெடிபடு மண்டத் திடி பல தாளம்போட', கவிதை கனற் பந்தாக உருண்டோடுகிறதல்லவா? 'நெஞ்சுக்கு நீதியும தோளுக்கு வாளும்' எப்படிக் கனல்கின்றது, பார்த்தீர்களா? சொல்வன்மை, சுடுசரம் போல், 'ஓம்சக்தியாக' மாறிவிடுகிறது.

''நாள் நொறுங்க இரவின் இருண்ட சிறையினின்று உதிர்ந்தோடுகிறது இருளே, இருளே'' என்று லாங்பெல்லோ (Long fellow) பாடும்போது, சொல்வன்மை சிலிர்த்து நிற்கின்றதல்லவா?

கம்பன் கவிதைகளில், சொற்சித்திரங்கள் கலையாவேசத்தோடு உணர்ச்சியில் ஊறி வரும் அரிய சொல்வன்மையைக் காட்டி நிற்கின்றன. 'கண் வழிப் புகுந்த காதலைச், சித்தரிக்கும்கம்பன் படத்தைப் பாருங்கள்: (சீதை-இராமன் சந்திப்பு)

"கொல்லும் வேலும் கூற்றமு
மெனும் இவையெல் லாம்

வெல்லும் வெல்லும் என்ன
மதற்கும் விழிகொண் டாள்

சொல்லும் தன்மைத் தன்றது;
குன்றும் சுவரும் திண்

கல்லும் புல்லும் கண்டுரு
கப்பெண் கனிநின் றாள்"

"எண்ணரு நலத்தினாள்
இனையள் நின்றுழிக்

கண்ணொடு கண்ணினைக்
கவ்வி ஒன்றையொன்(று)

உண்ணவும், நிலைபெரு(து)
உணர்வும் ஒன்றிட,

அண்ணலும் நோக்கினான்,
அவளும் நோக்கினாள்."

* * *

[ Here is Kamban's oratory in Poetry. Read the poetic principle by E. A. Poe ]

## தாகூர் - எமர்சன் கருத்தோவியம்

அழகு நமக்கு இன்பம் ஊட்டுகிறது. எந்தப் பொருளில் அழகு இல்லையோ, அதில் நமக்கு இன்பமே இல்லை. இன்பமில்லாப் பண்டங்கள் எல்லாம் மனச்சுமைகளாகவே வளர்கின்றன. நமக்கு இன்பம் தரும் பொருள்கள் எல்லாம், நமக்கு என்றும் உரிமையாக அனுபவமாகவே அமைந்துவிடுகின்றன.

இந்த அழகு ரசனையோடு உலகத்தை நாம் கவனிக்கும்போது, உலகத்தில் பெரும் பகுதி நமக்கு சூன்யமாகவே புலப்படுகிறது. நமது அறிவின் விரிவால், நாம் உலகத்தில் அழகுமண்டிய அதிசயங்களைக் கண்டுபிடித்து இன்புறவேண்டும். தோற்றத்தில், கோரவடிவத்தில் உள்ள பொருள்களையும், அழகான பொருள்களையும் உண்மை ஒளி கொண்டு பகுத்தறிவது சரியா, அவசியமா? ஆனால் எதையும் பிரித்து உடைத்து சேதனப்படுத்திப் பார்ப்பது, அழகு ரசனைக்குப் பொருந்தாது அல்லவா?

ஆகவே உலக ஒருமையை நோக்கி, அறிவின் அகண்ட அனுபவ விரிவால், அழகு ரசனைக்கண் கொண்டு நாம் உண்மையைத் துருவி ஆராயவேண்டும். உண்மை எங்கும் தெரிகிறது, அழகு எங்கும் தாண்டவமாடுகிறது. எந்தப் பொருளும் நமக்கு இன்பந்தரத் தயாராக இருக்கிறது. உயிர்ப் பொருளுக்கும் உயிரற்ற பண்டத்துக்கும் உள்ள வேற்றுமையிலே ஒற்றுமையைக்காண, உண்மை நம்மை இழுத்துச் செல்கின்றது.

உபநிஷத்துக்களில், உலகத்திலுள்ள சகல பொருள்களும, எல்லையற்ற இன்ப சக்தியால் சிருஷ்டிக்கப்பட்டு நிலைபெற்று நிற்கின்றன என்று கூறப்பட்டுள்ளது. இதை நன்ருய் உணர எது அழகு, எது அழகில்லை என்ற வித்தியாசத்திலிருந்தே நாம் ஆராய வேண்டியதிருக்கிறது. வேற்றுமையின் இரகசியத்தை உணர உணர, அழகின் உண்மை பொங்கி வழிகிறது. நாம் வருண வேற்றுமைகளிலிருந்து, இசையின் இனிய வேற்றுமைகளையே அனுபவிக்கப் புகுந்து விடுகிரேம். எங்கும் இயற்கையிலும் உயிர் இயக்கங்களிலும் மலிந்து கிடக்கும் அழகு, இசையின் அற்புத ஒருமையை நோக்கிச் செல்வதைக் கண்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்துவிடுகிரேம். கடுமையான இரைச்சலுக்கும, இனிமையான அமைதியான ஆன்மீக இசையின் ஓர்மைக்கும உள்ள வித்தியாசத்தை உணர்ந்து விடுகிரேமல்லவா? ஆனமீக அமைதியே, அழகின் அந்தரங்க அதிசயம்.

*　　　　*　　　　*

நமது மனநிலை அமைதியாக வளர வளர வேற்றுமைகளையும் குறுகிய மனப்பான்மையையும் அறவே ஒழித்துவிட்டு, அழகின உண்மையை அருமையாக உணரவே முற்படுகிரேம். சர்வசாதாரணமாக, கலாரசனைகளிலே, எந்தச் சிறு பண்டத்திலும் அழகின் கூர்மையைக் கண்டு வியக்க முன் வந்து விடுகிரேம். கலை உலகிலே, சிறு பண்டங்களும் சிங்காரமாகவே கலை உணர்ச்சியையும் அழ

குணர்ச்சியையும் எழுப்பும் ஆற்றல் பெற்றுவிடு கின்றன. வேற்றுமைகளைச் சிருஷ்டிக்கின்ற குறு கிய மனப்பான்மையை, அழகின் ஆவேச வெறியால் நாம் மறந்தே விடுகின்றோமல்லவா? ஐம்புலன்களை யும் நாம் வெறியோடு உபயோகப்படுத்தினால், அழகு ரசனை மாறி, காம வெறியே வந்து மண்டிவிடும. மனம் பக்குவமடைந்து விட்டால், அழகிலே உண் மையையும், உண்மையிலே அழகையும் நாம் மிகச் சுலபமாகக் கண்டு இன்புறலாம்.

*         *         *

உண்மை அழகை இழந்து நிற்கும்போது, நாம் காண்பது கோர வடிவம், அசத்யம்; உலக இன்ப ஒருமைக்கு முரண்பாடாக நாம நடக்க முயனுல், வாழ்க்கையிலே சண்டையும சச்சரவும தான் மலிந்து கிடக்கும; உண்மையை அழகாவேசத்துடன ஆழ மாக தரிசிக்க முடியாத முரண்பாடான நிலைமை, நமது வாழ்க்கையில் புகுந்துவிடுமல்லவா?

*         *         *

நாம் இயற்கையின் எழிலிலே, இன்பத்தையே காண்கிறோம், அழகையே காண்கிறோம், உணமை யையே தரிசிக்கிறோம். இயற்கை உலகிலும், ஒழுக்க உலகிலும், நாம் அழகின ஒருமையையே கண்டு இன்புறுகிறோம். சிருஷ்டியின் எழிலை அனுபவிக்கும் போது, நாம் கலையின் போக்கைச் சர்வ சுதந்திர மாக வெளியிடமுடிகிறது. அழகு, தீமையை வெறுத்துத் தள்ளிவிட்டு, நன்மையிலே இறங்கி,

இயங்க முற்படுகிறதல்லவா? இதுவே உலக இன்பத்தையே தழுவிச் செல்லும் அழகு மண்டிய ஆன்மீக அஸ்திவாரம்; இறையின் அகண்ட அன்பைத் தேடிச் செல்லும், ஆன்மீக அழகு உறுதிபெற்று வளர்கிறது. அழகே உண்மை, உண்மையே அழகு என்று அறிந்து கொள்வதற்கு, அன்பே அஸ்திவாரம். அன்பே, உண்மையை நோக்கிப் பிரயாணம் செய்து, பரிபூர்ண நிலையை அழகாய் அடைந்தே விடுகிறது.

* * *

கலையின் சிறந்த தூயவடிவம் இசை அழகை உடனே அறிவிக்கும் ஆற்றல் பெற்றது; இதய பூர்வமாக, இனிமையிலே இடம் பெற்றுத் திகழ்வது; இறையின் எல்லையற்ற சக்தியையும் எடுத்துக் காட்டும் அபூர்வ இயல்புடையது.

* * *

குழந்தை தன் மழலையைக்கண்டு அதிசயத்து நிற்பதுபோல, விண்ணிலே அந்திமாலை தன் நக்ஷத்திரங்களைக் காட்டிக் காட்டி இந்த அற்புத ஒளியிலே ஸ்தம்பித்து நிற்கிறது.

* * *

மழை பொழியும் போது, நீர்மழை நாத மழையாகவே, இருண்ட நிறமுள்ள ஓசை மழையாகவே காட்சியளிக்கிறதல்லவா? இருட்டிலே மழைப்பெருக்கிலே, பல்வேறு ஓசையலைகளிலே, இரவின் இதயம் ஒரு நாத வீணையாகவே நின்று ஒலி பெருக்கிக் கொண்டே இருப்பதும அதிசயமல்லவா? ஆகாசமே இசையாவேசமாகவே நாதமிடுகிறது!

* * *

தீர்க்கதரிசிகளான கவிஞர்கள் உலக விந்தைகளை இசைப்போக்கிலே விளக்கம் கொடுக்க முன் வந்து விடுகிறார்கள்.

* * *

சித்திரங்களிலே, கலைஞனின் தூரிகை வருணம் இழைக்கிறது; கலைஞன் சென்றதும், தூரிகை நின்றதும, சித்திரம் தனிமையிலே ஏங்கித் துடிக்கிறதல்லவா?

* * *

ஆனால், இசையில் அப்படியல்ல. பாடுகிறவனின இதயத் துடிப்பே, இசையின் ஆழத்திலே ஆழமாய்த் துடித்தோடுகிறது. அவன கருத்தும, பாடும் ஆற்றலும, அண்ணனும் தங்கையுமபோலக் காட்சியளிக்கிறார்கள். இசை, தங்குதடையினறிக் குதித்தோடுகிறது. விம்மி வருகினற இசையின் முழக்கததிலே, நாம் அழகின் முழு ஆற்றலைக் கண்டு அதிசயிக்கிறோமல்லவா? இசையின் அலைகளிலே, இதயம சுழன்றோடி வருகின்றதல்லவா? பாஷைகூட சொற்களால் தடைப்பட்டு நின்றுவிடலாம்; ஆனால், இசைக்கோ எந்தவிதமான தடையுமே கிடையாது! இசையில், அழகு தன் முழுமையைக் காட்டியே நிற்கிறது.

* * *

ஒவ்வொரு இராக ஆலாபனையிலும், இசையின் தனித் தன்மை அழகு மின்னலாகச் சுழன்றோடி வருவதைக் காணலாம. இசையின் எந்தக் குறைப் பகுதியும், முழுமையின் அழகையும் எல்லையற்ற ஒருமையையுமே சுட்டிக்காட்டி முன்னேறுகிறது

இசையின் அழகே, நாத பிரம்மம்; இதுவே அழகின் அகண்ட ஆற்றல்பெற்ற பாஷையாக கண் முன் காட்சியளிக்கிறது; உறங்கும்போதுகூட, இசையின அமைதியான எழிலே மௌனமாக இதயத்தில் துடித்துக் கூத்தாடுவதைக் காணலாம். இதுவே அழகின் அகண்ட சக்தி.

## அழகைப்பற்றி எமர்ஸன்

அழகைபபற்றி அமெரிக்க ஞானி எமர்சன் கருத்தென்ன? எமர்ஸன் ஒரு கவிஞன், ஒரு ஞானி, சிந்தனை மேதையும் கூட.

*　　　*　　　*

அழகு உணர்ச்சி, மனிதனுக்குச் சிறந்த இன்பத்தையே ஊட்டுகின்றது. உலகமே, அழகு மண்டிய உலகமேதான்; எங்கு பார்த்தாலும அழகு இயற்கையிலே, அழகுத் தோற்றங்கள் கடல்போல் பொங்கி எழுகின்றன. கவிஞன் கண்கொண்டு பார்க்கும்போது, எங்கும் அழகுக் கூட்டமதான்; அழகின் சிரிப்புத்தான்; மிக நுட்பமான காட்சிகள், பலவர்ணக்களஞ்சியங்களாகவே இயற்கை உலகிலே தாண்டவமாடுகினறன. (கண்ணே சிறந்த கலைஞன்; கண்ணே சிறந்த அழகு ரசனைக்கு ஆசிரியன் ; ஐம் புலனகளும, இயற்கையின் இன்பக்களஞ்சியத்திலே ஊறிக்கிடக்கின்றன; ஆழ்ந்த உண்மைகளை, அழகுக் கடலின் ஆழத்திலே கண்டு கண்டு இன்பந் துய்க் கின்றன.) இயற்கையின் மோகன லாகிரி போன்ற அழகுத் தோட்டம், கவிஞன் கண்முன் ஒளி மலர்

களாக விரிந்து காட்சி தரும்போது, கவிஞன் உள்ளம் இன்பக் கடலாடுகின்றது. கண்கண்ட அழகே, கவிதை மாணிக்கமாகவே மலர்ந்து வருகிறது, கவிஞன் உள்ளத்திலே; கவிஞன், கலைஞன அழகைக் கண்டதும் குமமாளியிடுகிருன்; கவிதை கலையோவியமாகவே பாஷையில் மினனலிடுகிறது.

*　　　　*　　　　*

இயற்கை உலகிலே, ஒளிதான் வர்ணப்படங்களைத் தீட்டிக்காட்டுகிறது. சூரியோதயமும், அஸ்தமனமும, சந்திரோதயமும, மழை மின்னலும், வெளியே உயிரோவியங்களை அலங்கரித்துக் காட்டுகின்றன. ஒரு தினத்தில், எந்தச் சிறு பகுதியும் இயற்கையின் அழகுக் கோயிலாகவே அமைந்துவிடுகிறது. கலைக்கண்ணேடு பார்க்குமபோது உலகமே ஒரு கலைக்கோவில்: இயற்கையே நமது அன்பு நிறைந்த தாய்; பல ஜீவராசிகளின கூககுரல்கள் எல்லாம, கவிதைக் கோயிலேயே அலங்கரிக்க முன் வந்து முகமலர்ச்சியோடு முறுவல் பூத்து நிற்கின்றன; மேகஜாலங்கள் - எல்லாம் வருண அதிசயக் கோலஙகளாகக காட்சியளிக்குமபோது, கவிஞனே, கலைஞனே பார்த்து இன்புருமல் இருக்க முடியுமா? முடியவே முடியாதல்லவா?

*　　　　*　　　　*

மனித வாழ்க்கையிலே, ஒவ்வொரு நிமிஷமும் அழகு மண்டிய நிமிஷமே; காதலும் சோகமும், புரண்டு கர்ஜிக்குமபோது, அழகின் சிகரத்தையே நாம் கண்டு விடுகிருேமல்லவா? இது ஒரு பேருண்மைதான்.

*　　　　*　　　　*

அழகை அனுபவிக்கும் ஆற்றல் சிலருக்கே உண்டு: ஆன்ம ஒளிவீச்சிலே உண்மைகள் உதயமாகின்றன: உண்மைகள், கண்டு அனுபவித்த உண்மைகள்—அழகுச் சுரங்கத்துக்கு நமமை ஆர்வத்துடன் அழைத்துச் செல்கின்றன. அழகைக்

காணும் ஆவலோடு, கலைஞன் கதறிக்கொண்டே செல்லுகிறான்; கவிஞன், தன் உள்ளத்தின் எதிரொலியை அழகுக் கோவில் பிரதிபலித்து நிற்பதைக் கண்டு கும்மாளியிடுகிறான். அழகே ஓர் ஆனந்த மலர்.

*　　*　　*

தூய உள்ளங்களிலேதான், அழகு வந்து குடியிருக்க முடியும்; களங்கம் நிறைந்த உள்ளங்களிலே கறபனைத்திறனோ அழகோ நிலைத்து நிற்க முடியாது.

*　　*　　*

துன்பச் சிகரத்திலே, ஒளி ஸ்தம்பத்தின் உயரத்திலே, உண்மைகள் ஊக்கமாக விளையாடுவதை ஞானி ஒருவனே உணர்கிறான்; உண்மையை உணர்ந்த ஞானியும், துனபமேடையிலே நெஞ்சுரத்துடன எழுந்து நிற்கும தியாகியும, தாங்கள் கண்ட அகண்ட உண்மைகளை உறுதிசெய்கிறார்கள்; இத்தகைய சந்தர்ப்பஙகளிலே, உணமைகள் அழகுக் கூட்டங்களாகத் தோழமை பூண்டு நிற்கின்றன.

*　　*　　*

அழகு உணர்ச்சியே, கலை உலகைச் சிருஷ்டி செய்ய முன்வருகிறது: கலையினின்று உதயமாகும் ஒவ்வொரு சித்திரமும், சிறு அளவிலே உலக விந்தையையே எடுத்துக் காட்டுகிறது. பேருண்மைகள் படங்களிலே அமைந்து கிடக்கினறன; அழகையே காட்டி நிறகும பேருண்மைகள் அல்லவா?

*　　*　　*

இயற்கையே, பல்வேறுபட்ட தோற்றக்கடல், அழகுக் கூட்டம, பரிபூரணத்தின் விரிவான காட்சிக் களஞ்சியம்தான; கவிஞன, கலைஞன், சிற்பி, பாடகன் எல்லோருமே அழகுக் கடலில் குளித்து, ஆழ்ந்த உண்மைகளைக் கண்டெடுத்து, புதிய புதிய கலைக்களஞ்சியஙகளையே சிருஷ்டிக்க முன்வருகிறார்



UNIVERSITY EXTENSION L
18 DEC 1957

கள்; அழகை வருணிப்பதைவிட, அழகை அனுபவிப்பதே ஆனந்தம. அழகுக் கண்கொண்டு எதையும் அனுபவிக்கும் ஆற்றல் சிலருக்கே உண்டு. கண்டு. அனுபவித்துச் சிருஷ்டிப்பதே கலை: காப்பியடிப்பது கலையே அல்ல. இயற்கையின் இனிமையை அந்தரங்கமாகப் பருகி அதைக் கவிதைக் கோயிலாக மாற்றவேண்டும். இதுவே கலை, இதுவே கவிதை அழகு ரசனை; ஆழ்ந்து கவனித்தால், அழகும, உண்மையும், நன்மையும், அந்தரங்க அமைப்பிலே ஒன்றையொன்று தழுவியே நிற்கின்றன. முரண்பாடுகளிலே கலகங்களிலே, வளர்ச்சியோ, முன்னேற்றமோ, அழகு ரசனையோ உதயமாவதே இல்லையல்லவா?

*                *                *

அழகு, ஆன்மாவின் தேவையாகவே ரசனை உலகிலே அமைந்து விடுகிறது. அழகைக் காண்பதும் அழகைப் பின்தொடர்வதும், மனித இயற்கையே. சோகச் சூறுவளியிலே, உண்மைகள் உள்ளத் தடாகத்திலே உறுதியாக ஒளி வீசும்போது, நாம் ஆன்மீக அழகின் சிகரத்தையே கண்டு இன்புறுகிறோமல்லவா? ஒவ்வொரு ஒளி வீசும் கண்ணீர்த் திவலையும், அழகுக் கோவிலின் ஆன்மீக அஸ்திவாரமல்லவா? இயற்கையின் மழலை மொழியும் இதைத்தானே வற்புறுத்திப் பேசுகிறது. மின்னலும் இடியும், அழகின் ஆவேசத் துளிகள் தான் அல்லவா? விண்ணிலே மின்னல் விரைவாக எழுதிச் செல்லும்போது, நாம் விதியின் விரைவான அழகையே கண்டு அதிசயிக்கின்றோம்.

*                *                *

அழகே, இயற்கையின் நாணயம், உண்மையின் அகண்டம்; ஞானக் கண்ணே அழகு ரசனையின் ஆழ்ந்த அம்சம்.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
1153
03166
UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI
Univ. Grants Commission